நமது

இதயத்திலிருந்து பிறப்பது

மனந்திரும்புதல்?
இரட்சிக்கப்படுதல்?
ஞானஸ்நானம்?
அபிஷேகம்?
மறுபிறப்பு?
உபவாசம்?
ஜெபம் செய்வது?
வேதம் வாசிப்பு?
விசுவாசம்?
ஊழியம்?
துதி செய்வது?

ஏன்..ஏன்..ஏன்..

Eve. S. செல்வின் சிரோமணி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

நமது

இதயத்திலிருந்து பிறப்பது

ஏன்..ஏன்..ஏன்..

முகவுரை

நான் பாளை தூய சவேரியார் கல்லூரியில் இறுதி ஆண்டு B.A. படிக்கும்போது, 1967ம் ஆண்டு பண்ணைவிளையில் நடைபெற்ற முதல் F.M.P.B. கிறிஸ்தவ மாணவர் முகாமில் இயேசு கிறிஸ்துவுக்கு என்னை முற்றிலுமாய் அர்ப்பணித்தேன், தேவ பணிக்கும் ஒப்புக் கொடுத்தேன். எனது உயர் கல்வியை முடித்து விட்டு பாளையங்கோட்டை தூய யோவான் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக நான்கு ஆண்டுகள் பணிபுரிந்தேன். அதன் பின்பு 10 ஆண்டுகள் இந்திய மிஷனெரி சங்கத்தில் உதவி காரியதரிசியாகப் பணியாற்றினேன். பின் இரண்டு ஆண்டுகள் விஷ்வ வாணியில் Evangelist- at-large ஆகப் பணி புரிந்து விட்டு தனித்து ஊழியம் செய்ய ஆரம்பித்தேன். தேவன் வெகுவாக இந்தியாவின் பிற மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் என்னைப் பயன்படுத்தத் தொடங்கினார். 8 செய்தி கேசட்டுகளை வெளியிடக் கிருபை செய்தார். 7 ஆவிக்குரிய புத்தகங்களை வெளியிட நம் தேவன் கிருபை செய்தார். இப்போது 6வது புத்தகமாக 'ஏன்' என்ற புத்தகத்தை வெளியிட தேவன் கிருபை செய்தார். இதற்கு என் மனைவி செந்தூர்க்கனி செல்வின் பேருதவி செய்தார்கள். அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். பல புத்தகங்கள் வெளியிட எனக்கு மிகுந்த விருப்பம் உண்டு. பொருளாதார வசதி இல்லாத காரணத்தால் வெளியிட முடியவில்லை. இப்பொழுது 4வது முறையாக இந்த புத்தகத்தை வெளியிடுவதற்கு உதவிய Er.தேவகுமார் M.Tech. அவர்களுக்கும் என்னை ஆவிக்குரிய வழியில் முன்னேற உதவியாக இருந்த uncle திரு G.J.எட்வின், திருமதி செலினா எட்வின் அவர்களுக்கும் என் அன்புதம்பி Er.சுந்தர், M.Tech. அன்புத் தங்கை திருமதி விஜி கென்னடி M.B.A அவர்களுக்கும், குடும்பத்தினருக்கும் என் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுகிறேன். இப்புத்தகத்தை சிறந்த முறையில் வெளியிடுவதற்கு உதவி செய்து முகவுரையும் எழுதிக் கொடுத்த பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரி முன்னாள் ஆங்கிலத் துறைத் தலைவரும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முன்னாள் தேர்வு ஆணையரும் இப்போதைய நான்குநேரி APA கல்லூரி முதல்வர் R.S அருளானந்தம் அவர்களுக்கும் என் இதயத்தின் ஆழத்திலிருந்து நன்றி கூறுகிறேன். இப்புத்தகத்தை படிப்பவர்கள் ஆவிக்குரிய வாழ்க்கையில் படிப்படியாய் முன்னேறிச் செல்ல உதவியாக இருக்கும் என்று விசுவாசிக்கிறேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

S.செல்வின் சிரோமணி

முன்னுரை

சகோதரர் செல்வின் சிரோமணி எம்.ஏ.எம்.எட்., படித்து, பாளையங்கோட்டை தூய யோவான் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். எனினும் மீட்பர் இயேசுவின் அழைப்புக்குக் கீழ்படிந்து நம் நாட்டின் பகுதிகளிலும் வெளிநாடுளிலும் கடவுளுடைய செய்தியைச் சொல்வதற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர்.

சகோதரர் எழுதிய **ஏன்** எனும் இந்த நூல் மிகவும் பயன்தரக்கூடிய ஒரு நல்ல நூல். ஒரு மனிதன் பாவத்தை விட்டு விலகுதல், மனம் திரும்புதல், மறுபடியும் பிறப்பது, இரட்சிப்பு அடைவது, தூய ஆவியானவரின் அபிஷேகம் பெறுவது, ஜெபித்து வேதம் வாசித்து உபவாசம் செய்து வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வை வாழ்வது போன்ற இன்றியமையாத காரியங்கள் இந்த நூலில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. எளிய தலைப்புகளுடன், அழகிய சிறு படங்களுடன் வேதத்தின் அடிப்படையில் வாழ்க்கை அனுபவங்களுடன் நடைமுறையில் ஏற்று பயன்படும் விதத்தில் இது எழுதப்பட்டுள்ளது.

நல்லதொரு கடையை நாம் கண்டுபிடித்தால், பொருள் வாங்குவதற்கு ஏற்ற இடம் என்று அதைக் குறித்து நண்பர்களிடம் கூறுகிறோம். மருத்துவர் ஒருவரிடம் சென்று நாம் குணமடைந்தால், பிற நோயாளிகளை அவரிடம் அழைத்துச் செல்கிறோம். நிலையற்ற உடலுக்காக இதையெல்லாம் செய்கின்ற நாம் இந்த நூலை வாசித்து, வாழ்க்கையின் அனுபவமாக 'மாற்றிப் பயன்பெற வேண்டும். மேலும், நம் ஆன்மா அழிவிலிருந்து விலகி, நித்திய வாழ்வைப் பெறுவதற்கு வழிகாட்டக் கூடிய இந்நூலைப் பற்றி பிறருக்கு அறிவிக்க வேண்டும். இந்த நூலை வாங்கி நண்பருக்கும் பிறருக்கும் கொடுக்கலாம். கிறிஸ்மஸ் பரிசுகள் மற்றும் வேதாகத் தேர்வுக்குப் பரிசுகள் வழங்கும்போது வீடுகள், பள்ளிகள், ஆலயங்களில் பொருட்களைக் கொடுப்பதற்குப் பதிலாக இதுபோன்ற பயனுள்ள புத்தகங்களைப் பிள்ளைகளுக்கும் பெரியோருக்கும் கூடக் கொடுப்பது நல்லது. இவ்வாறு, சகோதரர் தனது பிற நற்செய்திப் பணிகள் வாயிலாகவும் விதைத்துள்ள விதைகள் ஆண்டவருக்கென்று நிறைந்த அறுவடையைப் பெறுவதற்கு இறைவன் இயேசு அருள்தர வேண்டுமென்று விரும்புகிறேன்.

பாளையங்கோட்டை
30.03.2003

நல்வாழ்த்துக்களுடன்,
R.S.அருளானந்தம

Mr. G. Joseph Edwin, *B.A.B.L.*

(Rgd.D.R.O)

(இப்புத்தகம் இவர்களுடைய ஞாபகமாக வெளியிடப்பட்டுள்ளது.

இவர்களது முன்மாதிரியான சிறந்த வாழ்க்கைக்காக

தேவனை ஸ்தோத்தரிப்போம்.)

பொருளடக்கம்

1. பாவம் என்றால் என்ன? – 5
2. ஏன் மனந்திரும்பவேண்டும்? – 16
3. ஏன் இரட்சிக்கப்பட வேண்டும்? – 19
4. ஏன் ஞானஸ்நானம் பெறவேண்டும்? – 22
5. ஏன் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறவேண்டும்? – 25
6. ஏன் மறுபடியும் பிறக்கவேண்டும்? – 29
7. ஏன் உபவாசிக்கவேண்டும்? – 33
8. ஏன் ஜெபிக்கவேண்டும்? – 38
9. ஏன் வேதம் வாசிக்கவேண்டும்? – 42
10. ஏன் விசுவாசிக்கவேண்டும்? – 46
11. ஏன் ஊழியம் செய்யவேண்டும்? – 55
12. ஏன் துதி செலுத்த வேண்டும்? – 66
13. என் வாழ்க்கை வரலாறு – 77

பாவம் 1

எனக்கு மிகவும் அன்பானவர்களே, இன்று உலகில் வாழும் எல்லா மக்களும் வாழ்க்கை என்பது வாழ்வதற்கே, இவ்வுலக வாழ்க்கையில் நாம் எல்லா இன்பங்களையும் அனுபவிக்க வேண்டும், மரணத்திற்குபின் என்ன நடக்கும் என்பது யாருக்கு தெரியும். அதன்பின் இந்த உலகத்தில் எதையும் மனிதன் அனுபவிக்க முடியாது என்று எண்ணி மனம் போல வாழ்கின்றனர். எந்த எந்த வகையில் எல்லாம் இன்பங்களை அனுபவிக்க முடியுமோ அத்தனையும் அனுபவிக்கின்றனர். அனுபவி என்றும் கூறுகின்றனர்.

ஆனால் மரணத்திற்குபின் ஒரு வாழ்வு உண்டு. அது ஒன்று இறைவனோடு அல்லது இறைவன் இல்லாத நகரம் அல்லது பாதாளம் என்று கிறிஸ்தவ மதம், இந்துமதம், இஸ்லாமிய மதம், மற்ற எல்லா மதங்களும் ஒப்புக் கொண்ட ஓர் உண்மை.

இறைவனுக்குப் பிரியமாக நடந்து கொண்டால் இறைவனோடு பரலோகத்தில் அதாவது சொர்க்கத்தில் அவரோடு மகிழ்ச்சியாக வாழ்வோம். இறைவன் இல்லாமல் பாவத்தில், துன்மார்க்கத்தில், அக்கிரமத்தில், வாழ்ந்தால் இறைவன் இல்லாத நரகம் அல்லது காரிருள், வேதனை நிறைந்த இடம் என்பது எல்லா மதத்தவரும் ஒப்புக் கொண்ட ஓர் உண்மை.

மனிதனையும் தெய்வத்தையும் பிரிப்பது மனிதனுடைய பாவம் அல்லது இறைவன் இருக்கும் பரலோகத்திற்கு, அதாவது சொர்க்கத்திற்கு மனிதனை செல்லவிடாமல் தடுப்பது அல்லது பிரிப்பது மனிதன் செய்யும் தவறு. அதாவது பாவம். இதுவும் எல்லா மதத்தினரும் ஒப்புக் கொண்ட ஓர் உண்மை.

இன்று வாழும் அறிவு படைத்த மனிதன் தன் அறிவிற்கு ஏற்றாற்போல் 'பாவத்துக்கு விளக்கம் கொடுக்கிறான்'. பொதுவாக பாவம் என்றால் என்ன என்பதையும், அதன் தன்மை என்ன, பாவத்தினால் வரும் விளைவு என்ன என்பதையும், பாவத்தின் இறுதி முடிவு என்ன என்பதையும் ஒவ்வொரு மனிதனும் புரிந்து கொள்ள வேண்டும். அதைக் குறித்து சிந்திக்க வேண்டும்.

1. **நியாயப் பிரமாணத்தை மீறுவது** பாவம் இறைவன் கொடுத்த கட்டளை, சான்றோர் வகுத்த நீதி முறைகள், சட்டதிட்டங்களை

மீறி நடப்பது பாவம். இறைவனை முழு இருதயத்தோடு நேசி, களவு செய்யாதே, பொய் சொல்லாதே, பிறர் பொருளை இச்சிக்காதே, கொலை செய்யாதே என்று நியாயப்பிரமாணம் கூறுகிறது. இப்படி செய்யகூடாது என்ற கூறிய கட்டளையை மீறிச் செய்வது பாவம்.

2. அநீதி எல்லாம் பாவம் நீதிக்கு புறம்பானவைகளைச செய்வது பாவம். மற்றவர்களுக்கு நன்மை செய்வது நீதி. ஆனால் நன்மைக்குப் பதில் தீமை செய்வது பாவம். மற்றவர்களுக்கு விரோதமாகப் பொய்சாட்சி சொல்லுதல், நன்மை செய்தவருக்குத் தீமை செய்வது அநீதி; இது பாவம்.

3. துன்மார்க்கர் போடும் வெளிச்சம் பாவம் மாய் மாலமான வாழ்வு இரட்டைவாழ்க்கை பாவம். கெட்டதைச் செய்து கொண்டு உலகத்தின் பார்வையில் நல்லவர்களைப் போல நடிப்பது பாவம். அந்தரங்க வாழ்க்கை அசுத்தம், அருவருப்பு நிறைந்தது: ஆனால் மற்றவர்கள் முன் பக்திமானைப் போல நடிப்பது: ஒருவன் முன்னால் அவனைப் புகழ்ந்து பேசிவிட்டு, அவன் இல்லாத இடத்தில் அவனை இகழ்ந்து பேசும் இரட்டை வாழ்வு பாவம்.

4. விசுவாசத்தினால் வராதது பாவம் ஒரு பொருளோ பணமோ தேவைப்பட்டால், அதை இறைவனிடம் வேண்டி, அதன்பின் மற்றவர்களிடம் அன்போடும் தாழ்மையோடும் கேட்டுப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் மற்றவர்களை மிரட்டி, பொய்சொல்லி, ஏமாற்றி வாங்குவது பாவம். இறைவனை நம்பாமல், சுய பெலத்தினால், தவறான முறையில் அடைவது பாவம்.

5. நன்மை என்று அறிந்திருந்தும் அதைச் செய்யாமலிருந்தால் பாவம் ஒருவன் ரோட்டில் அடிபட்டு சாகும் நிலையில் கிடக்கிறான். அந்தப் பாதையாக போகும் நாம் அவனைப் பார்க்கிறோம். ஒருவேளை அவனை மருத்துவ மனையில் சேர்த்தால் அவன் பிழைத்துக் கொள்ளலாம். இது நன்மை, நல்லது. அதற்குப்பதில் அவன் நமக்கு வேண்டாதவன், நம்மேல் பழி வந்து விடக் கூடாது. நாம் நல்லதும் செய்யவேண்டாம் கெட்டதும் செய்ய வேண்டாம், வேறு யாரும் கவனித்துக் கொள்ளுவார்கள் என்று போட்டு விட்டு போனால் 'அவன் மரித்து விடலாம். இது பாவம் நன்மை செய்ய வாய்ப்பு இருந்தும் நாம் நன்மை செய்யவில்லை: இது பாவம்.

பொதுவாக மனிதன் பாவம் என்றால் கொலை, கொள்ளை, விபச்சாரம், குடி, இப்படிப்பட்டவைகளை மட்டும் பாவம் என்று நினைக்கிறான், ஆனால் வேதத்தின் அடிப்படையில் பார்க்கும்போது, பாவத்தைப் பல பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

மனிதனைத் தீட்டுப்படுத்தும் பாவங்கள்

பொல்லாத சிந்தனைகளும் விபச்சாரம் வேசித்தனம் கொலை பாதகம் களவு பொருளாசை மதிகேடு மனிதனுடைய இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும் இவைகள் யாவும் மனிதனைத் தீட்டுப்படுத்துகிறது என்று பரிசுத்த மத்தேயு 15:18, 19ம் வசனங்கள் கூறுகின்றன.

அருவருப்பான பாவங்கள்

மேட்டிமையான கண், பொய்நாவு, குற்றமற்றவனுடைய இரத்தம் சிந்துதல், துர்ஆலோசனை, தீங்கு செய்ய விரைந்தோடும் கால், சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல் போன்றவை தேவனுக்கு அருவருப்பான பாவம் என்று நீதிமொழி 6:17, 19 கூறுகிறது.

மரணத்திற்குரிய பாவம்

சகலவித அநியாயம், வேசித்தனம், துரோகம், பொருளாசை, பொறாமை, கொலை, வாக்குவாதம், வஞ்சகம், வன்மம், புறங்கூறுதல், அவதூறு பண்ணுதல், அகந்தை வீம்பு, பெற்றோருக்குக் கீழ்ப்படியாமை, உணர்வில்லாமை, உடன்படிக்கைகளை மீறுவது, சுபாவ அன்பில்லாமை, இணங்காமை, இரக்கமின்மை இப்படிப் பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவன் நியமித்த மரணத்திற்கு தகுதி உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று ரோமர் 1:29-32 கூறுகிறது.

விட்டு விலக வேண்டிய பாவம்

தற்பிரியர் பணப்பிரியர் வீம்புக்காரர் அகந்தையுள்ளவர்கள் தூஷிக்கிறவர்கள் தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்கள் நன்றியறியாதவர்கள் பரிசுத்தமில்லாதவர்கள் சுபாவ அன்பில்லாதவர்கள் இணங்காதவர்கள் இச்சையடக்கம் இல்லாதவர்கள் கொடுமையுள்ளவர்கள் நல்லோரைப் பகைக்கிறவர்கள் துரோகிகள் துணிகரமுள்ளவர்கள் இருமாப்புள்ளவர்கள் மற்றும் சுகபோகப் பிரியர்கள் பாவிகள் ஆவார்கள். தேவ பக்தியின் வேஷத்தைத்தரித்து அதன் பலனை மறுதலிக்கிறவர்களை விட்டு விலக வேண்டும் என்று II தீமோத் 3:2-5 கூறுகிறது.

தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதற்கு தடையான பாவங்கள்.

விபச்சாரம் வேசித்தனம் அசுத்தம் காம விகாரம் விக்கிரக ஆராதனை பில்லி சூனியம் பகைகள் விரோதங்கள் வைராக்கியங்கள் கோபங்கள் சண்டைகள் பிரிவினைகள் மார்க்க பேதகங்கள் பொறாமைகள் கொலைகள் வெறிகள் களியாட்டுகள் இப்படிப்பட்ட

...செய்பவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை என்று கலா 5:19-21 கூறுகிறது.

தேவ கோபாக்கினைக்குரிய பாவம்

விபச்சாரம் அசுத்தம் மோகம் துர்இச்சை விக்கிரக ஆராதனையாகிய பொருளாசை கோபம் மூர்க்கம் பொறாமை தூஷணம் வம்பு வார்த்தை ... இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மீது தேவ கோபாக்கினை வரும் என்று கொலோ 3:5,6,8 கூறுகிறது.

பாவத்தின் தன்மை

Sin will appear Desirable (பாவம் விரும்பக் கூடியதாகத் தோன்றும்)

ஏவாளின் கண்களுக்கு விலக்கப்பட்ட விருட்சத்தின் கனி பார்க்க அழகாகத்தான் இருந்தது. அந்தக் கனியே அவள் பாவம் செய்யவும் தேவ மகிமையை இழக்கவும் பல இன்னல்களை அடையவும் நித்தியத்தை இழக்கவும் காரணமாக இருந்தது. சோதோம் கொமோரா லோத்தின் கண்களுக்குப் பசுமையாகவும் அழகாகவும் தான் தோன்றியது. ஆனால் அவன் தன்னுடைய மருமகன் இருவரையும் மனைவியையும் இழக்கவும் இரண்டு பிள்ளைகளும் விபச்சாரத்தில் விழவும் காரணமாயிற்று. அம்னோனின் கண்களுக்கு சகோதரி தாமார் அழகாகத் தான் தோன்றினாள். ஆனால் அவன் இறுதியில் கொலை செய்யப்பட்டான். உன் கண்களுக்கும் பாவம் அழகாகக் காட்சியளிக்கும். முடிவில் உனக்கு அது பயங்கர அழிவை ஏற்படுத்தும்.

The sin is reachable (சுலபமாக அடைய முடியும்)

நீ விரும்பும் பாவம் அடையமுடிக்கும் பாவ இன்பம் உனக்குக் கை கூடத்தான் செய்யும். ஆதாம் ஏவாள் அந்த விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசிக்க மரத்தின் மீது ஏறவில்லை, ஒரு கம்பை வைத்துப் பறிக்கவில்லை. சர்ப்பம் அவள் அருகில் கொண்டுவந்து கொடு பறிக்கச் செய்தது பாவ இன்பம் உன்னைத் தேடிவரும். யோசேப்பு இருந்த போத்திபாரின் அரண்மனையில் போத்திபாரின் மனைவி யோசேப்பைத் தேடித்தான் வந்தாள். நித்தம், நித்தம் பாவம் செய்ய வரும்படி சஞ்சலப்படுத்தினாள். அவன் தேடிச் செல்லவில்லை. பாவம் அவனைத் தேடித்தான் வந்தது. பாவம் உன்னைத் தேடித்தான் வரலாம் நீ சுலபமாக அடையவும் அனுபவிக்கவும் முடியலாம். ஆகவே இச்சூழ்நிலைகளில் கடவுளுடைய உதவியோடு பாவம் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

The sin is Enjoyable (இன்பத்தைக் கொடுக்கும்)

ஏவாளுக்குப் பழத்தை புசிப்பது இன்பமாகத்தான் இருந்தது. தாவீதுக்கு பத்சேபாளுடன் செய்த விபச்சார பாவம் இன்பத்தைத் தான் கொடுத்தது. அம்னோனுக்குக் கூட சகோதரியை பலவந்தம் பண்ணி பாவம் செய்த போது ஒரு அற்ப சந்தோஷம் இருக்கத்தான் செய்தது. ஆகாபுக்கு கூட நாபோத்தைக் கொலை செய்து அவன் திராட்சத்தோட்டத்தை அபகரித்தபோது மகிழ்ச்சியும் லாபமும் கிடைக்கத்தான் செய்தது. பாவம் செய்வது தற்காலிகமாக இன்பத்தைத் தரக்கூடும். ஆகவே அதைக் கவனமாகத் தவிர்க்கவேண்டும்.

The End will be terrible (முடிவோ பயங்கரம்)

ஆதாம் கீழ்படியாத பாவத்தினால் ஆசீர்வாதமாயிருக்க வேண்டிய உலகம் சாபத்துக்குள்ளானது. அவனும் இன்னல்களை அனுபவித்ததுடன் நித்தியத்தை இழந்தான். அம்னோன் சகோதரி மீது மோகம் கொண்டான். பாவம் செய்வதற்கு முன்பு அவளை எவ்வளவு விரும்பினானோ பாவம் செய்த பின் அவ்வளவுக்கு அதிகமாய் அவளை வெறுத்தான் இதுதான் பாவத்தின் தன்மை. முடிவிலே அவன் விருந்து சாலையில் பரிதாபமாகக் கொலை செய்யப்பட்டான். யேசபேலின் ஆலோசனை ஆகாபுக்கு நன்றாகத்தான் தோன்றியது. திராட்சத் தோட்டத்தை அபகரித்தான்: அது அவனுக்கு லாபத்தைக் கொடுத்தது. முடிவில் ஆகாப், யேசபேல் ஆகியோரின் இரத்தத்தை நாய்கள் நக்கிற்று. பாவத்தின் இறுதி விளைவு அகோரம் தான்.

பாவத்தின் சம்பளம் மரணம்

அண்டார்டிக் பிரதேசத்தில் வேட்டைக்காரர்கள் உரோமம் அடர்ந்த ஒநாய்களைப் பிடிக்க இரு புறமும் கூர்மையான ஒரு பெரிய வாள் செய்து அந்த ஓநாய்க்கு விருப்பமான சீல் மிருகத்தின் இரத்தத்தைப் பூசி ஓநாய்கள் இரவில் இரை தேடிவரும் பகுதியில் நிற்க வைத்து விடுவார்களாம். நடு இரவில் ஓநாய் அந்த இரத்தவாடையை மோப்பம் பிடித்து அதைத் தேடிவந்து ஆவலோடு அந்த இரத்தத்தைத் தன் நாவால் நக்குமாம். அந்த வாளின் கூர்மையான பகுதி அதன் நாக்கை வெட்டி இரத்தம் கசியுமாம். தனது இரத்தம் என்று தெரியாமல் தொடர்ந்து அந்தவாளை நக்கி, நக்கி தன் சரீரத்திலிருக்கிற எல்லா இரத்தத்தையும் இழந்தபின் சோர்ந்து மயங்கி விழுந்து விடுமாம். வேட்டைக்காரர்கள் ஒடிவந்து அதைக் குத்திக் கொன்று அதன் தோலை உரித்துக் கொண்டுபோய் விடுவார்களாம்.

இது போலவே இன்றைக்கு மனிதன் பாவத்தில் சிக்கி இன்பம் இன்பம் என்று அலைந்து கடைசியில் அந்த இன்பத்தின் எல்லையை

எட்டிப் பிடிக்க முடியாதபடி பாவத்தில் சாகிறான். நித்திய வாழ்வையும் இழந்து போகிறான்.

பாவம் இரண்டு வகைப்படும்

வேதத்தின் அடிப்படையில் பார்க்கும் போது, இளைய மகன் வீட்டை விட்டு, தகப்பனைவிட்டுப் பிரிந்து சென்று பாவத்தில் மனம் போல வாழ்ந்து, எல்லாவற்றையும் இழந்து, பின்பு மனந்திரும்பி தந்தையைப் தேடி வந்து, தந்தையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு அழும் போது, நான் உமக்கு விரோதமாகப் பாவம் செய்தேன், பரத்துக்கு விரோதமாகவும் பாவம் செய்தேன், என்னை மன்னியுங்கள் என்று அழுது மன்னிப்புக் கேட்கிறான். உமக்கு விரோதமாகச் செய்த பாவங்கள், பரத்திற்கு விரோதமாக என்றால் நாம் தனிப்பட்ட முறையில் இரகசியமாகவும் சிந்தனையிலும் கண்களினாலும் சரீரத்தினாலும் செய்த பாவங்களும் ஆவிக்குரிய வாழ்க்கையில் நாம் தேவனுக்கு விரோதமாகச் செய்த பாவங்களுமாகும். ஜெபிக்காதது, வேதம் வாசிக்காதது, உபவாசம் செய்யாதது, தசமபாகம் செலுத்தாதது, ஊழியம் செய்யாதது போன்றவை. மனிதனுக்கு விரோதமாகச் செய்த பாவத்தை மனிதனிடத்திலும் தேவனுக்கு விரோதமாகச் செய்த பாவத்தை தேவனிடத்திலும் அறிக்கை செய்து ஒப்புரவாகி நல் மனம் பொருந்த வேண்டும்.

மனிதனுக்கு விரோதமாகச் செய்த பாவம்

நாம் எப்பொழுதாவது, எங்காவது திருடியிருந்தால் திரும்பக் கொடுத்து, மன்னிப்பு கேட்டே ஆக வேண்டும். ஏமாற்றியிருந்தால், கள்ளக்கணக்கு எழுதி சம்பாதித்திருந்தால், யாரையாவது வஞ்சித்து எடுத்திருந்தால் அதைத் திரும்பக் கொடுத்து, மன்னிப்புக் கேட்டு, ஒப்புரவாகி நல்மனம் பொருந்தி விட வேண்டும். கொடுக்க வசதியில்லாவிட்டால், எனக்கு தற்போது கொடுக்க வசதியில்லை, என் தேவன் வசதியைத் தரும் போது திரும்பக் கொடுக்கிறேன். மன்னித்துக் கொள் என்று மன்னிப்புக் கேள். அவர்கள் உன்னை மன்னித்தாலும் சரி, மன்னிக்காவிட்டாலும் சரி என் தேவன் உன்னை மன்னிப்பார். யாருக்காவது தீமை, தீவினை செய்தால் நிறுத்திவிடு. யாரையாவது புறங்கூறியிருந்தால் நிறுத்திவிடு, திருந்து, மன்னிப்புக்கேள், தேவன் உன்னை மன்னிப்பார். பிறர் உனக்குத் தீமை செய்தாலும் நீ அவர்களை மன்னித்து அதை மறந்து விடு. கர்த்தர் உன்னை மன்னிப்பார், உன் பாவங்களை மறப்பார்.

தேவனுக்கு விரோதமாகச் செய்த பாவங்கள்

நீ ஒரு கிறிஸ்தவனாக இருக்கலாம். வேதம் வாசிப்பது தேவன் நம்மோடு பேசுவதாகும். ஜெபிப்பது நாம் தேவனோடு பேசுவதாகும்

பத்தில் ஒருபாகம் கட்டாயம் தேவனுக்குக் காணிக்கைக் கொடுக்க வேண்டும். அதில் தேவனை வஞ்சிக்கக் கூடாது. இயேசுகிறிஸ்து 40 நாள் உபவாசித்தார். உபவாச நாளை நியமியுங்கள் என்று வேதம் சொல்லுகிறது. நாம் உபவாசிக்காமல் இருப்பது பாவம். இயேசுவின் கடைசி கட்டளை உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை சொல் என்பது சுவிசேஷ ஊழியம் செய்யாவிட்டால் அது பாவம். இவைகள் தவிர நாம் இரகசியமாகச் செய்கிற பாவங்களும் உண்டு. வேதம் சொல்கிறது, பிறர் பொருளையாவது பிறனுடைய மனைவியையாவது இச்சியாதிருப்பாயாக. ஒரு பெண்ணையோ ஒரு மனிதனையோ இச்சையோடு பார்க்கிற எவனும் எவளும் தன் இருதயத்தில் விபச்சாரம் செய்தாயிற்று. இவ்வாறு, நம் பார்வை எத்தனை அசுத்தமானது, அருவருப்பானது கெட்டநோக்கம் கொண்டது. அகந்தை ஆணவமான பார்வைகள் இதை மற்ற மனிதர்கள் காண முடியாவிட்டாலும் தேவன் அறிவார்.

நம் சிந்தனை எத்தனை அருவருப்பானது. வேதம் சொல்கிறது சிந்தையிலே வீணராகாதிருங்கள். "கிறிஸ்துவின் சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. இன்று நாம் சிந்தனையிலே பல அசுத்தமான, அருவருப்பான காரியங்களை நினைக்கிறோம். அடிப்பது போல, கொலை செய்வது போல் எல்லாம் நினைவில் கொள்கிறோம். இப்படிப்பட்ட அசுத்த தீய சிந்தனைகளை மற்றவர்கள் காண முடியாது: ஆனால் தேவன் காண்கிறார்.

நாம் தனிமையில், அந்தரங்க வாழ்கையில், இரகசியமாக எத்தனை பாவங்களைச் செய்கிறோம். ஒருவன் அறைக்குள் செய்யும் பாவம், இருட்டில் செய்யும் பாவம், வெளி ஊர் சென்று செய்யும் பாவங்கள் யாருக்கும் தெரியாது, யாரும் காணமுடியாது என்று நினைத்து அநேக அசுத்தமான அருவருப்பான பாவங்களைச் செய்து உன் சரீரத்தை அழித்து உன்னையே கெடுத்துக் கொள்ளுகிறாய். இந்த உன் இரகசிய பாவங்களைக் கூட என் தேவன் காண்கிறார்.

இப்படியாக நீ மற்ற மனிதர்களுக்கு விரோதமாகச் செய்த பாவங்களை அவர்களிடத்திலும், பார்வையிலும் சிந்தை இரகசியமாக தேவனுக்கு விரோதமாக ஆவிக்குரிய வாழ்க்கையில் செய்த, பாவங்களை தேவனிடத்திலும் அறிக்கை செய்து மன்னிப்பும் கேட்டு விட்டு விடு, தேவனுடைய இரக்கத்தையும் அன்பையும் ஆசீர்வாதத்தையும் பெறுவாய்.

பாவங்களை மறைக்க முடியாது

வேதத்தை ஆராய்ந்து பார்க்கும்போது சவுல் ராஜா சாமுவேல் தீர்க்கத்தரிசியிடம் அமலேக்கிய யுத்தத்தில் எல்லாவற்றையும் அழித்து

விட்டேன் என்று பொய் சொன்னான். சொல்லி முடித்தவுடனே பாளையத்திலிருந்து ஆடு மாடுகள் கத்தியது. பாவம் கூக்குரலிட்டது. என்ன சத்தம் என்றான் சாமுவேல். தேவனுக்குப் பலியிட என்று பொய் சொல்லுகிறான் சவுல். அவன் ஈட்டியைநட்டு அதிலே விழுந்து செத்தான். பாவத்தை மறைக்க முடியாது.

எரிகோ யுத்தம் முடிந்ததும் ஆகான் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்படியாமல் பொற்பாளங்களையும் வெள்ளிப் பாளங்களையும் பாபிலோன் தேசத்து சால்வையையும் திருடிக் கொண்டு வந்து பாளையத்தில் ஒளித்து வைத்திருந்தான். இஸ்ரவேலர் ஆயி பட்டணத்தாரிடம் தோல்வியுற்றனர். தோல்விக்குக் காரணம் கண்டு பிடிக்க சீட்டு போடப்பட்டபோது, ஆகான் பெயருக்கே சீட்டு விழுந்தது. அவனைக் கல்லெறிந்து கொலை செய்தார்கள். தப்பமுடியவில்லை.

கேயாசி நாகமானிடமிருந்து எலிசாவுக்குத் தெரியாமல் லஞ்சம் வாங்கிக் கொண்டுவந்து தன் வீட்டில் ஒளித்து வைத்திருந்தான். எலிசாவுக்கு தேவன் வெளிப்படுத்தினார். கேயாசியிடம் கேட்டபோது எங்கும் போகவில்லை என்று பொய் சொல்கிறான். நாகமானைப்பிடித்த குஷ்டம் உன்னையும் உன் குடும்பத்தையும் பிடிக்கட்டும் என்றான் எலிசா. குஷ்டம் அவனையும் அவன் குடும்பத்தையும் பிடித்துக் கொண்டது.

எனக்கு அன்பானவர்களே, நீங்கள் செய்யும் எந்தப் பாவத்தையும் நீங்கள் மறைக்கவே முடியாது. அந்தப் பாவம் வெளிப்பட்டே தீரும். அதன் தண்டனையை இம்மையிலும் மறுமையிலும் அனுபவித்தே தீர வேண்டும். எனவே உன் பாவத்தை மறைக்காமல் அறிக்கை செய்து விட்டு விடு.

அறிக்கை செய்த பாவத்தை விட்டு விட வேண்டும்

பாவங்களை நாம் அறிக்கை செய்வது சுலபம். அதை விட்டு விடுவது அல்லது மீண்டும் செய்யாமல் இருப்பது மனிதனுக்கு மிக கடினம். இயேசு கிறிஸ்து ஒரு நாள் ஒரு திமிர்வாதக்காரனை பார்த்து, "உன் பாவம் மன்னிக்கப்பட்டது, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட" என்றார். உடனே அவன் சுகம் பெற்று நடந்து சென்றான். மீண்டும் அவனை ஒரு ஆலயத்தில் சந்திக்கும் போது அவனைப் பார்த்து சொன்னார்: "அதிக கேடானது ஒன்றும் சம்பவிக்காதபடி இனி பாவம் செய்யாதே!" மனிதன் அறிக்கை செய்த பாவத்தை திரும்ப செய்தால் அதிக கேடு வருமாம். (லோத்தின் மனைவி) சோதோம் கொமோராவில் அக்கினியும் கந்தகமும் விழும் போது நான் வாழ்ந்த சோதோம் அழிகிறதே." என்று விட்டுவிட்டு வந்த சோதோமை நினைத்தாள்: திரும்பி பார்த்தாள்: ஜீவனை இழந்து உப்பு தூணானாள். சகோதரனே, சகோதரியே

நீ அறிக்கை செய்து விட்டு விட்ட பாவத்தை திரும்ப நினைக்காதே; அதை செய்யாதே, அது உனக்கு அதிக கேடை உண்டு பண்ணும்.

இதை வாசித்து கொண்டிருக்கும் எனக்கு மிகவும் அன்பான சகோதரனே, ஒருவேளை நீ புகைப்பிடிக்கும் பழக்கம் உடையவனாக இருக்கலாம். ஒரு சிகரெட் அல்லது பீடியில் உள்ள நிக்கோடின் என்ற விஷம் ஒரு மனிதனுடைய ஆயுள் நாட்களில் 5 ¼ நிமிஷத்தை குறைக்கிறதாம். புகைப்பிடிப்பதால் வாயில், நுரையிரலில், வயிற்றில் புற்று நோய் வருகிறதாம். புகையானது இரத்ததுடன் கலந்து இரத்த நாளங்களை தடிக்க செய்து Heart attack வருகிறதாம். இது தீமை என்று அறிந்தும் இவ்வாறு செய்தால் நிச்சயம் புற்று நோய் வரதானே செய்யும். மது அருந்துவதால் ஞாபகசக்தி பாதிக்கப்படுகிறது, நரம்பு தளர்ச்சி ஏற்படுகிறது, வயிற்றில் புண் ஏற்படுகிறது, போதை மிகுதியில் காரணமில்லாத சண்டை, காயங்கள், ஒருவேளை காவல் நிலையத்திற்கு போகும் நிலை! மதுபானம் பாத்திரத்தில் பளபளப்பாய் தோன்றும் போது அதை பாராதே. அது விரியனைப்போல் உன்னை தீண்டும் என்று வேதம் கூறுகிறது. கொஞ்சம் கொஞ்சமாக அது உன் ஆயுள் நாளை உன்னை அறியாமலே குறைக்கிறது.

தேவன் வசிக்கும் ஆலயமாகிய நம் சரீரத்தை வேசித்தனத்திற்கும், விபசாரத்திற்கும், காமவிகாரத்திற்கும், அசுத்த பாவங்களுக்கும், மது மாத்திரைகளுக்கும் கொடுத்தால், நம் சரீரம் உருக்குலைந்து அழிவதானே செய்யும். நான் ஒருநாள் ஒரு கூட்டத்தில் பேசி முடித்தபோது ஒரு வாலிபன் ஜெபம் செய்ய என்னிடம் வந்தான். அவன் கை கால்கள் நடுங்கி கொண்டிருந்தன, வேர்வை வியர்த்து கொட்டியது. கண்களில் கண்ணீர் வடிய என்னை பார்த்து, நான் யார் தெரியுமா?" என்று கேட்டான். நான் எனக்கு தெரியாது" என்றேன். ஐயா, நான் என் வாலிபத்தில் இந்த சரீரத்தை விபசாரத்திற்கும், வேசிதனத்திற்கும், மதுபானத்திற்கும், மாத்திரைக்கும் கொடுத்தவன். இன்று சக்தி இழந்து, சுகத்தை இழந்து, திருமணம் ஆனப்பின் வாழ முடியாதபடி தவிக்கிறேன். எனக்காக ஜெபிக்க மாட்டீர்களா என்று கதறினான். அன்பானவர்களே, நாம் இந்த உலகத்தில் அனுபவிக்கும் பாவ இன்பங்களுக்கு தக்க வேதனையை அனுபவித்தே தீர வேண்டும்.

எந்த மனிதனும் அவன் செய்த பாவத்திலிருந்து தப்பவே முடியாது. தாவீது அரசன் உரியாவின் மனைவியோடு விபசாரம் செய்தான். அந்த இன்பத்தில் பிறந்த பிள்ளையை தேவன் அடித்தார். வியாதியில் கிடக்கும் போது தாவீது சாப்பிடாமல் கிடந்து அழுகிறான். பிள்ளையும் செத்து போனது. பாவ இன்பத்தில் வந்த பலன் அழிக்கப்பட்டது. உரியாவின் மனைவியை கெடுத்தான். அதன் விளைவு அவன் பெற்ற மகள் தாமாரை

[illegible]

[illegible] நீ ஒரு பெண் வாழ்க்கையை கெடுத்தால், உன் குடும்பத்திலும் அந்த செயல் நடந்தே தீரும். நீ ஒரு கேடு அல்லது கொலை செய்தால், உன் குடும்பத்திலும் நிச்சயம் பல கேடுகள் சம்பவித்தே தீரும். நீ பாவத்திற்கு மற்றவர்களை பயன்படுத்தினால், நீ அவர்களுக்கு அடிமையாவாய். அவர்கள் உன்னை மிரட்டியே வாழ்வார்கள். நீ தப்பமாட்டாய்.

சமீபத்தில் நடைபெற்ற இரு சம்பவங்களை உங்கள் முன் கொண்டு வந்து நிறுத்த விரும்புகிறேன். ஒரு பெரிய கிராமத்தில் செல்வந்தன் ஒருவன் இருந்தான். இவன் தனது வாலிப பிராயத்தில் தன்னுடைய எதிரி ஒருவனை நய வஞ்சகமாக தன் வாழை தோட்டத்திற்கு அழைத்து சென்று கொலை செய்து புதைத்து விட்டான். இது யாருக்கும் தெரியாது. ஆனால் அவன் வயதான காலத்தில் மரண படுக்கையில் இருக்கும்போது கதற ஆரம்பித்தான் "நான் ஒரு கொலைகாரன் நான் ஒரு கொலைகாரன். இன்னாரை கொலை செய்து இந்த இடத்தில் புதைத்தவன் நான்தான். நான் ஒரு கொலைக்காரன்." என்று கதறிக்கொண்டே அவன் ஆவி பிரிந்து இருளுக்குள் சென்றது. மரிக்கும்போது கூட அவன் பாவம் அவனை விட வில்லை.

பாவம் வாசற்படியில் படுத்திருக்கும். பாவம் தொடர்ந்து பிடிக்கும். பாவம் கல்லறையிலும் படுத்திருக்கும். பாவம் நியாயத்தீர்ப்புக்கு வழிவகுக்கும். பாவம் தேவனுடைய சந்நிதியில் சாட்சி சொல்லும். அது உன்னை விடவே விடாது.

நான் சில ஆண்டுகளுக்கு முன கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஊழியத்திற்கு சென்றிருந்தேன். ஒரு நாள் இரவு பேசி முடித்தபின் ஒரு சகோதரி தன் தகப்பனார் மரண படுக்கையில் இருப்பதாகவும், ஜெபிக்க வரும்படியும் அழைத்தார்கள். நான் சென்றேன். அறைக்குள் சென்றதும், கதவு பூட்டப்பட்டது. கட்டிலில் படுத்திருந்தவர் மெதுவாக எழுந்து என்னை பார்த்து நான் யார் தெரியுமா, நான் யார் தெரியுமா என்று கேட்டார். நான் தெரியாதையா என்றேன். நான் ஒரு கொலை காரன். நான் ஒரு கொலைகாரன். ஆத்திரத்தில் அறிவிழந்தவனாய் என் வாலிப மகளை அடித்தேன். அது படகூடாத இடத்தில் பட்டு அவள் மரித்து போனாள். உலகத்தின் கண்களை மறைக்க அவள் வாயில் விஷத்தை ஊற்றி தற்கொலை செய்து கொண்டாள் என்று கூறி புதைத்து விட்டேன். உலகத்தின் கண்களை ஏமாற்றி விட்டேன். ஆனால் என் தெய்வத்தின் கண்களை மறைக்க முடியவில்லை. அன்று படுத்த படுக்கை தான், நான் சாகபோகிறேன். இயேசு என் பாவத்தை மன்னிப்பாரா என்று கதறினார். நான் சொன்னேன், நீங்கள் திட்டமிட்டு வேணுமென்று கொலை செய்யாததால், தேவன் நிச்சயம் மன்னிப்பார். பின்பு பாவ மன்னிப்பின் ஜெபத்தை நான் சொல்ல சொல்ல அவரை சொல்ல சொன்னேன். அவர் கண்ணீரோடு பாவ அறிக்கை செய்தார். அவருடைய முகம் பிரகாசமாக மாறியது. நான் ஜெபித்து விட்டு வந்து விட்டேன். சில நாட்கள் கழித்து அந்த மகள் என் அப்பா சாகும் போது இயேசு என் பாவத்தை மன்னித்து விட்டார். நான் இயேசுவிடம் போகிறேன் என்று கூறிகொண்டே மகிழ்ச்சியோடே இந்த உலகத்தை விட்டு கடந்து சென்றார் என்று எழுதியிருந்தாள்.

எனக்கு அன்பானவர்களே, தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான். என்று வேதம் கூறுகிறது. தெய்வத்தின் பார்வையிலும், மனச்சாட்சியின் படியும் நாம் பாவிகள் என்றும் பிறப்பிலும் ஜென்ப பாவத்தோடு பிறந்திருக்கிறோம் என்று வேதம் கூறுகிறது. இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் அநியாயங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் என்று வேதம் சொல்கிறது. பரிசுத்த ஆவி எங்கேயோ அங்கு விடுதலை உண்டு. இயேசு கிறிஸ்து உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள் என்று வேதம் கூறுகிறது. பாவத்திலிருந்தும் அதனால் வரும் தண்டனைகளிலிருந்தும் விடுதலையாக வேண்டுமானால் பரலோகத்தில் பங்குள்ளவர்களாக மாற வேண்டுமானால் நாம் உடைந்த நொறுங்குண்ட இருதயத்தோடும் பாவி என்ற உள்ளார்ந்த உணர்வோடும் பாவ பரிகாரி இயேசுவே என்ற முழு நம்பிக்கையோடும் அவரிடம் மன்னிப்பு கேட்கும் போது நாம் எப்படிப்பட்ட பாவியாக இருந்தாலும் அவர் நம்மை மன்னிப்பார். அவரது திருக்கரத்தினால் நம்மை பாவமற கழுவி பரிசுத்தப்படுத்தி பரிசுத்த ஆவியினால் நிரப்பி மறுபிறப்பின் அனுபவத்தை தந்து நம்மை பரலோகத்திற்கு தகுதியுள்ளவர்களாக மாற்றுவார்.

2

மனந்திரும்புதல்

மனந்திரும்புதல் என்பது மனிதன் தான் செய்த பாவத்திற்காக மனம்வருந்தி அல்லது அதற்காக கண்ணீர் சிந்தி தான் செய்த பாவத்தை முற்றிலுமாய் விட்டு விட்டு இறைவனிடம் சேர்வதாகும்.

30 வெள்ளிக்காசு பெற்றுக் கொண்டு யூதாஸ் காரியோத் இயேசு கிறிஸ்துவை முத்தத்தின் மூலம் காட்டிக் கொடுத்தான். அதன்பின் தான் செய்தது தவறு துரோகம் என்பதை அவன் உணர்ந்து, மனம் பாதிக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்டான். ஆனால் இயேசுவிடம் திரும்பி வரவில்லை. எனவே மனந்திரும்புதல் என்றால் பாவத்திற்காக கண்ணீர் சிந்துதல் மட்டுமல்ல. திரும்ப அந்த பாவத்தை செய்யாமல் திருந்துவதே ஒரு குடிகாரன் மனந்திரும்பிவிட்டான் என்றால் தான் குடித்தது தவறு என்று மனம் வருந்தி, கண்ணீர் சிந்துவது மட்டுமல்ல. அதை உணர்ந்த பின் மீண்டும் குடிக்காமல் இருப்பதே மனந்திரும்புதல் ஆகும். அதே விதமாக ஒரு பாவி தன் பாவத்திற்காய் மனம்வருந்தி கண்ணீர் சிந்துவது மாத்திரம் அல்ல. அவன் அந்த பாவத்தை விட்டு விட்டு தேவனிடம் செல்வதே மனந்திரும்புதல் ஆகும். மனந்திரும்புதல் என்றால் எண்ணத்தில் தோன்றிய மாற்றதினால் செயலிலும் ஏற்படும் மாற்றமே ஆகும். (it is a change of mind that leads to a change of conduct)

பரி.மத் 21: 28-32 ல் தந்தை மகனை பார்த்து, நீ திராட்சத்தோட்டத்திற்கு போ என்று சொன்னார். முதலில் அவன் போகவில்லை. பின்பு மனஸ்தாபப்பட்டு தோட்டத்திற்கு போனான். இதுதான் மனந்திரும்புதல். இளைய மகன் போகிறேன் என்று சொல்லியும் அவன் போகவில்லை. ஒரு பாவி தான் செய்யும் பாவத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, மனமாறி தேவனுடன் சேர்வதே மனந்திரும்புதல் ஆகும்.

ஏன் மனந்திரும்ப வேண்டும்

1. **தேவக்கட்டளை** - இப்போழுதே மனந்திரும்ப வேண்டும் என்று எங்குமுள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளை இடுகிறார். (அப் 17:20)

2. பிரசங்கிக்க பட வேண்டும் - மனந்திரும்புதலும் பாவ மன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமதத்தினாலே பிரசங்கிக்க பட வேண்டியது. (லூக் 24:47).

3. இயேசு கிறிஸ்து வந்ததின் நோக்கம் - நீதிமான்களை அல்ல பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் (மத் 9:13).

4. மனந்திரும்பும்படி சிட்சிக்கிறார் - நான் நேசிக்கிறவர்கள் எவர்களோ அவர்களை கடிந்துக் கொண்டு சிட்சிக்கிறேன். ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு (வெளி 3:19).

5. மனந்திரும்ப வேண்டுமென்று தாமதிக்கிறார் - தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிற படி கர்த்தர் தம்முடைய வாக்குத்தத்தத்தை குறித்து தாமதமாயிராமல் ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராய் இருக்கிறார். (2பேதுரு 3:9).

6. மனந்திரும்பும்படி தவணை கொடுக்கிறார் மனந்திரும்பும்படியாய் அவளுக்கு தவணை கொடுத்தேன். அவள் தன் வேசி மார்க்கமத்தை விட்டு மனந்திரும்ப அவளுக்கு விருப்பம் இல்லை. (வெளி 2:21).

7. மனந்திரும்பாவிட்டால் கெட்டு போவீர்கள் - நீங்கள் மனந்திரும்பாமற் போனால் எல்லாரும் அப்படியே கெட்டு போவீர்கள். (லூக் 13:3)

மேற்கண்ட வசனங்களை தியானித்து பார்க்கும் போது மனந்திரும்ப வேண்டும் என்பது தேவனுடைய கட்டளை யென்றும், அதற்காகவே இயேசு கிறிஸ்து இந்த உலகததிற்கு இரட்சகராக வந்தாரேன்றும் பாவத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனும் மனந்திரும்ப வேண்டும் என்றும் காலம் தாழ்த்துகிறார். சிட்சித்து, தண்டனை கொடுத்து உணர்த்துகிறார் என்றும், தவணை கொடுக்கிறார் என்றும், அப்படியும் மனந்திரும்பாத பட்சத்தில் மனந்திரும்பாதவன் கெட்டுபோவான் என்றும் பார்க்கிறோம். எனவே ஒவ்வொரு மனிதனும் கெட்டுப போகாமல் வாழ பரலோக ராஜ்யம் சேர மனந்திரும்ப வேண்டுமென்று திட்டவட்டமாக காண்கிறோம்.

எவ்வாறு மனந்திரும்புவது

வேதத்தில் கெட்ட குமாரனுடைய வாழ்க்கையை பார்க்கும்போது இந்த இளைய மகன் தன் ஆசை இச்சைகளை நிறைவேற்றும்படி தன் பாகத்தை பிரித்து வாங்கிக் கொண்டு தூரத்தேசத்துக்கு போனான், மனம் போல வாழ்ந்தான். எல்லா இன்பவங்களையும் அனுபவித்தான், இறுதியில் சொத்துக்களை இழந்தான். தரித்திரப்பட்டான். உணவுக்கு வழியில்லாமல் ஒரு குடியானவனிடம் பன்றி மேய்க்கும் தொழிலை ஒப்புக் கொண்டான். பன்றி தின்னும் தவிட்டால் தன் பசியை போக்க நினைத்தான். அதுவும் கிடைக்கவில்லை. அவன் புத்தி தெளிய ஆரம்பித்தது. ஒரு நாள் பன்றியின் மத்தியில் உட்கார்ந்திருக்கும் போது தான் செய்த தவற்றை நினைத்து மனம் வருந்தினான். மனம்வருந்தியதால் மனந்திரும்பி விட்டான் என்று சொல்ல முடியாது. பின்பு உள்ளம் உடைந்து செய்த பாவத்திற்காய் கண்ணீர் விட்டு அழுதான். அவன் கண்ணீர் சிந்தியதால் அவன் மனம் திருந்திவிட்டான் என்று சொல்ல முடியாது. பாவ வாழ்க்கையை விட்டு விட்டு தன் தகப்பனிடம் போக தீர்மானம் செய்தான். அவன் பாவம் செய்ய மாட்டேன் என்று தீர்மானித்ததால் மனந்திரும்பி விட்டான் என்று சொல்ல முடியாது. தான் வைத்திருந்த கஞ்சி பாத்திரம், கோல், எல்லாவற்றையும் குடியானவனிடம் திருப்பிக் கொடுத்தான். செய்த பாவங்களை விட்டு விட்டாலும் மனந்திரும்பி விட்டான் என்று சொல்ல முடியாது. இறுதியாக அவன் பாவத்திற்கு புற முதுகு காட்டி தகப்பனிடம் சென்று கட்டி பிடித்து அழுது சொன்னான், " பரத்திற்கு விரோதமாகவும், உமக்கு விரோதமாகவும பாவம் செய்தேன், என்னை மன்னியும்" இவ்வாறு மன்னிப்பு கேட்டான். மனிதனிடம் செய்த பாவத்தை மனிதனிடமும், தேவனுக்கு விரோதமாக தனிமையிலும், அந்தரங்கத்திலும் இரகசியமாய் செய்த பாவங்களையும், ஆவிக்குரிய வாழ்க்கையில் செய்த பாவங்களையும் தேவனிடம் அறிக்கை செய்து விட்டு விடும் போது திரும்ப அந்த பாவங்களை செய்யாமல் இருந்தால் மட்டுமே மனந்திரும்பினான் என்று சொல்லலாம். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான். (நீதி 28:13) என்று ஞானி கூறுகிறான். பாவங்களை விட்டால் மட்டும் போதாது. மீண்டும் அவற்றை செய்யாமல் இருப்பதுதான் உண்மையான மனந்திரும்புதல்.

ஆப்பிரிக்கா நாட்டில் வெள்ளையன் ஒருவன் காட்டு வழியாக சென்றுக் கொண்டிருந்தான். போகும் வழியில் நிக்ரோ ஒருவன் கையில் வேதபுத்தகத்தை வைத்து படித்துக் கொண்டிருந்தான். அதை பார்த்த இந்த வெள்ளையன் கேலி செய்தான். நிக்ரோவுக்கு கோபம் வரவில்லை. அவன் சிரித்துக் கொண்டே கேலி செய்த வெள்ளையனை பார்த்து கூறினான். நான் மட்டும் இந்த வேதத்தை படித்து மனந்திரும்பி இயேசு கிறிஸ்துவை என் தெய்வமாக ஏற்று கொண்டிராவிட்டால் இதற்குள் உன்னை உயிரோடு பிடித்து சாப்பிட்டு இருப்பேன் என்று கூறினான். அந்த வெள்ளையன் பதறி போனான். அதன் செயலுக்காக வருந்தினான். இதுவரை மனிதரை தின்னும் நிக்ரோ இயேசுவை ஏற்றுக் கொண்டதினால் வெள்ளையனும் மனம்மாறி விட்டான்.

ஏன் மனந்திரும்ப வேண்டும்?

நீங்கள் மனந்திரும்பி பிள்ளைகளை போல் ஆகாவிட்டால் பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன். (மத் 18:3) என்றார் இயேசு. பரலோக ராஜ்யத்திற்குள் செல்லவேண்டுமானால் நாம் ஒவ்வொருவரும் கண்டிப்பாக மனந்திரும்பியே ஆக வேண்டும் என்று இயேசு கிறிஸ்துவே கூறுகிறார். நீங்கள் மனந்திரும்பி விட்டீர்களா? நீ செய்த பாவங்கள் அனைத்தையும் தேவனிடம் சொல்லி, " இயேசுவே நான் பாவி, நான் செய்த பாவங்கள் அனைத்தையும் உம் கல்வாரி சிலுவையின் இரத்தத்தினால், என்னை நீக்கியருளும். தலையிலிருந்து உள்ளங்கால் வரை உள்ளும் புறமும் பாவமற கழுவி சுத்திரியும், இனி அந்த பாவத்தை செய்யாதபடி என்னை காத்துக் கொள்ளும், என்னை ஆசீர்வதியும்" என்று கேள். இயேசு உன்னை தம் பிள்ளையாய் ஏற்றுக் கொள்வார். உன்னை ஆசீர்வதிப்பார்.

இரட்சிப்பு 3

இன்றைய கிறிஸ்தவர்களுக்கு "இரட்சிப்பு" என்றால் என்ன என்றே தெரியவில்லை, இரட்சிப்புக்கு அர்த்தமும் தெரியவில்லை, இரட்சிப்பின் அவசியமும் தெரியவில்லை. "இரட்சிக்கப்பட்டீர்களா" என்று யாராவது கேட்டால் அவர்கள் மீது கோபம் வருகிறது; அவர்களை அற்பமாகவும் ஏளனமாகவும் எண்ணுகிறோம்.

வேதம் கூறுவது:

"அவர் (இயேசு) தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்" (மத் 1:21). "எருசலேமே நீ இரட்சிக்கப்படும்படிக்கு உன் இருதயத்தைப் பொல்லாப்பற கழுவு, எந்த மட்டும் அக்கிரம நினைவுகள் உன் உள்ளத்தில் தங்கும்?" (எரே 4:14). "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்திற்கு வந்தார்" (1தீமோ 1:15). "இரட்சிக்கப்படுகிறவர்களை தேவன் அனுதினமும் சபையில் சேர்த்து கொண்டுவந்தார்" (அப் 1:47) "அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும் தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்ளுவோம்?" (எபிரே 2:4). "கர்த்தாவே என்னை இரட்சியும், அப்பொழுது நான் இரட்சிக்கப்படுவேன்" (எரே 17:4).

இவ்வேத வசனங்களை நாம் வாசித்துப் பார்க்கும் போது இரட்சிப்பின் அவசியம் என்ன, இரட்சிக்கப்படாவிட்டால் தண்டனை உண்டு என்பதையும், இயேசுவே இரட்சகர் என்பதையும், இரட்சிக்கப்பட்டவர்கள் மட்டுமே மணவாட்டி சபையில் சேர முடியும் என்பதையும் அறிய முடிகிறது.

இரட்சிப்பு என்றால் என்ன?

இரட்சிப்புக்கு பலவிதமான அர்த்தமுண்டு. வியாதியிலிருந்து அல்லது மரணப்படுக்கையிலிருந்து காப்பாற்றும் ஒரு மருத்துவரை மரணத்திலிருந்து காப்பாற்றிய இரட்சகர் என்கிறோம். பயங்கரமான

விபத்திலிருந்து காப்பாற்றிய மனிதனையும் இரட்சகன் என்று தான் அழைக்கிறோம். இது இன்னொரு வகையான இரட்சிப்பு. இது போலத்தான் பாவம் சாபம் நித்திய அழிவிலிருந்து காப்பவரையும் இரட்சகர் என்று தான் அழைப்போம். இது இன்னொரு விதமான இரட்சிப்பு.

இயேசு கிறிஸ்துதான் இரட்சகரா?



ஒரு மனிதன் கிணற்றுக்குள் விழுந்துவிட்டான் என்று வைத்துக் கொள்ளுங்கள். கிணற்றில் விழுந்த மனிதன் கை கால் முறிந்து எழுந்து நடக்க முடியாமல் கிடக்கிறான், கிணற்றின் மேல் புறத்தில் நின்று ஒரு மனிதன் "நான் ஒரு வாளியைக் கீழே இறக்குகிறேன், நீ அதில் ஏறி உட்கார்ந்துக் கொள், உன்னை மேலே தூக்கி விடுகிறேன்" என்கிறார். இவனோ வாளியில் உட்கார முடியாத நிலையில் இருக்கிறான். மற்றொருவன் "கிணற்றின் உள்புறத்தில் உள்ள படிகற்களில் கால்வைத்து ஏறி மேலே வந்துவிடு" என்கிறான். ஆனால் அவனுக்கு நிற்கவோ நடக்கவோ முடியாது. இன்னொருவன் "நான் ஒரு கயிறை இறக்குகிறேன், உன் இடுப்பைச் சுற்றி அதைக் கட்டிக் கொள், நான் மேலே தூக்கி விடுகிறேன்" என்கிறான். ஆனால் அந்தக் கயிற்றை இடுப்பைச் சுற்றிலும் கட்ட அவனுக்கு சக்தி இல்லை. ஆனால் ஒரு மனிதன் படிவழியாய் மிகக் கஷ்டத்துடன் இறங்கி வந்து, அவனைத் தன் தோளில் தூக்கி, வாளியில் உட்கார வைத்து, மேலே கொண்டு வந்து, மருத்துவ மனையில் உடனே சேர்த்து, காப்பாற்றுகிறான். இவன் தான் உண்மையில் இரட்சகன் என்று பார்க்கிறோம், ஏனென்றால் இவன் தன் உயிரைப் பெரிதாக எண்ணாமல் கீழே இறங்கி வந்து காப்பாற்றுகிறான்.

தேவ பிள்ளையே, இதைப் போலவே பாவத்திலும் சாபத்திலும் சிக்கி, நித்திய மரணத்திற்கு நேராகச் சென்று கொண்டிருக்கும் மனுகுலத்தை மீட்டு இரட்சிக்க அகில உலகத்தையும் படைத்த தேவாதி தேவன் "இயேசு" என்ற பெயரோடு இரட்சகராக உலகத்திற்கு வந்தார்.

இந்த இயேசு கிறிஸ்துதான் இரட்சிக்க முடியுமா?

இந்த இயேசு கிறிஸ்து ஒருவர்தான் நாம் செய்த பாவங்களுக்காக நாம் அடைய வேண்டிய

தண்டனையை அவர் நம்மேல் வைத்த அளவற்ற அன்பினால் தம்மேல் ஏற்றுக் கொண்டு நமக்காக சிலுவையில் அடிக்கப்பட்டு, நம்மை பாவத்தை கழுவ தன் இரத்தத்தை சிலுவையில் சிந்தி, தன் ஜீவனையே கொடுத்தார். மரித்த இயேசு உயிர்த்தெழுந்து இன்றும் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசி கொண்டிருக்கிறார். நம்மை தான் இருக்கும் அந்த பரலோக ராஜ்யத்திற்கு அவரோடு கூட வாழ அழைத்துச் செல்ல மீண்டும் சீக்கிரம் வர போகிறார். நமக்காக நம் பாவத்திற்காக நாம் இழந்து போன நித்திய ஜீவனுக்கு ஈடாக தன்னையே பலியாகக் கொடுத்து மீட்டு இரட்சிததவர் இவர்தான்.

இந்த இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வது எப்படி?

"கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு (எபேசி 2:8). "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (அப்போ 17:31). "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைப் பண்ணப்படும்" (ரோம 10:10). "அவர் நம்முடைய கிரியைகளின்படி இரட்சிக்காமல் தம்முடைய தீர்மானத்தின்படியும் ஆதிகாலம் முதல் கிறிஸ்து இயேசுவுக்குள் நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியும் நம்மை இரட்சித்து பரிசுத்த அழைப்பினாலே அழைத்தார்" (2தீமோ 1:9). "அவர்களை முற்றும் முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார். (எபிரே 7:25). அவராலேயன்றி வேறொருவராலே இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழ் எங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் இல்லை" என்றார் (அப் 4:12).

இந்த வசனங்களை ஆராய்ந்து பார்க்கும் போது இரட்சிப்பு இலவச ஈவு என்றும், இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது இரட்சிக்கப்படுவோம் என்றும். கிருபையினால் இரட்சிக்கப்படுவோம் என்றும் இயேசுவின் நாமத்தில் மட்டுமே இரட்சிப்பு உண்டு என்றும் பார்க்கிறோம்.

"இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்" (1யோவா 1:7). "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா

அறியாமைத்யையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்".

நாம் செய்த பாவத்திற்கு மெய்யாகவே மனஸ்தாபப்பட்டு, நாம் பாவி என்பதை ஒத்துக்கொண்டு, உடைந்த இருதயத்தோடு என் பாவத்திற்கு நான் அடைய வேண்டிய தண்டனையை என் இயேசு தன் மீது ஏற்றுக் கொண்டார் என்று விசுவாசித்து, இயேசு கிறிஸ்துவை நோக்கி "உங்கள் இரத்தத்தினால் என்னை பாவமறக் கழுவி சுத்திகரியும்" என்று கேட்கும் போது இயேசு கிறிஸ்து நம்மைப் பாவமறக் கழுவி சுத்தகரிப்பார். அதன்பின் "பரிசுத்த ஆவியானவரே, என் உள்ளத்தை உம் ஆவியினால் நிரப்பும்" என்று கேட்கும் போது, அவர் தமது ஆவியினால் நம்மை மன்னித்து விட்டார் என்று விசுவாசிக்க வேண்டும். தேவன் நம் பாவத்தை மன்னித்த பின் நம் உள்ளத்தில் நம்மை அறியாமலே ஒரு சந்தோஷம் உண்டாகும், சமாதானம் ஏற்படும், நம் உள்ளம் பாவத்தை வெறுக்கும். தேவனுக்கு பிரியமானதையே செய்வோம்.

நாம் பாவ மன்னிப்புப் பெற்று இயேசுவை ஏற்றுக் கொள்ளும்போது இரட்சிக்கப்படுகிறோம். அதன்பின் நாம் பரிசுத்தத்திற்கு மேல் பரிசுத்தம் அடையும் போது, நாளுக்கு நாள் பரிசுத்தத்தில் பல அனுபவங்கள் மூலம் கடந்து செல்லும்போது இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த இரட்சிப்பை மரணபரியந்தம் அல்லது இயேசுவின் வருகை வரை காத்துக் கொள்ளுபவனே இரட்சிப்பட்டவன். இரட்சிக்கப்பட்டேன், இரட்சிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன். முடிவு பரியந்தம் நிலை நிற்பவனே இரட்சிக்கப்படுவான்.



ஏன் ஞானஸ்நானம் பெற வேண்டும் 4

ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவுடனே கூட சிலுவையில் அறையப்பட்டு, அடக்கம் பண்ணப்பட்டு, அவரோடு கூட உயிர்த்தெழுதலைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்து மனுக்குலத்தின் பாவத்துக்காக சிலுவையில் அடிக்கப்பட்டு இரத்தம் சிந்தி மரித்தார். மூன்றாம் நாள் அவர் உயிருடன் எழுந்தார். இதுபோலவே ஒரு கிறிஸ்தவன் ஞானஸ்நானம் பெறும் போது அவன் தண்ணீருக்குள் மூழ்கியிருக்கும்போது பாவத்திற்கு செத்து அடக்கம் பண்ணப் பட்டுவிட்டதையும், அவன் வெளியே வரும் போது பாவமில்லாத மனிதனாக மாறுவதையும் காட்டுகிறது. கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டு அவரோடு கூட உயிர்த்தெழுவதைக் குறிக்கிறது.

ஏன் ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்?

1. இயேசுவின் இறுதிகட்டளை

நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் (மத் 28:19,20).

2. நீதியை நிறைவேற்றுவதாகும்

இயேசு அவனுக்கு (யோவானுக்கு) பிரதியுத்திரமாக, இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாக இருக்கிறது என்றார் (மத் 3:15).

இயேசு கிறிஸ்து யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்காக யோர்தானுக்கு அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து, " நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க நீர் என்னிடத்தில் வரலாமா" என்றான். ஆதற்கு இயேசு "எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாய் இருக்கிறது

என்றார். அதாவது, ஞானஸ்நானம் பெறுவது நீதியை நிறைவேற்றுவதாகும் என்று கூறி, அவனிடம் ஞானஸ்நானம் எடுக்கிறார்.

3. தேவனுடைய ஆலோசனை

யோவானுடைய உபதேசத்தைக் கேட்ட ஆயக்காரர் முதலான சகல ஜனங்களும் அவனாலே ஞானஸ்நானம் பெற்று, தேவன் நீதிபரர் என்று அறிக்கையிட்டார்கள். பரிசேயரும் நியாய சாஸ்திரிகளுமோ அவனால் ஞானஸ்நானம் பெறாமல் தங்களுக்குக் கேடுண்டாகத் தேவனுடைய ஆலோசனையைத் தள்ளிவிட்டார்கள் (லூக்:7:29,30).

இந்த வசனங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது ஞானஸ்நானம் பெறுவது தேவனுடைய ஆலோசனை நிறைவேற்றாமல் என்றும், அப்படி தேவ ஆலோசனையை தள்ளி விடுகிறவர்கள் தங்களுக்குக் கேடுண்டாக்கிக் கொள்ளுகிறார்கள் என்றும் பார்க்கிறோம். நாம் தேவ ஆலோசனையை ஏற்றுக் கொண்டு அதின்படி நடக்க வேண்டும்.

4. விசுவாசித்து ஞானஸ்நானம் எடு

விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப் படுவான் (மாற் 16:16).

இயேசு `என் பாவத்துக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, உயிர்த் தெழுந்தார் என்று இருதயத்தில் விசுவாசிக்க வேண்டும். நானும் என் பாவத்திற்காக இந்த ஞானஸ்நானத்தின் மூலம் கிறிஸ்துவுடனே கூட மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, அவரோடு கூட நீதிக் கென்று பிழைத்திருக்கிறேன் என்று இருதயத்தில் விசுவாசித்து ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்.

5. இது நல்மனசாட்சியின் உடன்படிக்கை

ஞாஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப் பற்றும் நல் மன சாட்சியின் உடன் படிக்கையாயிருக்கிறது. இப்பொழுது நம்மையும் இயேசு கறிஸ்துவினுடைய உயிர்தெழுதலினால் இரட்சிக்கிறது. (1பேதுரு 3:21).

நாம் ஞானஸ்நானம் பெறுவது நமது சரீரத்திலுள்ள அழுக்கைப் போக்குவதல்ல. தண்ணீருக்குள் மூழ்கி எழும்புவதால. இது நாம் கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டு மீண்டும் உயிரோடு

வெளிப்படுத்தலைக் காட்டுகிறது. இது சீஷனாகும் நாம் செய்யும் தன்னொப்புவிப்பின் உடன்படிக்கை என்றும், இயேசு இந்த ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறதென்றும் காண்கிறோம். ஆகையால் நாம் ஞானஸ்நானம் பெறுவது அவசியம் என்பதையும் காண்கிறோம்.

எனவே ஒவ்வொரு விசுவாசியும் மனந்திரும்பி விசுவாசித்து தன்னொப்புவிப்புடன் ஞானஸ்நானம் பெறும் பொழுது இரட்சிக்கப்படுகிறான் என்றும், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறுகிறான், என்றும் காண்கிறோம். இயேசு ஞானஸ்நானம் பெற்று கரையேறிய போது பரிசுத்த ஆவியானவர் அவர்மீது புறாவைப் போல் இறங்கினார் என்று வாசிக்கிறோம். அப்போஸ்தலர் 19:4,5 ல் அவர்கள் ஞானஸ்நானம் பெற்றபோது பரிசுத்த பவுல் அவர்கள் மீது கை வைத்த போது பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டார்கள் என்றும் பார்க்கிறோம்.

எப்படி ஞானஸ்நானம் எடுக்க வேண்டும்?

1. மனம் திரும்பி எடுக்க வேண்டும்

பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள், "மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக் கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள்" என்கிறார்.

அன்பான தேவபிள்ளையே, நாமும் நம் பாவங்களை அறிக்கை செய்து, பாவ மன்னிப்புகென்று ஞானஸ்நானம் எடுக்க வேண்டும். இயேசு நம் பாவத்துக்காக மரித்தார். நாமும் ஞானஸ்நானம் எடுக்கும் போது பாவத்துக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கிறோமென்று விசுவாசித்து, தேவனோடு நாம் ஏற்படுத்திக் கொள்ளும் புது உடன்படிக்கையின் நிச்சயம் என்ற உணர்வோடு கூட ஞானஸ்நானம் பெற வேண்டும்.

ஏன் பரிசுத்த ஆவியைப் பெற வேண்டும்? 5

பரிசுத்த ஆவியானவர் யார்?

தெய்வத்தன்மையின் மூன்றாவது இடத்தில் இருப்பவர் பரிசுத்த ஆவியானவர். பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவராகிய மூவரும் சம அந்தஸ்துள்ளவர்கள். பரிசுத்த ஆவியானவர் ஆள்தத்துவம் உடையவர். பரிசுத்த ஆவியானவர் பிதாவினாலும் குமாரனாலும் விசுவாசிகளை வழி நடத்தும்படி அனுப்பபட்டவர்.

ஆள்தத்துவமுடையவர்

1. பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக்குறித்து சாட்சி கொடுப்பார். (யோவா 15:26).

2. அவர் வந்து பாவத்தைக் குறித்தும் நீதியைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக் குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் (யோவா 16:8)

3. சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோவா 15:13).

இவ்வசனங்களை நாம் தியானித்துப் பார்க்கும் போது பரிசுத்த ஆவியானவர் ஒரு ஆள்தத்துவமுடையவர் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும்.

பரிசுத்த ஆவியானவரின் தன்மை

1. **சுய சித்தம் உடையவர்** - இவைகளை எல்லாம் அந்த ஒரே ஆவியானவரே நடப்பித்து தமது சித்தத்தின்படியே அனைவருக்கும் பகிர்ந்து கொடுக்கிறார்.

2. **அறிவுடையவர்** - அவர்களுக்கு அறிவை உணர்த்த உம்முடைய நல் ஆவியைக் கட்டளையிட்டீர் (நெகே 9:20).

3. **ஆராயும் ஆற்றல் உள்ளவர்** - ஆவியானவர் தேவனுடைய சித்தத்தின்படியே பரிசுத்தவான்களுக்காக வேண்டுதல் செய்கிற படியால் இருதயங்களை ஆராய்ந்து பார்க்கிறவர் (ரோ 8:27)

4. **பெலன் தருகிறார்** - பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும் பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார் (அப் 1:8).

5. **விசனப்படுகிறார்** - அவர்களோ கலகம் பண்ண அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள் (ஏசா 63:10)

மனிதன் செய்யும் செயல்களையே செய்கிறார்

1. **பேசுகிறார்** - ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.

2. **கூப்பிடுகிறார்** - மேலும் நீங்கள் புத்திரராய் இருக்கிறபடியினால் அப்பா பிதாவே என்று கூப்பிடத் தக்கதாக தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார் (கலா 4:6)

3. **உதவிசெய்கிறார்** - அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார் (ரோம 8:26)

4. **போதிக்கிறார், நினைப்பூட்டுகிறார்** - என் நாமத்தினாலே பிதா அனுப்பப் போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற் றையும் உங்களுக்கு போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார் ((யோ 24:26)

5. **வழிநடத்துகிறார்** - மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

6. **சாட்சிக்கொடுப்பார்** - "பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது அவர் என்னைக் குறித்து சாட்சி கொடுப்பார். (யோவா 15:20)

பரிசுத்த ஆவியானவரின் செயல்கள்

1. **உருவாக்குகிறார்** - தேவனுடைய ஆவியானவர் நம்மை உண்டாக்குகிறார். "நீர் உம்முடைய ஆவியை அனுப்பும் போது அவைகள் சிருஷ்டிக்கப்படும்"

2. **நீதிமான்களாக்குகிறார்** - உங்களில் சிலர் இப்படிப் பட்டவர்களாயிருந்தீர்கள். ஆயினும் கர்த்தராகிய இயேசுவின்

நாமத்தினாலும் நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள் (1கொரி 6:11)

3. **நடத்துகிறார்** - சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையும் சொல்லி, வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

4. **உயிர்ப்பிக்கிறார்** - ஆவியே உயிர்ப்பிக்கிறது. மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனுமாயும் இருக்கிறது. (யோ 6:63).

5. **மறுபிறப்பைக் கொடுக்கிறார்** - ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். (யோ 3:5)

6. **எப்போதும் நம்மோடு இருக்கிறார்** - நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன். அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனே கூட இருக்கும்படிக்கு சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.

7. **விடுதலை தருகிறார்** - கர்த்தரே ஆவியானவர், கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையும் உண்டு. (2கொரி 3:17)

ஆவியால் நிரப்பப்பட்ட நாம் என்ன செய்ய வேண்டும்

1. **தாகம் வேண்டும்** - ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன் (யோ 7:37)

   தாகம் உள்வர்கள்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின் மேல் ஆறுகளையும் ஊற்றுவேன். உன் சந்ததியின் மேல் என் ஆவியையும், உன் சந்தானததின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். (ஏசா 44:3)

2. **கீழ்ப்படிகிறவர்களுக்கு** - தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குத் தந்தருளின பரிசுத்த ஆவியும் சாட்சி என்றார்கள். (அப 5:32)

3. **விசுவாசிக்கிறவர்களுக்கு** – வேதவாக்கியம் சொல்லுகிறபடி, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும். (யோவா 17:38)

4. **காத்திருக்க வேண்டும்** - ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள் (அப் 1:14)

வேதத்தை ஆராய்ந்து பார்க்கும்போது சில இடங்களில் அந்நிய பாஷையில் பேசினார்களென்றும், சில இடங்களில் பேசவில்லையென்றும் காண்கிறோம். பல ஜாதி மக்கள் கூடியிருந்த இடங்களில் திட்டமாகப் பேசியிருப்பதையும் காண்கிறோம்.

வெவ்வேறு பாஷை

1. அக்கினி மயமான நாவுகள் போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. அவர்கள் எல்லோரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் அவர்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள். (அப் 2:3,4)
2. பேதுரு பேசிக் கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார். அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும் தேவனைப் புகழுகிறதையும் கண்டு புற ஜாதியார் பிரமித்தார்கள்.
3. அல்லாமலும் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார். அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசி தீர்க்கதரிசனம் சொன்னார்கள். (அர் 19:6).

அவனவனுடைய பிரயோஜனத்திற்கு – ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது (1கொரி 12:7)

பக்தி விருத்தி உண்டாக்குகிறது – அந்நிய பாஷையில் பேசுகிறவன் தனக்கே பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான் (1கொரி 14:4)

தேவனோடு பேசுகிறான் - ஏனெனில் அந்நிய பாஷையில் பேசுகிறவன் ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும் அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே அவன் மனுஷனிடத்தில் பேசாமல் தேவனிடத்தில் பேசுகிறான். (1கொரி 14:2)

தேவ பிள்ளையே, பரிசுத்த ஆவியானவர் உனக்குள் பிரவேசித்து பாவத்தைக்குறித்தும் நீதியைக்குறித்தும் நியாயத் தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்தும் போது தான் உனக்குள் பாவ உணர்வு ஏற்பட்டு மனமாற்றம் ஏற்படுகிறது. அவர் பரிசுத்தமாக வாழ உதவி செய்கிறார். போதிக்கிறார். சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துகிறார். பலப்படுத்துகிறார். வெற்றி வாழ்க்கை வாழச் செய்கிறார். எனவே நாம் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் கண்டிப்பாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

ஏன் மறுபடியும் பிறக்க வேண்டும் 6

மறுபிறப்பை குறித்து இயேசுகிறிஸ்து பரி யோவான் 3:3-5 ல் தெளிவாகக் கூறுகின்றார். ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காண மாட்டான் என்றும், ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்றும் மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று நிக்கோதேமுவைப் பார்த்துச் சொன்னார்.

தேவனுடைய ராஜ்யத்தைக் காண, அதற்குள் பிரவேசிக்க

ஒரு மனிதன் தேவனுடைய ராஜ்யத்தைக் காண, தேவனுடைய ராஜ்யத்துக்குள் பிரவேசிக்க கண்டிப்பாக மறுபடியும் பிறந்தே ஆக வேண்டும் என்று இயேசு கிறிஸ்து திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

நிக்கோதேமு ஒரு யூதன், ஒரு பரிசேயன், ஒரு அதிகாரி, ஒரு போதகன். அவனைப் பார்த்து இயேசு கூறினார். ஜாதி குலம், படிப்பு, பட்டம், உத்தியோகம், சன்மார்க்கமான ஜீவியம், ஒருவனை இரட்சிக்காது.. நீ போதித்தாலும், ஊழியம் செய்தாலும் இவைகள் உன்னை இரட்சிக்காது பரலோகத்துக்குள் அழைத்துச் செல்லாது. நீ மறுபடியும் பிறக்க வேண்டும் என்று இயேசு கூறினார். தேவபிள்ளையே, நீயும் உயர்ந்த ஜாதியில் பிறந்தாலும், உயர் குலத்தில் பிறந்தாலும், ஜாதியும் குலமும் உன்னை இரட்சிக்காது. பரலோகத்திற்குள் அழைத்துச் செல்லாது. நீ படித்து பட்டம் பெற்று உயர்ந்த உத்தியோகம் செய்தாலும், மக்களுடைய அன்புக்கும் மதிப்பிற்கும் உரியவனாயிருந்தாலும் இதுவும் உன்னை இரட்சிக்காது. பரலோகத்திற்கு அழைத்துச் செல்ல முடியாது. நீ சன்மார்க்கமான வாழ்க்கை பாவம் செய்யாமல் வாழ்ந்தாலும், அதாவது, சினிமா பார்க்கவில்லை, புகை பிடிப்பதில்லை, மது அருந்துவதில்லை, விபச்சாரம் வேசித்தனம் பண்ணுவதில்லை, ஒழுங்காக ஆலயம் செல்லுகிறேன். வேதம் வாசிக்கிறேன். உபவாசிக்கிறேன். ஜெபம் பண்ணுகிறேன் என்று சொன்னாலும், இந்த சன்மார்க்கமான,

சரீர மரணம்

பிரசங்கி 12:7ல் "இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத்திரும்பி" என்று ஞானி எழுதுகின்றான். தேவன் பூமியிலுள்ள மண்ணினால் மனிதனை உருவாக்கி, தன்னுடைய ஜீவ சுவாசத்தை அவன் நாசியில் ஊதி ஜீவாத்துமாவாக மாற்றினார். இந்த வசனத்தின்படி பார்க்கும் போது மனிதனுடைய ஆவி அவனைவிட்டு பிரிந்ததும் அவன் சரீரத்தை மண்ணில் புதைத்துவிடுகின்றனர். எரிந்தாலும், அந்த சாம்பலும் தண்ணீரில் கலந்து கடைசியில் மண்ணுக்குள்தான் போய்ச் சேர்கிறது இப்படி மனிதனுடைய சரீரம் ஆவி பிரிந்த பின்பு மண்ணோடு மண்ணாகச் சேர்வது தான் சரீர மரணம் என்று பார்க்கிறோம்.

நித்திய மரணம்

வேதத்தின் அடிப்படையில் பார்க்கும்போது தேவனுடைய நியாயத்தீர்ப்பின் போது இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு தேவ கட்டளைகளைக் கைக் கொண்டு அதன்படி நடந்தவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் தேவனோடு கூட நித்திய காலமாய் வாழ்வார்கள். இயேசு கிறிஸ்துவை இரட்சகராய் ஏற்றுக் கொள்ளாதவர்கள் பாவத்திலும் துன்மார்க்கத்திலும் அக்கிரமத்திலும் வாழ்ந்தவர்கள். பிசாசுக்கென்று தேவனால் ஏற்படுத்தப்பட்ட அக்கினிக்கடலில் நித்திய ஆக்கினைக்குப் பங்காவார்கள். இதிலிருந்து விடுதலையே கிடையாது. இதைத்தான் நித்திய மரணம் என்று வேதம் கூறுகிறது.

இரண்டு பிறப்பு

தேவ பிள்ளையே, ஒரு மனிதனுக்கு இரண்டு பிறப்புகள் உண்டு. முதல் பிறப்பு ஜென்ம பிறப்பு. அதாவது, நாம் ஜென்ம பாவத்துடன் பிறப்பதாகும். அடுத்த பிறப்பு இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் போது பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும் போது மறுபடியும் பிறக்கிறான். இது பாவமில்லாத புதிய வாழ்வு.

ஜென்ம பிறப்பு

என்று ஆதாம் ஏவாள் ஆகிய நம் ஆதிபிதாக்கள் தேவனுடைய கட்டளையை மீறி, அந்த விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசித்தார்களோ, அன்றே மனிதனுடைய இரத்தத்தோடும் சரீரத்தோடும் ஜீவனோடும் அந்தக் கீழ்படியாமையாகிய பாவத்தின் விஷம் கலந்துவிட்டது. அதன் பின் பிறக்கக்கூடிய ஒவ்வொரு மனிதனும் இந்த ஜென்ம பாவத்தோடு பிறக்கிறான். அதைக்குறித்து தான் தாவீது சங் 51:5ல் "இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன், என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்" என்று கூறுகிறான். இப்படி பாவத்தோடு கூட பிறப்பதுதான் முதற்பிறப்பு.

மறுபிறப்பு

மறுபிறப்பு என்றால் பாவத்தோடு பிறந்த மனிதன் பாவப் பரிகாரியாகிய இயேசு கிறிஸ்துவின் திரு இரத்தத்தினால் தலையிலிருந்து உள்ளங்கால் வரை உள்ளும் புறமும் பாவமறக் கழுவி சுத்திக்கரிக்கப்பட்டு பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும் போது மனிதன் மறுபடியும் பிறக்கிறான். அதாவது பாவ மனித சுபாவத்திலிருந்து விடுதலையாகிறான். பரிசுத்த ஆவியானவர் அவனுக்குள் வந்து தங்கும் போது புதிய மனிதனாக மாறுகிறான். பாவ சுபாவம் மாறி, தேவ சுபாவம் அவனில் காணப்படுகிறது. அதுவே மறுபிறப்பாகும். புதுவாழ்வாகும்.

வண்ணத்துப்பூச்சி

வண்ணத்துப்பூச்சியின் (Butterfly) முட்டை அற்பமாக, கடுகைவிட சிறிதாகத்தான் தோன்றும். அந்த அற்பமான முட்டை சிலநாளில் வெடிக்கிறது. அதற்குள்ளிருந்து ஒரு அருவருப்பான புழு வெளியே வருகிறது. அது பார்ப்பதற்குக் கம்பளிப்பூச்சியைப் போல அருவருப்பாகத்தான் காணப்படுகிறது. அது சாப்பிடுவது இலை, துளிர்கள்தான். இதைப் போலவே பாவத்தில் வாழ்கிற மனிதனுடைய வாழ்வும் உலக மக்களின் பார்வைக்கு அற்பமாகக் காணப்படுகிறது. அந்த அருவருப்பான புழுவைப் போல் தான் பாவத்தில் வாழ்கிற மனிதன் புகை பிடிக்கிறான். மது அருந்துகிறான் ஆபாசமாக உடுத்துகிறான் தன்னை அருவருப்பாக அலங்கரித்து கொள்கிறான். அவன் வாயிலிருந்து அருவருப்பான பாடல், அருவருப்பான வார்த்தைகள் அவன் செயல்கள் மற்றவர்களை வேதனைப்படுத்தும் செயல்களாகவே இருக்கும். எனவே உலகம் அவர்களை வெறுக்கும். இப்படிப்பட்ட அருவருப்பான புழு ஒருநாள் தன்னைச் சுற்றி ஒரு கூட்டைக் கட்டிக் கொண்டு அதற்குள் அமைதியாய் இருக்கும். கூட்டுக்குள் இருக்கும்போதுதான் அந்தப் புழுவுக்கு இறக்கை முளைக்கிறது. தேன் குடிக்க துதிக்கை முளைக்கிறது. அழகிய வண்ணங்கள் தோன்றுகிறது. முழு வளர்ச்சியடைந்து கூட்டை விட்டு வெளியில் வரும்போது அழகிய பறவையைப்போல காட்சியளிக்கிறது. இதேபோன்று தான் பாவத்தில் வாழும்போது எல்லோரும் வெறுக்கும் அளவுக்கு வாழும் ஒரு மனிதன் இயேசு கிறிஸ்துவுக்குள் வரும்போது, அவனுடைய வாழ்க்கையே மாறி விடுகிறது. மது மாத்திரை சூடி விபச்சாரம் மாறிவிடுகிறது. கெட்ட பாடல்கள். கெட்ட வார்த்தைகள் நீங்கி, பிற உள்ளங்களை மகிழ்விக்கும் வார்த்தைகள், தேவனிடம் வழி நடத்தும் வார்த்தைகள், பாடல்களே வரும். ஆபாசமான உடை அலங்கரிப்புகள் மாறி, பரிசுத்த தோற்றம் காணப்படும். நோக்கங்கள், செயல்கள் எல்லாமே மாறிவிடுகிறது. புதிய வாழ்வு! இதுவே மறுபிறப்பு என்கிறோம். இதுபோலவே நம் வாழ்க்கை மாற வேண்டும். பாவ வாழ்க்கை மாறி பரிசுத்த வாழ்க்கை ஏற்படுவதே புது வாழ்வு. மறுபிறப்பு. இப்படி மறுபடியும் பிறக்கும் போது மட்டுமே தேவனுடைய ராஜ்யத்துக்குள் செல்ல முடியும். நம் வாழ்க்கையில் மாற்றம் உண்டா? மறுபடியும் பிறந்திருக்கிறோமா?

ஏன் உபவாசிக்க வேண்டும் 7

"பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள். விஷேசித்த ஆசரிப்பைக் கூறுங்கள். மூப்பரையும் தேசத்தின் எல்லாக் குடிகளையும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் ஆலயத்திலேயே கூடிவரச் செய்து கர்த்தரை நோக்கிக் கூப்பிடுங்கள். (யோவேல் 2:14) சீயோனில் எக்காளம் ஊதுங்கள். பரிசுத்த உபவாச நாளை நியமியுங்கள். விசேஷித்த ஆசரிப்பைக் கூறுங்கள். ஜனத்தைக் கூட்டுங்கள். சபையைப் பரிசுத்தப்படுத்துங்கள். முதியோரைச் சேருங்கள் பிள்ளைகளையும் பாலுண்கிற குழந்தைகளையும் கூட்டுங்கள் (யோவேல் 2:15-16) "கிறிஸ்து உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச் சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்." (1பேதுரு2:21).

இயேசு கிறிஸ்து தான் போதித்ததை இந்த உலகத்தில் சாதித்தார். அவர் வாழ்க்கையில் செய்த எல்லாவற்றையும் நமக்கு மாதிரியாக செய்தபடி, வாழ்ந்தபடி, செய்யவும் வாழவும் கடமைப்பட்டுள்ளோம். அவர் தன ஊழியத்தைத் தொடங்குமுன் நாற்பது நாட்கள் இரவும் பகலும் புசியாமலும் குடியாமலும் இருந்து உபவாசம் செய்தார். மோசே 2முறை நாற்பது நாட்கள் ஒன்றும் புசியாமலும் குடியாமலும் இருந்து உபவாசித்து 10கற்பனைகளை தேவனிடமிருந்து பெற்றுக் கொண்டார். பல தேவனுடைய பிள்ளைகளின் வாழ்க்கையைத் திரும்பி பார்க்கும்போது அவர்கள் வாழ்க்கையின் வெற்றியின் இரகசியத்திற்கு உபவாசம் பெரிய உதவியாக இருந்ததையும் காண்கிறோம்.

தேவ கட்டளை

வரும் அழிவிலிருந்து வேதனையிலிருந்து தப்புவதற்கு உபவாச நாளை நியமித்து உபவாசியுங்கள் என்று யோவேல் தீர்க்கத்தரிசியின் மூலம் தேவன் கட்டளையிடுகிறதை யோவேல் 1:14 ல் காண்கிறோம். ஆதலால் நாமும் வேதனையிலிருந்து தப்ப பரிசுத்த உபவாச நாளை

நியமித்து முதியோரையும் பிள்ளைகளையும், பாலுண்ணும் குழந்தைகளையும் கூட்டிச் சேர்த்து சபையை பரிசுத்தப்படுத்தும் போது தேவன் மனமிரங்கி வரப்போகும் அழிவிற்கு விலக்கி காப்பேன் என்கிறார். ஆகையால் நாமும் நம் குடும்பமும் நம் தேசமும் அழிவிலிருந்து காக்கப்பட உபவாசித்து தேவனை நோக்கி ஜெபிக்க வேண்டும் என்பது தேவ கட்டளை என்று கூறலாம்.

யோசப்பாத்திற்கு விரோதமாக மோவாப் புத்திரரும் அம்மோன் புத்திரரும் யுத்தம் பண்ண வந்தபோது யோசபாத் யூதா எங்கும் உபவாசத்தைக் கூறி ஜனங்களை கூட்டிச்சேர்த்து தேவனை நோக்கி விண்ணப்பம் செய்த போது கர்த்தர் அவர்களுக்காக யுத்தம் பண்ணினார். வெற்றி பெற்றார்கள் என்று காண்கிறோம். (2நாளா 20:3,22).

மாம்ச இச்சைகளை மேற்கொள்ள

தானியேலின் வாழ்க்கையை நாம் பார்க்கும் போது அவன் ருசியான பதார்த்தங்கள் புசிப்பதில்லை. மதுபானம் அருந்துவதில்லை என்று தீர்மானித்து செயல்பட்டதை பார்க்கிறோம். கொழுப்பு சத்துள்ள ருசியான உணவுகளை புசிக்கும் போது சரீரத்தில் கொழுப்பு சத்து அதிகரிக்கும். தீய பாவ உணர்ச்சிகளை உண்டுபண்ணும். அது பாவம் செய்ய தூண்டும். யாரிடமாவது சண்டை போட தூண்டும். சாப்பிடாமல் பட்டினி கிடந்தால் உடலில் பெலன் இருக்காது. மிகுதியான பாவ உணர்ச்சிகள் உருவாகாது. யாரிடமும் சண்டை போடவோ பாவத்தை செய்யவோ விரும்ப மாட்டான். ஆகையால் சரீரத்தை ஒடுக்க சரீர இச்சைகளிலிருந்து காக்கப்பட உபவாசம் அவசியப்படுகிறது.

தேவனோடு ஐக்கியப்பட

உபவாசிக்கும் போது சரீர களைப்பு ஏற்படுவதால் தூக்கம் வருவது கஷ்டம். இது அதிக நேரம் ஜெபிக்க உதவியாக இருக்கும். உலக பிரகாரமாக ஆசை இச்சைகளை வெறுத்து தேவ சந்நிதியில் இருந்து பாடி துதித்து வேதம் வாசித்து ஜெபிக்கும் போது தேவனோடு அதிக நேரம் ஐக்கியம் கொள்ள உதவியாக இருக்கிறது.

இயேசுவின் அடிசுவடுகளை பின்பற்ற

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் 3 ½ ஆண்டுகள் நன்மை செய்கிறவராய் சர்வ வல்லமையுள்ள தேவனாக சுற்றி திரிந்தார். அவர் தனது ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் நாற்பது நாட்கள் இரவும் பகலும் புசியாமலும் குடியாமலும் இருந்து உபவாசம் செய்தார். கிறிஸ்துவும் உங்களுக்காக பாடுப்பட்டு நீங்கள் தம்முடைய

அடிச்சுவடுகளை தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின் வைத்துப் போனார். எனவே அவரை பின்பற்றுகிற ஒவ்வொரு கிறிஸ்தவனும் அவரைப் போலவே உபவாசிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

தேவனுக்கு பிரியமில்லாத உபவாசம்

மனுஷன் தன் ஆத்துமாவை ஒடுக்குகிறதும் தலைவணங்கி நாணலைப் போல் இருட்டிலும் சாம்பலிலும் படுத்துக் கொள்ளுகிறதும் எனக்கு பிரியமான உபவாச நாளாய் இருக்குமோ. (ஏசா 58:6) நீங்கள் உபவாசிக்கும் போது மாயக்காரரைப் போல முகவாடலாய் இராதேயுங்கள்: அவர்கள் உபவாசிக்கிறதை மனுஷர் காணும் பொருட்டாக தங்கள் முகங்களை வாடப்பண்ணுகிறார்கள்." (மத் 6:16) மற்றவர்களுக்கு தெரியகூடிய அளவு நம்மை பார்த்து பரிதாபப்பட கூடிய அல்லது உபவாசிப்பதும் சரியான உபவாசம் அல்ல.

சிலர் சாப்பிட உணவு இல்லாவிட்டால் உபவாசம் என்பார்கள். சிலர் உபவாசம் என்று சொல்லி விட்டு இட்லி, தோசை, பழம் அல்லது பழரசம் சாப்பிடுவார்கள். சோறு மட்டும் சாப்பிட மாட்டார்கள். இதுவும் உபவாசம் என்பார்கள். சிலர் உபவாசம் அன்று சாப்பிடாமல் பட்டினி கிடப்பார்கள். ஆனால் தேவ சந்நிதானத்தில் காத்திருப்பதோ பாடுவதோ ஜெபிப்பதோ கிடையாது. நேரமும் இருக்காது. வெளியில் சென்றுவிடுவார்கள் அல்லது வேலை செய்து கொண்டே இருப்பார்கள். இதையும் உபவாசம் என்பார்கள். இவைகள் எல்லாம் சரியான உபவாசம் இல்லை. தேவன் விரும்பும் உபவாசமும் இல்லை.

தேவனுக்கு பிரியமான உபவாசம்

உண்மையான உபவாசம் என்பது " அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும் நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும் நொறுக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கி விடுகிறதும் சகல நுகத்தடிகளையும் உடைத்து போடுகிறதும், பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தை பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்கிறதும் வஸ்திரம் இல்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரம் கொடுக்கிறதும் உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமல் இருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்' (ஏசா 58:6,7) நீயோ உபவாசிக்கும் போது அந்த உபவாசம் மனுஷர்களுக்கு காணப்படாமல் அந்தரங்கத்தில் இருக்கிற உன் பிதாவுக்கு காணப்படும்படியாக உன் தலைக்கு எண்ணெய் பூசி உன் முகத்தை கழுவு. (மத் 6:17,18).

உபவாசத்தின் பலன்

இப்படி நீ உபவாசிக்கும்போது, "அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாக பலனளிப்பார். (மத்6:18). ஏசா58:6,7 ன் படி நீ உபவாசிக்கும் போது, "விடியற்கால வெளுப்பைப் போல உன் வெளிச்சம் எழும்பி உன் சுகவாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்: கர்த்தருடைய மகிமை உன்னைப் பின்னாலே காக்கும். அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறு உத்தரவு கொடுப்பார். நீ சத்தமிடுவாய், இதோ நான் இருக்கிறேன் என்று சொல்லுவார் (ஏசா 58:89). நீ இப்படி உண்மையாய் உபவாசிக்கும் போது தேவன் உன் வேண்டுதல்களைக் கேட்பார்.

உண்மையான உபவாசம் என்பது, நாம் குறிப்பிட்ட நாளையும் நேரத்தையும் நியமித்து, அந்த நாளில் உணவு இருந்த போதிலும் அதைப் புசிக்காமலும் குடிக்காமலும் தேவ சந்நிதிதானத்தில் அமர்ந்து நம்மைத் தாழ்த்தி நம் பாவங்களை அறிக்கை செய்து, சில பாடல்களை உணர்ந்து பாடி, வேதம் வாசித்து ஜெபிப்பதுதான். பரிசுத்த ஆவியில் நிரம்பி ஜெபிப்பது மிக அவசியம்.

முன்மாதிரியான உபவாசங்கள்

இயேசுக் கிறிஸ்து - இயேசு இரட்சகர் மலைக்குச் சென்று 40 நாட்கள் இரவும் பகலும் புசியாமலும் குடியாமலும் உபவாசம் செய்து உன்னதத்திலிருந்து பெலத்தைப் பெற்றுக் கொண்டார். இதன் பலனால் பிசாசின் சோதனைகளை வென்றார். அற்புதங்களையும் அதிசயங்களையும் செய்தார். பாடுகளை சகித்துக் கொண்டார். சிலுவை மரணத்தைத் தாங்கிக் கொண்டார்.

மோசே - இரண்டு முறை நாற்பது நாட்கள் சீனாய்மலையில் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலும் உபவாசம் செய்து பத்துக் கற்பனைகளை பெற்றுக் கொண்டான் இஸ்ரவேல் ஜனங்களை நாற்பது ஆண்டுகள் பொறுமையோடு நடத்திச் சென்றான்.

தானியேல் - தானியேல் ருசியான் உணவுப்பொருட்களைப் புசிப்பதில்லை என்றும் மற்றவர்களை ஈர்க்கக்கூடிய வாசனைத்

திரவியங்கள் பூசிக்கொள்வதில்லை என்றும், மதியை மயக்கக் கூடிய மதுபானம், அருந்துவதில்லை என்றும் இருதயத்தில் தீர்மானம் பண்ணினான். உபவாசித்தான், ஜெபித்தான். அவன் காரியம் வெற்றியாய் முடிந்தது என்று காண்கிறோம்.

எஸ்தர் - எஸ்தர் தன் தாதிப் பெண்களுடன் அல்லும் பகலும் புசியாமலும் குடியாமலும் மூன்று நாட்கள் யூத ஜனங்களின் விடுதலைக்காக உபவாசித்து ஜெபித்த போது ஆமானுடைய தீய திட்டம் வெளிப்படுத்தப்பட்டு தண்டிக்கப்பட்டான். யூத ஜனங்களுக்கு விடுதலை கிடைத்தது.

நெகேமியா – யூதேயாவிலிருந்து வந்த யூத மக்களிடம் எருசலேமைக்குறித்தும் அதில் வாழும் மக்களைக்குறித்தும் விசாரித்தான். எருசலேமின் அலங்கங்கள் இடிப்பட்டுக் கிடக்கிறது. அதின் வாசல்கள் தீக்கொழுத்தப்பட்டு விட்டது. மக்கள் மகா தீங்கையும் கொடிய வேதனையையும் அனுபவிக்கிறார்கள் என்று கேள்விப்பட்டபோது, அவன் அழுது துக்கித்து உபவாசித்து பரலோகத்தின் தேவனை நோக்கி மன்றாடி ஜெபித்தான். அப்பொழுது இடிக்கப்பட்ட அலங்கங்கள் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டது. கொழுத்தப்பட்ட வாசல்கள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. நகரம் கட்டப்பட்டது. மக்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி ஏற்பட்டது. இன்று இடிந்து பாவத்தில் கிடக்கும் நம் சரீரம், குடும்பம், ஆவிக்குரிய வாழ்க்கை மீண்டும் கிறிஸ்துவுக்குள் கட்டப்பட்ட உபவாசம் தேவை.

நாம் எவ்வாறு உபவாசிக்க வேண்டும்

மாதத்தில் ஒரு நாள் அல்லது வாரத்தில் ஒரு நேரம் அல்லது தேவன் நம் உள்ளத்தில் கொடுத்த பாரத்திற்கு ஏற்றப்படி உபவாக நாளை, நேரத்தைத் தீர்மானிக்க வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் (நோயைத் தவிர) உபவாச நாளை, நேரத்தை நாம் மாற்றக்கூடாது. சோம்பலுக்கும் சோர்வுக்கும் இடம் கொடாமல் முடிந்தவரை குளித்து எண்ணை பூசி, சுத்தமாக இருப்பது நல்லது, ஏற்றது. அதிக நேரம், நாட்கள் இருந்தால் அவசியப்பட்டால் தண்ணீர் குடிக்கலாம். இயேசுவைப் போல், எஸ்தரைப் போல், மோசேயைப் போல் ஒன்றும் குடிக்காமல். சாப்பிடாமல் இருப்பது நல்லது. உடல் நிலை அதற்குச் சாதகமாக இல்லாவிட்டால் ஏதாவது கொஞ்சம் நீர் அருந்தலாம். இல்லாவிட்டால் சரீர சுகம் பாதிக்கப்படலாம் (சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பார்கள்) உபவாசம் செய்கிறேன் என்று மற்றவர்கள் நம்மைக் கண்டு பரிசுத்தமாய் நினைப்பார்கள் என்று நினைத்து சரீர சுகத்தைக் கெடுத்துக் கொள்ளக்கூடாது. இதில் சற்று ஞானத்தோடு நடந்து கொள்ள வேண்டும்.

சிலர் உபவாசத்தின் போது சோறு, கறி மட்டும் சாப்பிடமாட்டார்கள். அதற்குப் பதில் பால் பழரசம் இட்லி தோசை சாப்பிடுவார்கள். இது உபவாசமில்லை. சாப்பாட்டை விட இதில்தான் சத்து அதிகம் இருக்கிறது. சாப்பிடாமல் இருப்பதுதான் உபவாசம்.

உபவாசத்தன்று பெரும்பாலும் நாம் எந்த வேலையிலும் தலையிடாமல் தனிமையில் சென்று அல்லது குடும்பமாக அல்லது கூடி ஜெபிக்கலாம். தேவ சந்நிதானதில் காத்திருந்து, தெய்வத்தோடு நம்மை இணைக்கக் கூடிய பல சிறந்த பாடங்களைப் பாட வேண்டும். வேதத்திலிருந்து பல பாகங்களைப் படித்து தியானிக்க வேண்டும். பரிசுத்த ஆவியில் நிறைந்து, நம்மைத் தாழ்த்தி பாவ அறிக்கை செய்து, தேவனுடைய முகத்தைத் தேடி ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். ஆவியோடும் கருத்தோடும் நம் பரிசுத்த வாழ்வுக்காக, நம் உற்றார் உறவினர் நண்பர்களின் இரட்சிப்பு மற்றும் நல்வாழ்வுக்காக, தேவ ஊழியர்கள் ஊழிய ஸ்தாபங்கள் தேசத் தலைவர்களின் இரட்சிப்புக்காகத் தேசத்தின் சமாதானத்திற்காக, உலக சமாதானததிற்காக, பஞ்சம் பசி பட்டினியில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, ஜாதி மத கலவரங்கள் ஒழிந்து போக, வெள்ளம் பூமி அதிர்ச்சி பூகம்பகம் கலவரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, மதத் தலைவர் அரசியல் தலைவர்களுக்காக, நோயாளிகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மரணத்தோடு போராடும் நோயாளிக்காக, வேலை இல்லாதவர்களுக்கு வேலை கிடைக்க, திருமணம் ஆகாதவர்களுக்குத் திருமணமாக, குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைக் கிடைக்க, முதியோர்களின் நல்வாழ்வுக்காக, கல்வி பயிலும் பிள்ளைகளுக்காக, பல்வேறு பட்ட ஊழியங்களுக்காக, இன்னும் தேவன் உங்கள் உள்ளத்தில் தரும் பாரங்களுக்காக ஜெபிக்கலாம். இப்படி ஜெபிக்கும் போது இடை இடையே பாடல்களையும் பாடி ஜெபிக்கலாம். சோர்வுக்கும் நித்திரைக்கும் இடம் கொடுக்காமல் விசுவாசத்தோடு, கரிசனையோடு ஜெபிக்கும்போது தேவன் நம் உபவாச ஜெபத்தை அங்கீகரித்து பலன் தருவார். நம்மையும் ஆசீர்வதிப்பார். நாம் ஒவ்வொருவரும் உபவாச நாளை, நேரத்தை நியமித்து, குடும்பமாகச் சேர்ந்து, பலர் கூடி ஜெபித்து பெரிய தேவ ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ளுவோம்.

8

ஏன் ஜெபிக்க வேண்டும்

கிறிஸ்தவ வாழ்க்கையில் வெற்றியின் இரகசியத்திற்குக் காரணம் ஜெபமே. ஜெபம் என்பது தேவனோடு பேசுவதாகும். ஜெபம் மனிதனையும் தேவனையும் இணைத்து வைக்கும் சங்கிலித்தொடர், மனிதனையும் தேவனையும் இணைக்கும் ஏணி. "உயிருள்ள ஆத்துமா ஊக்கமாக தேவனிடத்தில் கதறும் வேண்டுதலே ஜெபம்" என்று பவுண்ட்ஸ் கூறுகிறார். "சர்வ வல்லவரின் தசைகளை அசைக்கும் சிறிய நரம்புகள் ஜெபம்" என்று ஸ்பர்ஜன் என்ற தேவனுடைய ஊழியர் கூறுகிறார். நாம் ஜெபம் செய்தால் தேவன் நம்மோடு பேசுவார். ஜெபிக்கும் போது. தேவ தரிசனம் பெற்றுக் கொள்ள முடிகிறது. ஜெபமில்லாத கிறிஸ்தவ ஜீவியம் அனலற்ற ஜீவியம் தான். ஜெபம் குறையும் போது ஒருவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கையும் அனலற்றதாக மாறுகிறது. ஜெபமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்.

ஜெபம் பண்ணுவது தேவனுடைய கட்டளை

"சோதனைக்குட்படாதபடி விழித்திருந்து ஜெபியுங்கள்" (மத்தேயு 26:41) என்று இயேசு சீஷர்களைப் பார்த்து கெத்செமனே தோட்டத்தில் கூறுகின்றார். அறுப்புக்கு எஜமான் தமது "அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக் கொள்ளுங்கள்" என்று கூறுகிறார். "எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்" என்று கூறுகிறார். எனவே ஜெபிக்க வேண்டுமென்பது தேவ கட்டளை.

இயேசு ஜெபித்தார்

நம் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவே தனது வாழ்க்கையின் பெரும்பகுதியை ஜெபத்தில் கழித்தார் என்று வேதத்தில் காண்கிறோம். இயேசு வனாந்திரமான ஓரிடத்திற்குப் போய் அங்கே ஜெபம் பண்ணினார் (மாற்கு 1:35). இயேசு சீஷர்களுடன் ஒலிவமலையில் ஜெபித்தார். இயேசு கெத்செமனே தோட்டத்திற்கு சீஷர்களை அழைத்துச் சென்று மனுக்குலத்தின் இரட்சிப்புக்காகப் போராடி ஜெபித்தார். (மத் 26:40). இரத்தத்தின் பெருந்துளிகள் வேர்வையாகத் தரையில் ஜெபித்தார்.

இயேசு முழங்கால் படியிட்டு ஜெபித்தார். எனவே இயேசுவைப் பின்பற்றும் அவருடைய பிள்ளைகளாகிய நாமும் அவரைப் போல ஜெபிக்க வேண்டும்.

பரிசுத்த பவுல்

விழித்திருந்து ஜெபியுங்கள். ஸ்தோத்திரத்துடன் ஜெபியுங்கள், இடைவிடாமல் ஜெபியுங்கள் என்று பரிசுத்த பவுல் கொலோசெயர் நிருபத்தில் கூறுகிறார். பரிசுத்த ஆவியில் நிறைந்து ஜெபிக்க வேண்டும் என்று கூறுகிறார். சகல பரிசுத்தவான்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும் (எபே 6:18) என்று கூறுகிறார். "சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்குக் கிடைக்கும்படி எனக்காக ஜெபியுங்கள்" என்று பரிசுத்த பவுல் கேட்கிறார்.

தீமோத்தேயு

"எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணுங்கள்" (தீமோ 2:1). இராஜாக்களுக்காகவும் அதிகாரமுள்ள யாவருக்காகவும் ஜெபம் பண்ண வேண்டும் என்று தீமோத்தேயு கூறுகின்றார். (1தீமோ 2:2).

யாக்கோபு

"நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாய் இருக்கிறது" என்று யாக்கோபு கூறுகிறார்.

எனக்கு அன்பான தேவ பிள்ளையே, மேற்கண்ட வசனங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது இயேசு ஜெபிக்க வேண்டும் என்று கட்டளை கொடுக்கிறார். பரிசுத்தவான்களாகிய பவுல் தீமோத்தேயு யாக்கோபு என்பவர்களும் இதை வலியுறுத்துவதைக் காண்கிறோம்.

ஜெபிக்காவிட்டால் பாவம் செய்கிறோம்

"நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பினால் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறவனாயிருப்பேன்" (சாமு 12:23) என்று சாமுவேல் தீர்க்கதரிசி கூறுகின்றார். எனக்கு அன்பான தேவ பிள்ளையே, நீயும் நானும் ஜெபிக்காவிட்டால் தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்கிறோம். என்பதை நாம் ஒருபோதும் மறக்கக்கூடாது.

தொட்டு தாலிகட்டிய கணவன் அல்லது மனைவி, பத்து மாதம் சுமந்து பெற்று நல்லமுறையில் சீராட்டி பள்ளியில் படிக்க வைத்த நம் அன்புப் பிள்ளைகள் அல்லது நாம் நேசிக்கும் ஆருயிர் நண்பர்கள் முகத்தை ஒருநாள் பார்க்காவிட்டால் அல்லது அவர்கள் நம்மோடு பேசாவிட்டால், நமக்கு எவ்வளவு மன வேதனையாக இருக்கிறது"

அதுபோலவே நம்மை இரட்சித்து, தினமும் நம்மோடிருந்து, வழி நடத்திவரும் நம் பரம பிதாவுடன் நாம் ஒரு நாள் பேசாவிட்டால் அவருக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும் நமக்கு உணவு உடை இருப்பிடம் கல்வி உத்தியோகம் செல்வாக்கு குடும்ப வாழ்க்கை மற்றும் சகல நன்மைகளையும் தந்து, ஆபத்து விபத்து நாசம் மோசம் கண்ணீர் வியாதி மரணத்திற்குத் தப்புவித்து பாதுகாத்து வரும் நம் தேவனோடு நாம் பேசாவிட்டால் அவருக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும். ஆகையால் நாம் ஜெபிக்காவிட்டால் தேவனுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறோம். இதை நாம் மறக்கக்கூடாது.

தேவன் நம் ஜெபத்தைக் கேட்பவர்

"நீங்கள் ஜெபம் பண்ணும் போது எவைகளைக் கேட்டுக் கொள்வீர்களோ அவைகளைப் பெற்றுக் கொள்ளுவோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன்! கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்! பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயமல்லவா?" (மத் 7:7,11)

தேவ பிள்ளையே, நாம் ஜெபத்தின் மூலம் தேவனிடம் நம் வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் தெரிவிக்கும்போது தேவன் அதை நிச்சயம் நமக்குத் தருவார்.

தேவ தரிசனம் கிடைக்கிறது

ஜெபிக்கும்போது தேவன் பல காரியங்களை நமக்கு வெளிப்படுத்துகிறார். தரிசனங்கள் கிடைக்கிறது என்பதையும் வேதத்தில் காண்கிறோம்.

கொர்நேலியு ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கும்போது தேவ தரிசனம் பெற்றான். "உன் ஜெபங்களும் உன் தருமங்களும் தேவனுக்கு நினைப்பூட்டுதலாக அவர் சந்நிதியில் வந்தெட்டியிருக்கிறது" என்று தேவ தூதன் கூறினார். தானியேல் ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கும்போது காபிரியேல் தூதன் தனியே வந்து, "தானியேலே உனக்கு அறிவை உணர்த்தும்படி இப்பொழுது புறப்பட்டு வந்தேன் "நீ மிகவும் பிரியமானவன், ஆதலால் நீ வேண்டிக் கொள்ளத் தொடங்கின போதே கட்டளை வெளிப்பட்டது. நான் அதை அறிவிக்க வந்தேன்" என்றார். (தானி 9:21,23) தேவ பிள்ளையே, நீ தேவனோடு ஒன்றானக் கலக்கும் போது தேவன் உன்னோடு பேசுவார். பல இரகசியங்களை உனக்கு வெளிப்படுத்துவார்.

எவ்வாறு ஜெபிக்க வேண்டும்?

[illegible]

எவைகளுக்காக ஜெபிக்க வேண்டும்?

[illegible]

ஜெபத்தின் பலன்கள்

[illegible]

[illegible] Prayer Brings Victory [illegible]

ஏன் வேதம் வாசிக்க வேண்டும்? 9

தேவன் நம்மோடு பேசுவது வேதத்தின் மூலம்தான். நாம் தேவனோடு பேசுவது ஜெபத்தின் மூலம். தேவன் தம்முடைய நோக்கங்கள், திட்டங்களை வெளிப்படுத்துவது வேதத்தின் மூலம்தான். வேதம், விஞ்ஞானம் வரலாறு பகுத்தறிவு இம்மூன்றுக்கும் முரண்படாத ஒன்று சூரியன் சந்திரன் நட்சத்திரங்கள் பூகோளம், இயற்கை அமைப்பு ஆகிய எல்லாவற்றையும் "வேதத்தில் விஞ்ஞானத்தின் அடிப்படையில் காணலாம். தேசங்கள் அரசர்கள் ஆட்சிமுறைகள் கிறிஸ்துவுக்குமுன்னும் கிறிஸ்துவுக்குப் பின்னும் நடந்த சம்பவங்களைக் காணும்போது சரித்திரத்தை அறிந்து கொள்ள முடிகிறது. மனிதன் ஏற்றுக் கொள்ளக்கூடிய சத்தியங்கள் மனிதவாழ்க்கைக்கு வேண்டிய நெறி முறைகள் ஆலோசனைகள் மற்றும் அறிவுக்கு ஏற்றதாகவும் ஒப்புக் கொள்ளக் கூடியதாகவும் இருக்கிறது. வேதம் முக்காலத்திற்கும் உரியது என்பது எல்லோரும் ஒப்புக் கொண்ட ஓர் உண்மையாகும்.

வேதம் - "ஆதியிலே வார்த்த இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது". "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால்" அருளப்பட்டிருக்கிறது. தேவ பிள்ளையே, வேதத்திலுள்ள அத்தனை வார்த்தைகளும் பரிசுத்த ஆவியானவரால், தேவ பிள்ளைகளின் மூலமாய் எழுதப்பட்டவைகளே.

எதற்காக எழுதப்பட்டது?

"தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத்தகுதியுள்ளவனாகவும் இருக்கவும் அவைகள் உபதேசத்துக்கும் கடிந்து கொள்ளுதலுக்கும் சீர்த்திருத்தலுக்கும் நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஸனமுள்ளவைகளாயிருக்கிறது" "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும் இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவுக்குத்துகிறதாயும் இருதயத்தில் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும், இருக்கிறது" (எபி 4:12) " நான் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது". (யோ 6:63).

போதிக்க வேண்டிய விதம்

"ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின் படி போதிக்கக் கடவன்" வேதவாக்கியங்களோடு தனக்கு விருப்பமான வார்த்தைகளை சேர்த்து கொண்டு பேசவே கூடாது. வேதத்தில் என்ன எழுதியிருக்கிறதோ அப்படியே போதிக்க வேண்டும். அதைச் சார்ந்த கருத்துக்களாகவே இருக்க வேண்டும்.

எப்படி வேதத்தைப் போதிக்க வேண்டும்?

"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு". வேத வசனத்தை நாம் மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும் என்கிறார் பவுல். (2தீமோ 4:2).

வேதம் ஏன் படிக்க வேண்டும்?

வேதம் பாவிகளை மனந்திரும்ப வைக்கிறது (சங் 51:13), பேதைகளை உணர்வுள்ளவர்களாக்குகிறது (சங் 119:130). கண்களைத் தெரிவிக்கிறது. கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது. பேதையை ஞானியாக்குகிறது. இருதயத்தை சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. வசனம் கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. சங் (119:105).

வேதத்தின் படி நடந்தால்

"நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்". என் வசனத்தைக் கேட்டு என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. "தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதைக் கைக் கொள்ளுகிறவர்களோ அதிக பாக்கியவான்கள்". "என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப்பார்ப்பேன்". "இந்த நியாயப் பிரமாண புஸ்தகம் உன் வாயை விட்டுப் பிரியாதிருப்பதாக. இதில் எழுதியிருக்கிறவைகளின் படி எல்லாம் நீ செய்ய கவனமாயிருக்கும்படி இரவும் பகலும் அதை தியானித்துக் கொண்டிருப்பாயாக. அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய். அப்பொழுது புத்திமானாயும் நடந்து கொள்ளுவாய்". (யோசு 1:8).

வேதத்தின் படி நடக்காவிட்டால்

"திருவசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான்" (நீதி 13:13) "அவருடைய வார்த்தைகளை அசட்டை செய்து அவருடைய தீர்க்கத்தரிசிகளை நிந்தித்த படியால் கர்த்தருடைய உக்கிரமம் அவருடைய ஜனத்தின்மேல் மூண்டது". "இந்த ஜனங்கள் என் வார்த்தைகளைக் கேளாமலிருந்து என் நியாயப் பிரமாணத்துக்குச் செவி கொடாமல் அதை வெறுத்து விடுகிறார்கள். அவர்கள் மேல் தீங்கை வரப்பண்ணுவேன். அவர்கள் கர்த்தருடைய வேதத்தை வெறுத்து அவருடைய கட்டளைகளைக் கைக் கொள்ளாமல் மோசம் போனார்கள்" (ஆமோ 2:4) "நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய். ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்". (ஓசியா 4:6).

வேதத்தைப் படிக்க வேண்டியவிதம்

கடிதம் - நாம் அதிகமாக நேசிக்கும் ஒரு நபர் நமக்கு ஒரு கடிதம் எழுதுகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். நாம் அவசரமாக வேலைக்குப் புறப்பட்டு வெளியில் வரும் சமயத்தில் கையில் கிடைத்தது என்றால், என்ன செய்வோம். எப்படியாவது வாசித்து விடவேண்டும் என்ற ஆசை, ஆத்திரத்தில் பட பட என்று பிரித்து அவசரமாக வாசித்து விட்டு பைக்குள் வைத்துவிட்டு. அலுவலகம் சென்று விடுவோம். நாம் உட்காரும் இடத்தில் அமர்ந்து, அந்தக் கடிதத்தை அவசர அவசரமாகப் படித்த படியினால் மீண்டும் அதை எடுத்து ஒரு முறை படிப்போம். வேலை நேரத்தை வீணாக்கக்கூடாது. யாரும் பார்த்துவிட கூடாது என்று மறுபடியும் வீட்டிற்கு மடித்து பைக்குள் வைத்துக் கொள்வோம். மறுபடியும் வீட்டிற்கு வந்ததும் குனிந்து அந்தக் கடிதத்தை எடுத்து வரிவரியாக, வார்த்தை வார்த்தையாகப் படித்து மகிழ்வோம். அது போலத்தான் வேதத்தையும் கருத்தாக வாஞ்சையோடு படிக்க வேண்டும்.

மீன்

உங்கள் கையில் அதிகமான முள் உள்ள வாளை மீனைப் போல் ருசியான ஒரு மீன் துண்டைக் கொடுத்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்? முழுவதும் முள்ளாக இருக்கிறது என்று சாப்பிடாமல் வைத்து விடுவீர்களா? முதலாவது அதிலுள்ள சதையை எடுத்து ருசித்துச் சாப்பிடுவீர்கள். அதற்குமேலும் ருசியாக இருந்தால் முள்ளை மென்று சாறை விழுங்குவீர்கள். அதற்கு மேலும் ருசியாக இருந்தால் சுவைத்து முள்ளைக் கூட சாப்பிட்டு விடுவோம். அதைப்போல் தான் வேதபுத்தகத்திலும் சில கடினமான பகுதிகள், புத்தகங்கள், வசனங்கள் இருந்தாலும், அவற்றைப் படிக்காமல் இருக்ககூடாது. கருத்தாக நிதானமாக அதின் அர்த்தத்தை சரியாக புரிந்து படிக்க வேண்டும். "பெரெயா பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டு தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்ததினால் தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப் பார்க்கிலும் நற்குண சாலிகளாயிருந்தார்கள்" (அப் 17:11). நாமும் அவர்களைப் போல இருக்கவேண்டும்.

எப்போது படிக்க வேண்டும்

அதிகாலையில் நாம் ஜெபத்தை முடித்துவிட்டு வேதம் வாசிக்க வேண்டும். வேதம் வாசித்து முடித்து விட்டுதான் மற்றவேளைகளைச் செய்ய வேண்டும். "நேரம் கிடைக்கும் போதெல்லாம் வேதம் வாசிக்கிறேன்" என்று சொல்லக் கூடாது. இஸ்ரவேல் ஜனங்கள் சூரியன் உதயமாவதற்கு முன்பே மன்னாவை சேகரிக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிட்டார். சூரியன் உதயமாகிவிட்டால் மன்னா உருகி போகும். ஆகையால் மற்ற காரியங்கள் நம்மைச் சூழ்ந்து கொண்டு வேதம் வாசிக்க விடாமல் தடை செய்வதற்கு முன்பு, நாம் வேதம் வாசித்து

முடித்து விடவேண்டும். "முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கொடுக்கப்படும்" (மத் 6:33). இரவு தூங்குவதற்கு முன்பும் ஒரு சில அதிகாரங்களாவது படித்து விட்டு நித்திரைக்குச் செல்லவேண்டும். குறைந்தது ஒரு நாளைக்கு 5 அதிகாரங்களாவது படிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டில் ஒரு அதிகாரம், சங்கீதத்தில் ஒரு அதிகாரம், நீதிமொழி, மற்றும் அதற்குமேல் எத்தனை அதிகாரம் வேண்டுமானாலும் படிக்கலாம். கிரமமாக குறித்து வைத்துப் படிக்கவேண்டும். எவ்வளவு மனப்பாடம் செய்வது நல்லது. எத்தனை முறை வேத புத்தகத்தை முழுமையாகப் படித்து முடிக்க முடியுமோ அத்தனை முறை படித்து முடிப்பது நல்லது. "இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்" (சங் 1:2).

வேதவசனம் எப்படிப்பட்டது?

1. "என் வார்த்தை அக்கினியைப்போலும் கன்மலையை நொறுக்கும் சம்மட்டியைப் போலும் இருக்கிறது" (எரே 23:29). "வேத வசனமாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்துக் கொள்ளுங்கள்" (எபே 6:17). "அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல் என் இருதயத்தில் இருந்தது." (எரே 20:9). "நீங்கள் வளரும்படி புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப் போல திருவசனமாகிய ஞானப்பாலின் மேல் வாஞ்சையாயிருங்கள். (1பேதுரு 2:3) "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையுமாய் உள்ளதாயும் இருபுறமும் கருக்குள்ள எந்த பட்டயத்திலும் கருக்கானதாயும் ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" (எபி 4:12). இன்றைய உலகில் அதிகமான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட நூல் வேதபுத்தகம் தான். இன்று 1650 மொழிகளில் வேதபுத்தகம் அச்சிடப்பட்டுள்ளது. உலகில் அதிகம் விற்பனையாகும் புத்தகமும் இந்த வேதபுத்தகம் தான்.

"உமது வசனத்தைத் தியானிக்கும்படி குறித்த ஜாமங்களுக்கு முன்னே என் கண்கள் விழித்துக் கொள்ளும்" (சங் 119:148). "உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானம் உண்டு" (சங்119:165) "உமது வேதம் என் மனமகிழ்ச்சியாயிராதிருந்தால் என் துக்கத்திலே அமிழ்ந்து போயிருப்பேன். உம்முடைய கட்டளைகளை நான் கைக்கொண்டிருக்கிறபடியால் "முதியோர்களைப் பார்க்கிலும் ஞானமுள்ளவனாயிருக்கிறேன்" (சங் 119:100). உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும் என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங் 119:105). "உம்முடைய வேதத்தை மனுஷர் காத்து நடவாதபடியால் என் கண்களிலிருந்து நீர்த்தாரைகள் ஓடுகிறது." (சங் 119:136). ஆகையால் நாம் வேதத்தை நேசித்து, வாசித்து, தியானித்து அதன்படி நடக்க வேண்டும்.

ஏன் விசுவாசிக்க வேண்டும் 10

விசுவாசம் என்றால் என்ன?

"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" (எபிரே 11:1). நாம் காற்றைக் காண முடியாது. ஆனால் காற்று வீசும் போது மரம் அசைவதைப் பார்க்கமுடிகிறது. மின்சாரத்தைக் கண்களால் பார்க்க முடியாது. ஆனால் மின்சார சக்தியால் விளக்கு எரிவதையும் இயந்திரங்கள் ஓடுவதையும் காண முடிகிறது. என் தந்தை எனக்கு யார் என்று தெரியாது. ஆனால் என் தாய் இதுதான் உன் தந்தை என்று கூறுகிறதை நம்பிதான் "அப்பா" என்று அழைக்கிறோம். அதுபோலத்தான் தெய்வம் உண்டு என்றும் மெய்யான தெய்வம் இயேசு கிறிஸ்துதான் என்றும் விசுவாசிக்க வேண்டும். "தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும். (எபி 11:6).

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்" (எபி 11:6). நாம் தேவனை நம்பாவிட்டால் எப்படி தேவனுக்குப் பிரியமாயிருக்க முடியும். இயேசு தேவகுமாரன் என்றும் அவர் பாவிகளை (என்னை, நம்மை, மனுக்குலத்தை) இரட்சிக்க வந்தவர் என்றும் சிலுவையில் மரித்தார் அடக்கம் பண்ணப்பட்டார். மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார் என்றும், நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார் என்றும், ஒருநாள் இந்த உலகத்தை நியாயம் தீர்க்க வருவார், நம்மை அவரோடு வாசம் பண்ண பரலோகத்திற்கு அழைத்துச் செல்வார் என்றும் விசுவாசிக்க வேண்டும். இப்படி அவரை விசுவாசிக்காவிட்டால் எப்படி அவருக்குப் பிரியமாயிருக்க முடியும்? நம் விசுவாசம் தேவன் மீதா? அல்லது உலகத்தின் மீதா?

கெட்டுப் போவீர்கள்

"நானோ ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப் போயிருப்பேன்" (சங் 27:13). "நீங்கள் விசுவாசியாவிட்டால் நிலைபெற மாட்டீர்கள் என்று சொல்" (ஏசா 7:9). "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத்

தீர்க்கப்படுவான்" (மாற் 16:16). "நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்" (யோவா 8:24). "அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டான், விசுவாசியாதவனோ தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாச முள்ளவனாயிராதபடியினால் அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று" (யோ 3:18) "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான். குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைத்திருக்கும் என்றார்" (யோ 3:36). விசுவாசியாதவனோ தேவன் தம்முடைய குமாரனைக் குறித்துக் கொடுத்த சாட்சியை விசுவாசியாததினால் அவரைப் பொய்யராக்குகிறான் (1யோவா 5:16).

எனக்கு அன்பானவர்களே, மேற்கூறிய வசனங்களை நாம் தியானித்துப் பார்க்கும் போது தேவன் பேரில் விசுவாசம் இல்லாவிட்டால் நாமும் கெட்டுப்போவோம். நிலைத்து நிற்கமாட்டோம், ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவோம். நம் பாவங்களில் அழிவோம், நித்திய ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் நம்மேல் நிலைத்திருக்கும் என்று பார்க்கிறோம். இப்படிப்பட்டவர்கள் எப்படி தேவனுக்குப் பிரியமாய் இருக்க முடியும்? எனவே தான் "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்" என்கிறார்.

பலவிதமான விசுவாசம்

1. நீங்கள் எல்லாரும் **கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால்** தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே (கலா 3:26).
2. நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப் போல **அருமையான விசுவாசத்தைப்** பெற்றவர்களுக்கு (2பேதுரு 1:1).
3. விசுவாசத்திலே **ஆரோக்கியமுள்ளவர்களாயிருக்கும்படி** நீ அவர்களைக் கண்டிப்பாய்க் கடிந்து கொள் (தீத்து 1:14).
4. இயேசு அவளுக்குப் பிரதியுத்திரமாக ஸ்திரியே, **உன் விசுவாசம் பெரிது,** நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார். (மத் 15:28).
5. உங்கள் **மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல்** உங்களை உறுதிப்படுத்திக் கொண்டு (யூதா 1:20).
6. சுத்தமான இருதயத்திலும் நல் மனசாட்சியிலும் **மாயமற்ற விசுவாசத்திலும்** பிறக்கும் அன்பே (1தீமோ 1:5)
7. அதற்குப் பிலிப்பு நீர் **முழு இருதயத்தோடும் விசுவாசித்தால்** தடையில்லையென்றான் (அப் 8:31).

8. அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும், அதைப் பார்க்கிலும் அதிக **விலையேறப் பெற்றதாயிருக்கிற** உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு (1பேது 1:5).

9. கடுகு **விதையளவு** விசுவாசம் உங்களுக்கு இருந்தால் நீங்கள் இந்த மலையைப் பார்த்து இவ்விடம் விட்டு அப்புறம் போ என்று சொல்ல அது அப்புறம்போகும் (மத் 17:20)

10. உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து **அற்ப விசுவாசியே, ஏன்** சந்தேகப்பட்டாய் என்றார். (மத் 14:31).

11. அப்படியே **விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால்** தன்னிலே தானே செத்ததாயிருக்கும் (யாக் 2:17).

12. பவுல் பேசுகிறதைக் கேட்டுக் கொண்டிருந்தான். அவனைப் பவுல் உற்றுப் பார்த்து **இரட்சிப்புக்கேற்ற விசுவாசம்** அவனுக்கு உண்டென்று கண்டு (அப் 14:9).

மேற்கண்ட வசனங்களை வாசிக்கும் போது நம்மிடம் எப்படிப்பட்ட விசுவாசம் காணப்படுகிறது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். நம்மிடம் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசம், இரட்சிப்புக் கேற்ற விசுவாசம், பெலனுள்ள, மகா பரிசுத்தமான, விலையேறப் பெற்ற, கிரியையுள்ள விசுவாசமே காணப்படவேண்டும் என்று நம் தேவன் விரும்புகிறார்.

விசுவாசத்தினால் கிடைக்கும் பலன்கள்

1. இயேசு திரும்பி அவனைப்பார்த்து, மகனே திடன் கொள், உன் விசுவாசம் **உன்னை இரட்சித்தது** என்றார் (மத் 9:22)

2. விசுவாசத்தினாலே அவர்கள் **இருதயங்களை அவர் சுத்தமாக்கி** நமக்கும் அவர்களுக்கும் யாதொரு வித்தியாசமும் இராதபடி செய்தார். (அப் 15:9).

3. ஆதலால் மனுஷன் நியாயப் பிரமாணத்தில் கிரியைகளில்லாமல் **விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுகிறான்** என்று தீர்க்கிறோம் (ரோமர் 3:28).

4. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் **விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே** (கலா 3:26)

5. **விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்** (எபி 10:38)

6. நம்முடைய **விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.** (1யோ 5:4)

மேற்கூறிய வசனங்களை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது விசுவாசத்தினால் மட்டுமே நாம் இரட்சிக்கப்படக் கூடும் என்று காண்கிறோம். விசுவாசத்தினால் இருதயம் பரிசுத்தமாக்கப்படுகிறது. விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான், விசுவாசத்தினாலேயே தேவனுடைய புத்திரராகும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். விசுவாசத்தினாலே நீதிமானாக்கப்படுகிறோம், விசுவாசத்தினாலே உலகத்தை (பாவம் சோதனை இச்சையை) ஜெயிக்க முடியும் என்பதையும் காண்கிறோம்.

சில தேவ தாசர்களின் விசுவாசம்

நோவா – உலகத்தில் பாவம் பெருகியது. தேவன் மனிதனைப் படைத்ததற்காக மனஸ்தாபப்பட்டார், அழிக்க சித்தம் கொண்டார். நோவாவின் குடும்பம் மட்டும் அவருடைய பார்வைக்கு நீதிமானின் குடும்பமாகக் காணப்பட்டது. உலகத்தை ஜலத்தினால் அழிக்கப் போகிறேன். ஒரு பேழையை உண்டு பண்ணு "மனந்திரும்பு" என்று பிரசங்கம் பண்ணு: மனந்திரும்பியவர்களையும் சில மிருக ஜோடி ஜீவன்களையும் பேழைக்குள் ஏற்றிக்கொள், மற்றவர்கள் ஜலப் பிரளயத்தில் அழிவார்கள் என்றார். நோவா தேவனுடைய வார்த்தையை அப்படியே விசுவாசித்தான். கீழ்படிந்து பேழையைக் கட்டினான். சொன்னபடியே பிரசங்கித்தான். அவன் வார்த்தைக்குக் கீழ்படிந்தவர்களைப் பேழைக்குள் ஏற்றினான். சில மிருக ஜோடி ஜீவன்களும் பிரவேசித்தது. நோவாவின் முழு குடும்பமும் உள்ளே பிரவேசித்தனர். தேவன் பேழையின் கதவை அடைத்தார். நாற்பது நாட்கள் இரவும் பகலும் மழை பெய்தது. பூமியின் ஊற்றுக் கண்கள் திறவுண்டன. ஜலப் பிரளயத்தில் மனுக்குலம் முழுவதும் அழிந்தது நோவாவின் குடும்பம் மட்டும் காப்பாற்றப்பட்டது. காரணம் தேவனுடைய வார்த்தையை அவன் விசுவாசித்தான், கீழ்படிந்தான்.

ஆபிரகாம் - தேவன் ஆபிரகாமை நோக்கி நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுவிட்டுப் புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்" (ஆதி 12:23) என்று சொன்னார். அப்பொழுது ஆபிரகாமுக்குப் பிள்ளை இல்லை.

ஆனால் ஆபிரகாம் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து, கீழ்ப்படிந்து புறப்பட்டுச் சென்றான். "உன் சந்ததியை வானத்து நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் பலுகிப் பெருகப் பண்ணுவேன்" என்றார். நூறு வயதில் ஈசாக்கு பிறந்தான். செல்வமும் சீரும் சிறப்புமாக வளர்ந்து வந்தான். ஒருநாள் தேவன் ஆபிரகாமை அழைத்து, "உன் ஏக சுதனை மோரியா மலைக்கு அழைத்துச் சென்று தகனப்பலியிடு" என்றார். ஆபிரகாம் எந்த முறுமுறுப்பும் மறுப்புமின்றி அழைத்துச் சென்றான். மலை அடிவாரத்திற்கு வந்ததும் தன் வேலைக்காரரைப் பார்த்து, "நீ இங்கேயிரு, தானும் பிள்ளையாண்டானும் போய், தொழுது கொண்டு திரும்பி வருவோம் என்றான். நிச்சயமாய்ப் பலிசெலுத்தப் போகிறேன் திரும்பி வருவேன் என்று சொன்னார். அதற்கு காரணம் "வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் என் வார்த்தையில் ஒரு உறுப்பாகிலும் ஒழிந்து போவதில்லை" என்று சொன்ன தேவன் பொய்யுரையாத தேவன், வானத்து நட்சத்திரங்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் பலுகி பெருகச் செய்வேன் என்று சொன்ன தெய்வம் அப்படியே செய்வார் என்றும் விசுவாசித்தான். பலியிட கையை ஓங்கியபோது தேவன் நிறுத்தும்படி சொன்னார். தேவன் சொன்னப்படியே அவன் சந்ததியை ஆசீர்வதித்தார். ஆகையால்தான் ஆபிரகாம் விசுவாசியின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.

தானியேல்- அந்நிய தெய்வங்களை வழிபடக்கூடாது என்று அரசன் கட்டளையிட்டிருந்த போதிலும் தானியேல் அந்தி சந்தி மத்தியான வேளைகளில் எருசலேமுக்கு நேராக முழங்கால்படியிட்டு ஜெபம் பண்ணி ஸ்தோத்திரம் செலுத்தினான். அவனை சிங்கக் கெபியில் போடும் போது கூட விசுவாசத்தை விட்டு சற்றேனும் விலகவில்லை. தேவன் தூதனை அனுப்பி சிங்கத்தின் வாயைக் கட்டிப் போட்டார். சிங்கம் அவனைச் சேதப்படுத்தவில்லை. அவன் விசுவாசம் அவனை இரட்சித்தது.

சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ- பொற்சிலையை வணங்க சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ மறுத்தபோது, அக்கினி ஜ்வாலையில் அவர்களைத் தூக்கிப் போடும் போது கூட, நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். விடுவிக்காமற்போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதில்லை" என்றார்கள். எரிகிற அக்கினிச் சூளையின் நடுவில் போடப்பட்டார்கள். தேவன் தம்முடைய தூதனை அனுப்பி தம்முடைய தாசரை விடுவித்தார். அக்கினி அவர்களுக்குத் தீமை பெலன் செய்யவில்லை. அவர்கள் விசுவாசம் அவர்களை இரட்சித்தது.

யோபு – உத்தமன், சன்மார்க்கன், நீதிமான், பொல்லாப்புக்கு விலகி இருந்தவன். ஆனால் எல்லா ஆஸ்தி சொத்துக்களையும் இழந்தான். பிள்ளைகளையும் இழந்து அனாதையைப் போல் ஆனான். சரீரத்தில் கொடிய வியாதி. மனைவியும் தேவனைத் தூஷிக்கும்படிக் கூறினாள். ஆனாலும் யோபு தேவன் பேரிலுள்ள விசுவாசத்தை விட்டு கொஞ்சமும் விலகவில்லை. "தேவனிடத்திலிருந்து நன்மையைப் பெற்ற நாம் தீமையைப் பெற வேண்டாமோ? கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், அவருக்கு ஸ்தோத்திரம்" என்றும், "என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போன பின்பு நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்". அந்நிய கண்கள் அல்ல, என் கண்களே அவரை காணும் என்றார் (யோபு 19:25, 27). இதுதான் விசுவாசம்.

இயேசுகிறிஸ்துவும் விசுவாசமும்

திமிர்வாதக்காரன் (மத் 9:2,7)- அங்கே படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை இயேசுவினிடத்தில் கொண்டு வந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, திடன் கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது. உன் படுக்கையை எடுத்துக் கொண்டுபோ" என்றார். உடனே அவன் எழுந்து தன் வீட்டிற்குப் போனான்.

பெரும்பாடுள்ள ஸ்திரி (மத் 9:20-22) – அப்பொழுது 12 வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரி நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக் கொண்டு அவர் பின்னாலே வந்து அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். இயேசு திரும்பி அவளைப் பார்த்து "மகளே, திடன் கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்றார். அந்நேர முதல் அந்த ஸ்திரி சொஸ்தமானாள்.

இரண்டு குருடர்கள் (மத் 9:27,30) - இரண்டு குருடர் அவர்பின்னே சென்று "தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும்" என்று கூப்பிட்டார்கள். இயேசு அவர்களை நோக்கி: "இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா" என்று கேட்டார். அதற்கு அவர்கள் "ஆம், விசுவாசிக்கிறோம், ஆண்டவரே என்றார்கள்.

அப்பொழுது அவர்களுடைய கண்களைத் தொட்டு, "உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார். உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது.

கானானிய ஸ்திரி (மத் 15:22,28) - கானானிய ஸ்திரி ஒருத்தி இயேசுவினிடத்தில் வந்து, ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எனக்கு இரங்கும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப்படுகிறாள் என்றாள். இயேசு அவளுக்குப் பிரதியுத்திரமாக, "ஸ்திரியே, உன் விசுவாசம் பெரிது. நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது" என்றார். அந்நேரமே அவள் மகள் ஆரோக்கியமானாள்.

குஷ்டரோகி (லூக் 17: 12, 9) - இயேசு ஒரு கிராமத்தில் பிரவேசித்தபோது குஷ்டரோகமுள்ள பத்துபேர் அவருக்கு எதிராக வந்து தூரத்திலே நின்று, இயேசு ஐயரே, எங்களுக்கு இரங்குமென்று சத்தமிட்டார்கள். அவர்களை அவர் பார்த்து, "நீங்கள் போய், ஆசாரியர்களுக்கு உங்களை காண்பியுங்கள்" என்றார். அந்தப்படி அவர்கள் போகையில் சுத்தமானார்கள் ஒருவன் வந்து நன்றி கூறினான் அவனைப் பார்த்து "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்றார்.

லாசரு (யோ 11:21,45) – மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து, "ஆண்டவரே நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்க மாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக் கொள்வதெதுவோ அதை தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன்" என்றாள்...... "நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய்" என்று சொல்லி, "லாசருவே, வெளியே வா" என்றார்.... அவன் உயிரோடு வெளியே வந்தான்.

4 பேர் விசுவாசம் (மத் 9:1,7) – படுக்கையில் கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை இயேசுவினிடத்தில் கொண்டுவந்தார்கள். இயேசு (அந்த நாலுபேர்) அவர்கள் விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி "மகனே, திடன் கொள் உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது... நீ எழுந்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு உன் வீட்டிற்குப் போ" என்றார் அவன் உடனே எழுந்து தன் வீட்டுக்குப் போனான். 4 பேருடைய விசுவாசம் அவன் குணமடைய உதவியாக இருந்தது.

கிதியோன் (நியா 6:37,40) – கண்டு விசுவாசிக்கிறவன், காணாமல் விசுவாசிக்கிறவன். கிதியோன் தேவனிடம் நான் ஒரு தோலைக் களத்திலே போடுகிறேன், பனி தோலில் மாத்திரம் பெய்ய வேண்டும் என்றான். அப்படியே பெய்தது. மறுநாள் அந்தத் தோலில் மாத்திரம் பெய்யக் கூடாது என்றான் அப்படியே பெய்யவில்லை.

பரிசோதித்துப் பார்த்தபின்பு தேவனுடைய வார்த்தையை நம்பி [illegible] கிறிஸ்துவுடைய வார்த்தையை நம்பி [illegible] விசுவாசிக்கிறவனைக் [illegible] இதுதான் "[illegible] நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்" என்று (2கொரி 5:7). திமிர்வாதக்காரனைக் குறித்து [illegible] சொன்னதை [illegible] பார்த்து "உன் [illegible]" என்று [illegible] அவர் சொன்னதை விசுவாசித்து உடனே [illegible] யை உடனே [illegible] திமிர்வாதக் காரனைப் பார்த்து "உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட" என்றார். அவன் உடனே படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்தான். [illegible] இயேசுவால் [illegible] என்று [illegible] இயேசுவிடம் திராட்சரசம் குறைவுபட்டதைக் கூறினார்கள். அவருடைய [illegible] கீழ்ப்படிந்து நிரப்பினார்கள். கொண்டு வந்தார்கள். சாதாரண தண்ணீர் நிறமும் மணமும் ருசியும் உள்ள திராட்சரசமாக மாறியது. அவர் வார்த்தையை விசுவாசித்து கீழ்ப்படிந்து அவர் சொன்னபடியே செய்தார்கள். பெரும்பாடுள்ள ஸ்திரீ இயேசுவைப் பரிபூரணமாய் விசுவாசித்து, கூட்டத்தை நெரித்துக் கொண்டு வந்து அவர் வஸ்திரத்தின் தொங்கலைத் தொட்டாள். அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு வந்து அவள் உதிரத்தின் ஊறலை நிறுத்திவிட்டது. இதுதான் விசுவாசம். "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்" (யாக 5:15). "விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்" (1யோவா 5:4). நாமும் இயேசு கிறிஸ்து சர்வ வல்லமையுள்ள தேவன். அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். மனிதனால் கூடாதது தேவனால் கூடும் என்று முற்றிலுமாய் அவர்மீது விசுவாசம் வைக்க வேண்டும்.

சில விசுவாச வார்த்தைகள்

"விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (எபி 10:38). மேலும் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளைப் பெறுவீர்கள் (மத் 21:22). "இயேசு அவர்களை நோக்கி ஜீவ அப்பம் நானே என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான்" (யோ 6:35). "மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்கிறேன்" நான் என் பிதாவினிடத்திற்குப் போகிற படியினால் என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளை தானும் செய்வான்" இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான் (யோ 14:12). "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு

இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபே 2:8). "அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ள வர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்" (யோ 1:12). "இயேசு அவளை நோக்கி நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும பிழைப்பான் என்றார் (யோ 11:25).

தேவ பிள்ளையே, "நாம் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபி 12:1). நமக்குக் கிடைக்கும் "சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும் விசேஷமாக விசுவாசக்குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக்கடவோம்" (கலா 6:10). "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளிகளை இரட்சிக்கும். அவன் பாவம் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்" (யாக் 5:15). "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்" (1தீமோ 6:12). "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும். நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கும் ஜெயம்" (1யோ 5:4).

சில தேவ பிள்ளைகள்

விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டான் (எபி 11:5). விசுவாசத்தினாலே நோவா தற்காலத்தில் காணாதவைகளைக் குறித்து தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகி தன் குடும்பத்தை இரட்சிப்பதற்கு பேழையை உண்டு பண்ணினான் (எபி 11:7). "விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்றெண்ணி கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள் (எபி 11:11). "விசுவாசத்தினாலே ஈசாக்கு வருங்காரியங்களைக் குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான்" (எபி 11:20). விசுவாசத்தினாலே எரிகோ பட்டணத்தின் மதில்கள் ஏழு நாள் சுற்றிவரப்பட்டு விழுந்தது (எபி 11:30). கிதியோன் பாராக் சிம்சோன் யெப்தா தாவீது சாமுவேல் என்பவர்கள் விசுவாசத்தினாலே ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன் கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்".

மாறுபாடான விசுவாசம்

1 அற்ப விசுவாசிகளே ஏன் பயப்படுகிறீர்கள் (மத் 9:26)

2. விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயிருக்கும் (யாக்2:17)

நம் விசுவாசமும் முழுமையாக, பரிபூரணமாயிருக்க வேண்டும். குறைவுபட்ட அற்ப விசுவாசமாக இருக்கக் கூடாது. நம் விசுவாசம் கிரியையுள்ளதாக இருக்க வேண்டும். ஆபிரகாம் தானியேல் கிதியோன் போன்றவர்களின் விசுவாசம் கிரியைகளில் வெளிப்பட்டதை நாம் காண்கிறோம். நம் விசுவாசம் கிரியையுள்ளதாக இருக்கிறதா?

விசுவாசத்தைக் கேட்டுப் பெற்றுக் கொள்

"விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" (எபி 12:1). அப்பொழுது சீஷர்கள் கர்த்தரை நோக்கி எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ண வேண்டும் என்றார்கள் (லூக் 17:5) இவ்வசனங்களை ஆராய்ந்து பார்க்கும் போது நம்மிடத்தில் விசுவாசத்தை உருவாக்குகிறவர் இயேசு கிறிஸ்து என்றும் அந்த விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணுகிறவரும் அவர்தான் என்றும் பார்க்கிறோம். ஆகையால் நாம் இயேசு கிறஸ்துவை நோக்கி, "தேவனே என்னிடத்தில் இருக்கிற அவிசுவாசத்தை எடுத்துப் போட்டு, என்னை விசுவாசத்தினால் நிரப்பும். அந்த விசுவாசத்தில் முடிவு பரியந்தம் நிலைத்திருக்க கிருபை செய்யும்" என்று கேட்க வேண்டும். அப்படி கேட்கும் போது தேவன் நம்மை விசுவாசத்தினால் நிரப்புவார்.

பரிசுத்த பவுல் கூறுகிறார். நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன், இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது (2தீமோ 1:12) இன்று, பரிசுத்த பவுலைப் போல், நாம் ஆராதிக்கிற தேவன் சர்வ வல்லமையுள்ளவர், அவர் நம்மை எல்லா இக்கட்டுகளுக்கும் நீங்கலாக்கி இரட்சிக்கிறவர். நம் ஆத்துமதவை இரட்சிக்கிறவர். வழுவாதபடி நம்மை மாசற்றவர்களாய்க் காத்து அவர் சந்நிதியில் நிறுதத் வல்லவர் என்று விசுவாசிக்கிறோமா? கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் போது நாமும் "நம் வீட்டாரும் இரட்சிக்கப்படுவோம் (அப் 16:31). விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே (ரோம 14:23) என வேதம் கூறுகிறது. ஆகையால் நாம் விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய இயேசுவிடம் கேட்போம். தரிசித்துநடவாமல் விசுவாசித்து நடந்து, சகல ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் உலகப் பிரகாரமான ஆசீர்வாதங்களையும் பெற்று, நம் ஓட்டத்தை முடித்து விசுவாசத்தை காத்துக் கொண்டு தேவன் நமக்கென்று வைத்திருக்கும் நீதியின் கிரீடத்தைப் பெற்றுக் கொள்வோமாக.

ஏன் ஊழியம் செய்ய வேண்டும் 11

தேவனுடைய கட்டளை

இயேசு கிறிஸ்துவின் இறுதிக்கட்டளை "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்" என்பதாகும். (மாற்கு 16:15). "நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதாகுமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக் கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" (மத் 28:19, 20). இந்த வசனங்களை தியானித்துப் பார்க்கும்போது ஊழியம் செய்வது தேவனுடைய இறுதிக்கட்டளை எனக் காண்கிறோம்.

கடமை

"சுவிசேஷத்தை அறிவிப்பது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது" (2கொரி 9:16). கடமை என்றால் இயேசு கிறிஸ்து பரலோகம் செல்லும் போது கடைசியாகக் கொடுத்த கட்டளை. உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள், பாவத்திலும், சாபத்தினாலும் நித்திய மரணத்திற்கும் உரிய மக்களை விடுதலையாக்குங்கள். நொறுங்குண்ட இருதயத்தின் காயங்களைக் கட்டுங்கள். பிசாசுகளைத் துரத்துங்கள். வியாதியஸ்தர்களைக் சுகமாக்குங்கள் என்று கூறினார். இந்த இறுதிக் கட்டளையை நிறைவேற்றுவது ஒவ்வொரு கிறிஸ்தவ விசுவாசியின் கடமை என்பதை நாம் உணர்ந்து செயல்பட வேண்டும்.

கடனாளி

பவுல் கூறினார். ஆகையால் ரோமாபுரியிலிருந்து உங்களுக்கும் என்னால் இயன்றமட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன். கிரேக்கருக்கும் மற்ற அந்நியர்களுக்கும் ஞானிகளுக்கும் மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன். (ரோ 1:15,14). "கடனாளின்" என்றால் கடன்பட்டிருக்கிறோம் என்று அர்த்தம். நீங்களும் நானும் இந்த உலுக்குலமும் செய்த பாவத்திற்கு நீங்களும் நானும் அடைய வேண்டிய தண்டனையை பாவம் அறியாத இயேசு நம்மீது கொண்ட அன்பின் நிமித்தம் தம்மேல் ஏற்றுக் கொண்டு நமக்குப்பதிலாக அவர் சிலுவையில்

அடிக்கப்பட்டார். நம்மைப் பாவமறக் கழுவுவதற்காகத் தன் சரீரத்தில் ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரை சிந்திக் கொடுத்து, நாம் இழந்து போன நித்திய ஜீவனை திரும்பக் கொடுக்க தன் ஜீவனையே கொடுத்து, மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார். இந்த இயேசு சம்பாதித்து வைத்த இரட்சிப்பை நாம் கிருபையினாலே விசுவாசத்தின் மூலம் பாடுகள் அனுபவிக்காமல் விலைக்கிரயம் கொடுக்காமல் இலவசமாய்ப் பெற்றுக் கொண்டதினால் நாம் இயேசுவிடம் கடன் பட்டிருக்கிறோம். நாம் நம் ஜெபத்தினாலும் ஊழியத்திற்கு உதவி செய்வதினாலும் சுவிசேஷத்தைச் சொல்லி ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொடுப்பதினாலும் நம் ஆத்துமாவை அவருக்குக் கொடுப்பதினாலும் அவரிடம் நாம் பெற்ற கடனைச் செலுத்த முடியும். எனவே நாம் சுவிசேஷத்தைச் சொல்ல கடனாளியாயிருக்கிறோம்.

வெட்கப்படேன்

"கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்". நம்மை மீட்பதற்காக இயேசு பரலோகத்தை விட்டு, எல்லா மேன்மைகளையும் துறந்து, ஏழைக் கோலமாய் மாட்டுத் தொழுவத்தில் பிறந்து, ஒரு தச்சனுடைய மைந்தனாக வளர்ந்தார். ஊழியத்தின் பாதையில் எத்தனை பாடுகள், நிந்தைகள், அவமானங்களடைந்து, நமக்காக சிலுவையில் மரித்து, உயிர்த்தெழுந்து, நமக்காகப் பிதாவிடம் பரிந்து பேசிக் கொண்டிருக்கும் அந்த இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சொல்ல நாம் வெட்கப்படக் கூடாது. நம்முடைய படிப்பு உத்தியோகம் செல்வாக்கு சொத்து சுகம் எல்லாம் நாம் அவரிடமிருந்து பெற்றுக் கொண்டது தானே. அப்படிப்பட்ட தெய்வத்தைக் குறித்து மற்றவர்களுக்குச் சொல்ல வெட்கப்படலாமா? ஒருபோதும் வெட்கப்படக்கூடாது.

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் சுவிசேஷத்தைப் பிரசங்கி என்று பவுல் கூறுகிறார். நாம் நாள், நேரம், இடம், சந்தர்ப்பம், சூழ்நிலையை எதிர்நோக்கிக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் இல்லை. கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் உடனே பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நான் ஒரு நாள் பாளையங்கோட்டையில் இருந்து முனைஞ்சிப்பட்டிக்கு என்னுடைய ஸ்கூட்டரில் மத்தியானம் ஒரு மணிக்கு ஒரு கூட்டத்தில் பேசுவதற்காகச் சென்று கொண்டிருந்தேன். அந்த கொழுத்தும் வெயிலில் ஒரு வாலிபன் அந்தப் பாதையில் நடந்து சென்று கொண்டிருந்தான். நான் என்னுடைய வாகனத்தை நிறுத்தி, "ஏன், தம்பி, இந்த கொழுத்தும் வெயிலில் நடந்து கொண்டிருக்கிறாய்" என்று கேட்டேன். அவன் சொன்னான், "நான் திருநெல்வேலியில் ஒரு ஹோட்டலில் வேலை செய்கிறேன். என்

அம்மா வரும்படி தந்தி கொடுத்தார்கள், நான் முதலாளியிடம் போக வேண்டும் என்று கேட்டேன் அவர் லீவு கொடுக்க முடியாது, வேலைக்கு வேறு ஆள் இல்லை, அப்படிப் போக வேண்டுமானால் போ, சம்பளம் தரமுடியாது என்று கூறிவிட்டார். என் கையில் காசு இல்லை. ஆகையால் நடந்து போகிறேன். என்றார். நான் அவனைப் பார்த்துச் சொன்னேன். "தம்பி இதுதான் மனிதனின் அன்பு, நான் இயேசுவை நேசிக்கிறேன். ஆகையால் உன்னையும் நேசிக்கிறேன். என்னுடைய ஸ்கூட்டரில் ஏறிக் கொள். நான் கொண்டுபோய் விடுகிறேன். என்று சொன்னேன். அவனும் ஏறிக்கொண்டான். போகும் போதே இயேசுவின் அன்பைக்கூறி, இரட்சிப்பின் சுவிசேஷத்தையும் சொல்லி, இயேசுவிடம் வழி நடத்தினேன். அவன் இரங்க வேண்டிய இடம் வந்ததும் அவனை இறக்கி விட்டு விட்டு, "இயேசுவை மறந்து விடாதே தம்பி என்றேன் அவன் ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்றான். இப்படி நமக்கு சமயம் கிடைக்கும் போதெல்லாம் மற்றவர்களுக்குச் சொல்ல வேண்டும். இரட்சிப்புக்கு நேராக வழி நடத்த வேண்டும்.

பிரசங்கிக்காவிட்டால் ஐயோ!

"சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ" (1கொரி 9:16) என்கிறார் பவுல். ஒரு மரத்திலிருந்து அல்லது ஒரு வாகனத்திலிருந்து கீழே விழும்போது, "ஐயோ என்று சொல்லிக் கொண்டு விழலாம். "ஐயோ" என்றால் முடிந்தது என்றும் கூறலாம். அதைப்போல, ஊழியம் செய்யாமல், ஒரு ஆத்துமாவைக் கூட ஆதாயப்படுத்தாமல் நியாயத்தீர்ப்பின் போது தேவனுடைய சமூகத்தில் வெறுங்கையோடு போய் நின்றால், "உன்னை அறியேன். இந்த உலகத்தில் எத்தனையோ பெருக்கு இல்லாத தாலந்துகளை உனக்கு கொடுத்தேன். நீயோ உண்மை இல்லாதவனும் சோம்பல் உள்ளவனுமாய் இருந்த படியினால் ஒரு ஆத்துமாவைக் கூட ஆதாயப்படுத்தவில்லை. என்னை விட்டு அகன்று போ" என்று சொல்லவும் போது, உன் கண்ணீரைத் துடைக்கவும் உன்னை ஆறுதல் படுத்தவும் காப்பாற்றவும் யாராலும் முடியாது, உனக்கு ஐயோதான்.

இயேசு கிறிஸ்துவின் ஊழியம்

"மனுஷகுமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியஞ் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" (மத் 20:28). இயேசு கிறிஸ்து இந்த உலகத்திற்கு வந்ததே மனிதனைப் பாவம், சாபம், நித்திய மரணத்திலிருந்து மீட்டு, விடுவிக்க! அதற்காகவே தம்மை சிலுவை மரணத்துக்கு ஒப்புக் கொடுத்து, மரித்து, உயிர்த்தெழுந்து, இன்றும் நமக்காகப் பிதாவினிடம்

பரிந்து பேசிக் கொண்டே இருக்கிறார். இயேசு குருடர்களுக்குப் பார்வை கொடுத்தார். சப்பாணிகளை நடக்கச் செய்தார். குஷ்டரோகியைக் குணப்படுத்தினார். கூனியைப் நிமிர்ந்து பார்க்க செய்தார். பெரும் பாடுள்ள ஸ்திரியின் உதிரப்போக்கை நிறுத்தினார். சந்திரரோகியையும் லேகியோன் பிடித்த மனிதனையும் பிசாசின் பிடியிலிருந்து விடுதலையாக்கி, நன்மை செய்கிறவராய் சுற்றித் திரிந்தார். தனிப்பட்ட முறையில் சமாரியா ஸ்திரி, சகேயு போன்றவர்களைச் சந்தித்து இரட்சிப்புக்குள் வழி நடத்தினார். தேவாலயங்களில் பிரசங்கம் செய்தார். மலைப்பிரசங்கத்தில் திரளான ஜனங்களுக்கு நற்செய்தியை அறிவித்தார். அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்து தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். மகிமையான ஊழியத்தைச் செய்தார்.

தூதர்களின் ஊழியம்

பரலோகத்தில் தூதர் சேனைகள் "கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று தேவனுடைய மகிமையைப் பிரஸ்தாபப்படுத்திக் கொண்டே இருக்கிறார்கள்.(ஏசா 6:1-3). லோத்தையும் அவனுடைய இரண்டு மகன்களையும் அழிவுக்கும் அக்கினிக்கும் தப்புவித்தார்கள். (ஆதி 19:16). யாக்கோபைத் தூதர்கள் தைரியப்படுத்தினார்கள். (ஆதி 32:1,2) மோசே மரித்தபோது பிசாசோடு போராடி அவனைத்துரத்தி மோசேயின் சரீரத்தை காத்தது தூதன் (உபா 34: 5,6). எலியாவைப் பலப்படுததினது தூதன் (1இரா. 19:5-7) சிங்கங்களின் வாயைக் கட்டி தானியேலை காத்த தூதன் (தானி 6:22). நமது வழிகளில் நம்மைக் காக்கிற தூதர்கள் உண்டு (சங். 91:11,12) சுவிசேஷத்தை அறிவித்தது தூதன் (லூக் 2:10). இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்த தூதர்கள் (மாற் .1:13) அடைந்திருந்த சிறைச்சாலை கதவைத் திறந்த தூதர்கள் (அப்.11:9-12). செய்தி சொல்லும் தூதன் (அப் 8:26). கெத்செமனேயில் இயேசுவைப் பலப்படுத்திய தூதன் (லூக் 22:43). ஆகியோரை நாம் வேதத்தில் காண்கிறோம்.

மேற்கண்ட வசனங்களைத் தியானித்துப் பார்க்கும்போது, தேவ தூதர்கள் தேவனுக்கும் தேவ பிள்ளைகளுக்கும் பற்பல விதங்களில் ஊழியம் செய்வதைக் காண்கிறோம். அவர்கள் நம் ஜெபங்களை தேவனிடத்தில் கொண்டு சேர்க்கிறார்கள். தேவனிடத்திலிருந்து பதில் கொண்டு வருகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் பாடுகளில் அவருக்கு உதவி செய்தார்கள். தேவ பிள்ளைகளுக்கு ஆபத்துநேரம், சோர்ந்துபோகும் வேளைகளில் உதவி செய்கிறார்கள் (எலியா, யாக்கோபு). நம்மைப் போன்ற தேவபிள்ளைகளை, விசுவாசிகளை பாதுகாக்கிறார்கள், தேற்றுகிறார்கள் (தானியேல், எலியா)

நமது ஊழியம்

இயேசு இரட்சகர் நம்மைக் கொண்டு தம்முடைய ஊழியத்தை நிறைவேற்ற விரும்பினார். ஆகையால்தான் அவர் பரமேறிச் செல்லும் போது தமது சீஷர்களைப் பார்த்து "உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் (16:15) என்று கூறினார். பிசாசுகளைத் துரத்தவும், வியாதியஸ்தவர்களைக் குணமாக்கவும் அதிகாரம் கொடுத்தார். (மாற் 16:17). ஆகையால் இயேசு கிறிஸ்து விட்டுச் சென்ற ஊழியத்தை நாம் நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறோம், கடனாளியாயிருக்கிறோம்.

பரிசுத்த ஆவியானவர் ஊழியம

"நான் போகிறது உங்களுக்கு பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக் குறித்தும் நியாயத்தீர்ப்பைக்குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். (யோ 16: 7,8) "பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோ 14:26) சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார், வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோ 16:13)

பரிசுத்த ஆவியானவர் வெவ்வேறு பாஷைகளில் பேசவைக்கிறார் (அப் 2:4) பிலிப்புடனே பேசி, நீ போய் அந்த இரதத்துடனே சேர்ந்து கொள் என்றார் (அப் 8:29, 39). பரிசுத்த ஆவியானவர் பேதுருவிடம் "நீ போய் அந்த மூன்று மனுஷருடன் சேர்ந்து அவர்கள் கூடப்போ" என்கிறார் (அப் 10:10,20, 11:12). கொடிய பஞ்சம் உண்டாகும் என்று அகபு என்பவன் மூலம் ஆவியானவர் அறிவித்தார் (அப் 11:28). ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்த ஆவியினாலே தடை பண்ணப்பட்டார்கள் (அப் 16:6,7) "பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்திற்குப் பிரித்து விடுவார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம் பற்றினார்" (அப் 2:4).

மேற்கண்ட வசனங்களைத் தியானித்துப் பார்க்கும்போது பரிசுத்த ஆவியானவர் ஊழியத்தின் பாதையில் போதிக்கிறார், கண்டிக்கிறார், உணர்த்துகிறார், வழி நடத்துகிறார், தடை பண்ணுகிறார், பலப்படுத்துகிறார் நம்மை சாட்சியாக நிறுத்துகிறார் என்று பார்க்கிறோம்.

பலவிதமான ஊழியங்கள்

1. தனிநபர் ஊழியம் *(Personal Evangelism)*

இயேசு கிறிஸ்து சமாரிய நாட்டின் வழியாகச் செல்லும் போது, கிணற்றில் தண்ணீர் எடுக்க வந்த சமாரிய ஸ்திரியிடம், இயேசு பேசினார். அவளுடைய பாவ வாழ்க்கையை வெளிப்படுத்தி, அவளை இரட்சிப்புக்குள் வழி நடத்தினார் (யோ 4: 1-30). இயேசு நிக்கொதேமுவைப் பார்த்து, நீ மறுபடியும் பிறக்க வேண்டும் என்று கூறி மறுபிறப்புக்கு நேராக வழி நடத்துகிறதைப் பார்க்கிறோம் (யோ 3:1-7). இயேசுவைக் காண வேண்டும் என்ற வாஞ்சையோடு காட்டத்தி மரத்தின் மேல் அமர்ந்திருந்த சகேயுவைத் தேடிச் சென்றார் அவர்.

2. ஜனத்திரள் ஊழியம் *(Mass Evangelism)*

இயேசு கிறிஸ்து மலையில் அமர்ந்து திரளான ஜனங்களுக்குப் போதகம் பண்ணினார். அப்பொழுது அநேகர் அவர்மீது விசுவாசம் வைத்தார்கள் (மத் 14:15-21). பேதுரு பரிசுத்த ஆவியில் நிறைந்து பிரசங்கம் செய்த போது 3000 பேர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப் 2:41) ஜெப ஆலயங்களில் உபதேசித்து இராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் இயேசு நீக்கி சொஸ்தமாக்கினார் (மத் 4:23). இயேசு இரட்சகர் தனிப்பட்ட நபர்களைச் சந்தித்துப் பேசி தேவனிடம் வழி நடத்தினதுமின்றி, திரள் கூட்டமான ஜனங்களுக்கும் போதித்தார் என்று காண்கிறோம்.

3. சபை ஊழியம் *(Pulpit Evangelism)*

வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில் பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான் (அப் 20:7). பரிசுத்த பவுல், தீமோத்தேயு போன்றவர்கள் சபைகளுக்கு எழுதுகிறதையும் போதிக்கிறதையும் காண்கின்றோம் (1தீமோ 1:5-9, 3:15, 1பேதுரு 5:4).

4. எழுப்புதல் ஊழியம் *(Revival Evangelism)*

தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று பிலிப்பை பற்றிக் கொண்டு அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான். (அப் 8:12,13) பிலிப்பு இயேசுகிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்து அநேக அற்புதங்கள்

செய்ததைக் கண்டு திரளான மக்கள் தேவனிடம் சேர்ந்தார்கள். அங்கு ஒரு எழுப்புதல் நடந்தது என்று காண்கிறோம்.

சுகமாக்கும் ஊழியம் *(Healing Ministry)*

வியாதிகளைக் குணமாக்கி, பிசாசுகளைத்துரத்தும்படி அவர்கள் அதிகாரமுடையவர்களாயிருக்கவும் சீஷர்களை ஏற்படுத்தினார். (மாற் 3:15). சீஷர்கள் கிராமங்கள் தோறும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து பிணியாளிகளைக் குணமாக்கினார்கள் (லூக் 9:6). இயேசு கிறிஸ்து பர்திமேயுவின் கண்களைத் திறந்தார். பிறவிச் சப்பாணியை நடக்கச் செய்தார். இரண்டு குஷ்டரோகிகளைக் குணமாக்கினார். சுவிசேஷத்தைப் பிரசங்கித்து வியாதியஸ்தர்களைக் குணமாக்கினார். பேதுருவும் யோவானும் சப்பாணியாய்ப் பிறந்த மனிதனை இயேசுவின் நாமத்தில் எழுந்து நடக்கச் செய்தார்கள் (அப் 3:1-9). பேதுரு முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, பிரேதத்தின் புறமாய்த் திரும்பி, "தபீத்தாளே எழுந்திரு" என்றான். அப்பொழுது அவள் தன் கண்களைத்திறந்து பேதுருவைப் பார்த்து உட்கார்ந்தாள் (அப் 9:90). ஐத்திகு ஜன்னலிலிருந்து விழுந்து மரித்துப் போனான். அப்பொழுது பவுல் அவன் மேல் விழுந்து, அவனை அணைத்துக் கொண்டு கலங்காதிருங்கள் என்று சொல்லி உயிரோடு எழுப்பினான் (அப் 20:8-10). இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சீஷர்களும் பிசாசுகளைத் துரத்தி வியாதியஸ்தர்களைக் குணமாக்கினார்கள். சப்பாணிகளை நடக்கச் செய்தார்கள். மரித்தவர்களை உயிரோடு எழுப்பினார்கள்.

சிறுபிள்ளைகள், வாலிபர் ஊழியம் *(Children and Youth Ministry)*

"சிறுபிள்ளைகளின் மேல் இயேசு கைகளை வைத்து ஜெபம்பண்ணும் படிகு அவர்களை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். கொண்ட வந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசுவோ சிறுபிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள். அவர்களைத் தடை பண்ணாதிருங்கள். பரலோக ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொல்லி அவர்கள்மேல் கைகளைவைத்து ஆசீர்வதித்தார் (மத் 19:13-15). "வாலிபரே, பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன். வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும் தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும் நீங்கள் பொல்லாங்களை ஜெயித்ததினாலும் உங்களுக்கு எழுதுகிறேன்" என்று யோவான் கூறுகிறார் (1யோவான் 2:13,14) மேற்கூறிய வசனங்களைத் தியானிக்கும் போது சிறுபிள்ளைகள் மத்தியிலும் வாலிபர்கள் மத்தியிலும் ஊழியம் செய்ய வேண்டுமென்பதை அறிந்து கொள்ளலாம்.

தெரு பிரசங்கம் *(Street Preaching)*

"ஓய்வு நாளில் நாங்கள் பட்டணத்திற்கு வெளியே போய் ஆற்றினருகே வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற இடத்தில் உட்கார்ந்து

அங்கே கூடிவந்த ஸ்திரீகளுக்கு உபதேசித்தோம். (அப் 16:12,14). "நீ பெருவழிகளில் வேலிகள் அருகிலும் போய்" (லூக் 14:23). "அவர்கள் புறப்பட்டுபோய் கிராமங்கள் தோறும் திரிந்து எங்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து" (லூக் 9:6). மேற்கூறிய வசனங்களை ஆராய்ந்து பார்க்கும்போது பட்டணத்திற்கு வெளியே சென்று கிராமங்களுக்கும் சென்று சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்று காண்கின்றோம்.

மிஷனெரி ஊழியம் *(Missionary work)*

"இப்படி எருசலேம் துவங்கிச் சுற்றிலுமிருக்கும் தேசம் வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன்" (ரோம 15:19). பின்பு இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து ஜெப ஆலயங்களில் உபதேசித்து ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளைம் சகல நோய்களையும் நீக்கி அவர்களைச் சொஸ்தமாக்கினார் (மத் 9:35). மேற்கண்ட வசனங்களைப் பார்க்கும்போது சீஷர்களும் இயேசுவும் பல இடங்களுக்குச் சென்று சுவிசேஷத்தை பிரசங்கித்து வியாதிஸ்தர்களையும் குணப்படுத்தினார்.

இது தவிர சுவிசேஷ பிரதிகள் துண்டுப் பிரதிகள் மாத, வார, தினசரி பத்திரிக்கைகள் அச்சிட்டு அவைகளை வீடுகளுக்குச் சென்றும் தெருக்களில் நின்று கொடுப்பதின் மூலமும் செய்யும் ஊழியம் இலக்கிய ஊழியம் (literature) எனப்படும். இது தவிர ரேடியோ, டெலிவிஷன், டேப்ரிக்கார்டர்கள், கிறிஸ்தவ படங்கள், ஒலிபெருக்கி மூலம் சுவிசேஷத்தை அறிவிக்கும் ஊழியங்களும் உண்டு.

"அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள், ஆவியிலே அனலாயிருங்கள், கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்" (ரோ 12:11). "ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு கர்த்தர் ஒருவரே" (1கொரி 12:5). "எப்படியாவது கிறிஸ்து அறிவிக்கப்படுகிறார். அதனால் சந்தோஷப்படுகிறேன். இன்னமும் சந்தோஷப்படுவேன்" (பிலி 1:14-18).

எவைகளைப் பிரசங்கிக்க வேண்டும்

இயேசு கிறிஸ்துவைப் பிரசங்கிக்க வேண்டும் (அப் 8:35). கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று (அப் 9:20, மத் 3:17). சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைக்குறித்து (அப் 17:18, 32). இயேசுவையும் அவருடைய உயிர்த்தெழுதலையும் (1கொரி 1:23). கிறிஸ்துவே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோருக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாதிபதி என்று (அப் 2:38) தேவனுடைய இராஜ்யத்தைக்குறித்து (லூக் 9:60, மத் 1:14) பாவ மன்னிப்பைக் குறித்து (அப் 10:43). பரிசுத்த ஆவியைக் குறித்து (மாற் 1:8, அப் 1:8). வசனத்தைப் பிரசங்கிக்க வேண்டும் (அப் 11:25). இச்சையடக்கத்தைக குறித்து (அப் 24:25, கலா 5:23). இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறித்து (2பேதுரு 3:11, மத் 24: 3-44).

நாம் விருப்பம் போல் மனதில் வந்ததையெல்லாம் சொல்லி பிரசங்கிக்கக்கூடாது. மேற்கண்ட வசனங்களை ஆதாரமாகக் கொண்டே நாம் பிரசங்கிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் சொன்ன படி நாம் பாவத்தைக் குறித்தும் நீதியைக்குறித்தும், நியாயத் தீர்ப்பைக்குறித்தும் கட்டாயம் கண்டித்து போதிக்க வேண்டும் (யோ 16:8). சிட்சித்து உம்முடைய வேதத்தைக் கைக் கொண்டு போதிக்கிறவன் பாக்கியவான் (சங் 94:13) என்று சங்கீதக்காரன் கூறுகின்றார். ஆகையால் நாம் சிட்சித்தும் போதிக்க வேண்டும். இயேசு கிறிஸ்து "விரியன் பாம்பின் குட்டிகளே" என்று கடிந்து கொண்டார். பரிசேயரே, சதுசேயரே, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளே, உங்களுக்கு ஐயோ! என்றார். "விசுவாசமில்லாத, மாறுபாடுகள் சந்ததியாரே" என்றெல்லாம் கடினமான சில வார்த்தைகளை இயேசு பயன்படுத்தினார். எனவே நாம் கண்டித்தும் போதிக்க கடமைப் பட்டிருக்கிறோம். இயேசு யோவானைக்குறித்து யோவான் சத்தியத்திற்கு சாட்சி கொடுத்தான். அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான் (யோ 5:35) என்று சாட்சி கூறினார். இந்த யோவான் ஸ்நானகன் வியாதியஸ்தர்களைக் குணமாக்கினார். பிசாசுகளைத் துரத்தினார். அற்புத அதிசயங்களைச் செய்தாரென்று கூறப்படவில்லை. அவன், ஏரோது தன் சகோதரன் பிலிப்புவின் மனைவியை வைத்திருப்பது தவறு என்று கண்டித்தான். அதன் நிமித்தம் அவன் தலை துண்டிக்கப்பட்டது. இயேசு இவனுடைய ஊழியத்தைத் தான் பாராட்டி பேசினார்.

அதே நேரத்தில் நாம் சாந்தமாகவும் பிரசங்கிக்க கடமைப்பட்டிருக்கிறோம். ஏசாயா 61:1 ல் "சுவிசேஷத்தை அறிவிக்கக் கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இருதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயம் கட்டுதலையும் சிறைப்பட்டவர்களுக்கு விடுதலை கூறவும் கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தையும், நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும் கூறவும், துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் செய்யவும், சீயோனிலே துயரப்பட்டவர்களைச் சீர்ப்படுத்தவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும் துயரத்திற்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும் ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும கொடுக்கவும் என்னை அனுப்பினார்" என்று நற்செய்தியாளர் கூறுகின்றார். இவ்வசனங்களைத் தியானித்துப் பார்க்கும் போது, பல தரப்பட்ட மக்களை நாம் சந்திக்கும்போது ஆலயங்களில் பலவிதமான பாடுகள், வேதனை, கண்ணீர், கஷ்டங்களோடு வந்திருக்கும் மக்களைக் காணும் போதும் அவர்களுக்கு ஏற்றவிதமாய் ஆறுதல் படுத்தும் வகையில் பிரசங்கிக்க வேண்டும் என்று அறிகிறோம்.

"வேதவாக்கியங்கள் எல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும் படியாக அவைகள் உபதேசத்திற்கும் கடிந்து கொள்ளுதலுக்கும்,

சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது". (2தீமோ 3:16,17). எனவே நம்முடைய போதனைகள் உபதேசத்திற்கும், கடிந்து கொள்ளுவதற்கும், சீர்திருத்தச் செய்வதற்கும், நீதியைப் படிப்பிக்கிறதற்கும் ஏற்றபடி அமைய வேண்டும்.

நம்முடைய ஊழியம் எப்படி இருக்க வேண்டும்

நாம் இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்ய வேண்டும் (ரோ 14:18). உத்தமமும் உண்மையுமாய் ஊழியம் செய்ய வேண்டும் (மத் 25:21). கபடமில்லாத இருதயத்தோடு நாம் ஊழியம் செய்ய வேண்டும் (கொலோ 3:22). மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்ய வேண்டும் (எபே 6:6). மந்தைக்கு மாதிரியான ஊழியம் செய்ய வேண்டும் (1பேதுரு 5:2,3). நம்முடைய ஆஸ்திகளால் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் (லூக் 8:3). பரிசுத்தவான்களுக்கு நாம் ஊழியம் செய்ய வேண்டும் (அப் 12:25). நாம் அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியம் செய்ய வேண்டும் (கலா 5:13).

எப்படி இருக்கக்கூடாது? நாம் மனுஷருக்குப் பிரியமாய் இருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியம் செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். மனுஷருக்கென்று ஊழியம் செய்யாமல் கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியம் செய்யுங்கள். (எபே 6:6,8). நாம் இனி பாவத்துக்கு ஊழியம் செய்யாத படிக்கு பாவசரீரம் ஒழிந்து போகும் பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம். (ரோ 6:6). "தங்கள் வயிற்றுக்கு ஊழியம் செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்". (ரோ 16:18) ஊழியம் "உங்களுக்குள்ளும் கள்ளப் போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளை தந்திரமாய் நுழையப் பண்ணி தங்களைக் கிரயத்துக்குக் கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக் கொள்ளுவார்கள் (2பேதுரு 2:13). பொல்லாதவனும் சோம்பனுமான ஊழியக்காரனாய் நாம் இருக்கக்கூடாது (மத் 25:26). நரகத்துக்கு வழிநடத்துகிற ஊழியக்காரனாயிருக்கக் கூடாது. (மத் 23:15). சவுலைப் போல புத்தியீனமான ஊழியக்காரனாக அல்லது சண்டையிடுகிற ஊழியக்காரனாயிருக்கக் கூடாது. (2தீமோ 2:24) வேதத்தைப் புரட்டுகிற ஊழியக்காரனாக இருக்கக்கூடாது. (தீத்து 3:10,11).

மேற்கண்ட வசனங்களை நாம் ஆராய்ந்து பார்க்கும் போது, ஒரு ஊழியக்காரன் வயிற்றுக்காக அல்லது ஆதாயத்துக்காக ஊழியம் செய்கிறவனாக இருக்கக் கூடாது. மற்றவர்களை வஞ்சிக்கிறவர்களாய் மனுஷருக்கென்று ஊழியம் செய்கிறவர்களாய், பொல்லாதவனும்

சோம்பலுமான ஊழியக்காரராய், கள்ளப்போதகராய், வேதப் புரட்டர்களாய், நரகத்துக்கு வழிநடத்துகிறவர்களாய், புத்தியீனமான, சண்டை பண்ணுகிறவர்ளாய் இருக்கக்கூடாது என்று காண்கிறோம்.

நாம் எப்படி இருக்க வேண்டும்

நாம் உண்மையுள்ள ஊழியக்காரராக (1சாமு 22:14), அக்கினி ஜுவாலையைப் போன்ற ஊழியக்காரராக (சங் 104:4), எழுந்து கட்டுகிற ஊழியர்களாய் (2:20), தேவ இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற ஊழியர்களாய் (ஆமோஸ் 3:7), எஜமானைக் கனப்பண்ணுகிற ஊழியக்காரராக (மல்கி 1:6), மன மகிழ்ச்சியினால் கெம்பீரிக்கும் ஊழியர்களாக (ஏசா 65:14) இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

எப்படிப்பட்ட ஊழியத்தைச் செய்ய வேண்டும்

ஆவிக்குரிய ஊழியம் (2கொரி 3:8), ஒப்புரவாக்குதலின் ஊழியம் (2கொரி 3:8) ஆசாரிய ஊழியம் (எபி 8:6, 5:4) சுவிசேஷ ஊழியங்களை (எபே 4:12) செய்ய வேண்டும் என்றும் பார்க்கிறோம்.

தேவ ஊழியக்காரனுடைய பண்புகள்

தேவ ஊழியக்காரன் கர்த்தருக்குப் பயந்தவனாக இருக்க வேண்டும் (மல் 2:5). ஊழியக்காரனுடைய வாயில் சத்திய வேதம் இருக்க வேண்டும் (மல் 2:6). ஊழியனுடைய உதடுகளில் அநியாயம் காணப்படகூடாது (மல் 2:6). தேவ ஊழியன் தேவனோடு சமாதானமாக இருந்ததுமாய்ச் சஞ்சரிக்கிறவனாயிருக்க வேண்டும் (மல் 2:6). ஊழியன் வேத வசன சத்தியங்களைக் கற்றுக் கொடுக்கத்தக்க அறிவுள்ளவனாயிருக்க வேண்டும் (மல் 2:7) ஊழியன் கர்த்தருடைய தூதைப் பெற்று அறிவிக்கிறவனாயிருக்க வேண்டும் (மல் 2:7) என்று மல்கியா தீர்க்கத்தரிசி கூறுகின்றார்.

செய்கிறவர்களுக்குக் கிடைக்கும் பலன்கள்

"என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நாம் கனம் பண்ணுவேன்" (1சாமு 2:30) என்கிறார் கர்த்தர். "ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்" (யோ 12:26) என்று இயேசு சொன்னார். ஊழியரிகள் பரம அழைப்பிற்குப் பங்குள்ளவர்கள் (எபி 3:1) பரிசுத்தவானின் சுதந்தரத்திற்குப் பங்குள்ளவர்கள் (கொலோ 1:2) இனி வெளிப்படப்போகும் மகிமைக்குப் பங்காளிகள் (1பேதுரு 5:1) அன்பின் விருந்தில் பங்கடைவார்கள் (1கொரி 10:17).

தேவனுடைய ஊழியத்தைச் செய்கிற தேவ ஊழியர்களைத் தேவன் கனப்படுத்துகிறார். தேவனோடு வாசம் பண்ணும் பாக்கியத்தையும் அவரோடு போஜனம் பண்ணும் சிலாக்கியத்தையும் பெறுகிறார்கள் என்று

காண்கிறோம். தேவனுக்கென்று ஊழியம் செய்த மோசே, யோசுவா, காலேப், எலியா, எலிசா, யெப்தா, சாமுவேல், நெகேமியா, ஏசாயா, எரேமியா, பரிசுத்த பவுல் போன்றவர்களுடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கும்போது, அவர்கள் பல பாடுகளின் வழியாய்க் கடந்து சென்றாலும் இறுதியில் தங்கள் வாழ்க்கையை வெற்றியாய் முடித்தார்கள் என்றும் தேவனிடம் சேர்ந்தார்கள் என்றும் பார்க்கிறோம்.

ஒரு தேவ ஊழியத்தைச் செய்கிற தேவ ஊழியர்களைத் தேவன் கனப்படுத்துகிறார். தேவனோடு வாசம் பண்ணும் பாக்கியத்தையும் அவரோடு போஜனம் பண்ணும் சிலாக்கியத்தையும் பெறுகிறார்கள் என்று காண்கிறோம். தேவனுக்கென்று ஊழியம் செய்த மோசே, யோசுவா, காலேப், எலியா, எலிசா, யெப்தா, சாமுவேல், நெகேமியா, ஏசாயா, எரேமியா, பரிசுத்த பவுல் போன்றவர்களுடைய வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கும்போது, அவர்கள் பல பாடுகளின் வழியாய்க் கடந்து சென்றாலும் இறுதியில் தங்கள் வாழ்க்கையை வெற்றியாய் முடித்தார்கள் என்றும் தேவனிடம் சேர்ந்தார்கள் என்றும் பார்க்கிறோம்.

ஒரு தேவ ஊழியன் ஆபிரகாமைப் போல பூரண விசுவாசியாக (எபி 11:10), ஏனோக்கைப் போல தேவனோடு சஞ்சரிக்கிறவனாக (ஆதி 22:6-12), நோவாவைப் போல கர்த்தருடைய கட்டளைளைச் செய்து முடிக்கிறவனால் (ஆதி 6:22), மோசேயைப் போல அநித்தியமான பாவ சந்தோஷத்தை வெறுப்பவனாக (எபி 11:24, 26) யோசுவாவைப் போல குடும்பமாக தேவனைச் சேவிக்கிறவனாக (யோசு 24:15) தாவீதைப் போலக் காரிய சமர்த்தனாக (1சாமு 16:18), எலியாவைப் போல ஊக்கமாக ஜெபிப்பவனாக (1 இரா 18:36-38), யெப்தாவைப் போல பொறுத்தனையை நிறைவேற்றுகிறவனாக (நியா 11:35-40). இருக்க வேண்டும். சாமுவேலைப் போல பாரிதானங்களை வெறுக்கிறவனாக (1சாமு 12:3, 8:1-3). நாத்தானைப் போலப் பாவத்தைக் கண்டித்து உணர்த்துகிறவனாக (2சாமு12:1-5) யோபுவைப் போல சோதனைக்காலத்தில் பொறுமையுள்ளவனாக (யோபு 1:21, 22, 2:9, 10), எரேமியாவைப் போல ஆத்தும பாரமுள்ளவனாக (லூக் 2:25-32) நாத்தானைப் போல கபடற்ற உத்தமனாக (யோ 1:47), ஸ்தேவானைப் போல சத்தியத்திற்கு சாட்சியாய் மரிக்கிறவனாக (அப் 7:51-60) இருக்கவேண்டும். தீமோத்தேயுவைப் போல உத்தம *சீஷனாக* (1தீமோ 1:2), பர்னபாவைப்போல ஊழியத்திற்கு மனப்பூர்வமாய்க் கொடுக்கிறவனாகக் (அப் 4:26, 37) காணப்படும்போது நாம் தேவனுக்கு விருப்பமுள்ள ஊழியம் செய்வோம். அப்பொழுது தேவன் நம்மையும் நம் குடும்பத்தையும் கனப்படுத்தி ஆசீர்வதிப்பார்.

ஏன் துதி செலுத்த வேண்டும் 12

"மோசேயிடம் தேவன் நீ பார்வோனிடத்தில் போய் எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களைப் போக விடு" என்று சொல்லச் சொன்னார் (யாத் 9:1). இஸ்ரவேலின் துதிகளுக்குள் தேவன் வாசமாயிருக்கிறார் (சங் 22:3) ஸ்தோத்திரப் பலியிடுகிறவன் என்னை மகிமைப்படுத்துகிறான் (சங் 50:23) என்று கர்த்தர் சொல்லுகிறார். எனவே நாம் ஆராதிக்கிற தேவன் துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிறவர் ஏசாயா தீர்க்கதரிசியின் புஸ்தகத்தில் 6ம் அதிகாரத்தில் ஏசாயா கண்ட தரிசனத்தைப் பார்க்கும் போது உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற தேவனைக் காண்கிறார். சேராபீன்கள் அவருக்கு மேலாக நின்றார்கள். அவர்கள் ஒருவரை யொருவர் நோக்கி சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று ஓயாது புகழ்ந்து பாடித்துதித்துக் கொண்டிருந்தார்கள். (ஏசா 6:1,3). இயேசுகிறிஸ்து பிறந்தபோது தேவ தூதர்களுடன் பரம சேனையின் திரள் தோன்றி உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள் (லூக் 2:13,14) மேற்கூறிய வசனங்களை ஆராய்ந்துப் பார்க்கும் போது தேவன் துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிறவர் என்றும் தம்மை ஜனங்கள் அவர் சிருஷ்டித்த சிருஷ்டிகள் துதிக்க வேண்டும், அவரை புகழ்ந்து ஆர்ப்பரிக்க வேண்டும். அவருக்கு நன்றி செலுத்த வேண்டும் என்பதை விரும்புகிறார் என்பதையும் அறிந்து கொள்ள முடிகிறது. கர்த்தரை துதிப்பது நல்லது. துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது (சங் 147:1) என்று காண்கிறோம்.

எப்போது துதிக்க வேண்டும்?

நம் தேவன் துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிறார் என்றும், அவரை புகழ்ந்து துதிப்பதை விரும்புகிறார் என்றும் காண்கிறோம். ஆகையால் நாம் ஜெபிக்க ஆரம்பிப்பதற்கு முன்பு துதிகளின் மத்தியில் வாசம் பண்ணும் தேவனை வரவழைக்க கொஞ்ச நேரம் துதிக்க

வேண்டும், ஸ்தோத்தரிக்கவேண்டும். அப்படி நாம் துதிக்க, துதிக்க, புகழ, புகழ மகிமைப்படுத்த மகிமைப்படுத்த தேவ பிரசன்னம் நம் மத்தியில் இரங்கும், அவர் நம் இருதயத்துக்குள் வருவார், நம் இருதயம் மகிழ்ச்சியினால் நிரம்பும் நம் இருதயமும் அவர் இருதயமும் ஒன்றாக இணையும் போது நம் ஜெபம் கேட்கப்படும். நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (யோ15:7) என்று இயேசு கிறிஸ்து சொன்னார். துதிக்கும் போது தான் நம் இருதயம் தேவனோடு ஒன்றாக இணையும், நம் ஜெபம் கேட்கப்படும். ஆகையால் நாம் நம் ஜெபத்தை ஆரம்பிக்கும்போது துதித்தலோடு கூட ஆரம்பிக்க வேண்டும். தேவனுடைய உன்னத நாமத்தைச் சொல்லி, அவர் செய்த அற்புதங்களையும், அதிசயங்களையும் சொல்லி நம் வாழ்க்கையில் அவர் செய்த நன்மைகளை ஒவ்வொன்றாகச் சொல்லி நன்றிச் சொல்லும்போது பரிசுத்த ஆவியானவர் நம்மை நிரப்பி ஆட்கொண்டபின்பு மற்ற காரியங்களுக்காக ஜெபிப்பது நல்லது.

ஒரு முறை இயேசு கிறிஸ்து பத்து குஷ்ட ரோகிகளை சுகப்படுத்தியபோது ஒருவன் மட்டும் வந்து இயேசுக்கிறிஸ்துவுக்கு நன்றி கூறினான். அப்பொழுது இயேசு கிறிஸ்து அவனைப் பார்த்து சொஸ்தமானவர்கள் பத்து பேரல்லவா அந்நியன் நீ ஒருவன் மட்டும் வந்திருக்கிறாயா மற்றும் ஒன்பது பேரெங்கே என்று கேட்டார். அப்படியானால் இயேசுக் கிறிஸ்து நன்றியுள்ள இருதயத்தை எதிர்பார்க்கிறார் என்று தானே அர்த்தம்?

நாம் நன்றியுள்ளவர்களா?

தேவன் இன்று நம்மிடம் நன்றியுள்ள இருதயத்தைதான் எதிர்பார்க்கிறார் நாம் கர்ப்பத்தில் உருவானது முதல் இன்றுவரை எத்தனை நன்மைகளை நமக்குச் செய்திருக்கிறார் அவைகளை நாம் நினைத்துப்பார்த்தது உண்டா? அவைகளை ஒவ்வொன்றாக நினைத்துப் பார்த்து தேவனுக்கு நன்றி, துதி, ஸ்தோத்திரம் செலுத்தியதுண்டா? என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, என முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி, அவர் செய்த சகல உபகாரங்களையும மறவாதே. அவர் நம் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்தார். நோய்களை எல்லாம் குணமாக்கினார். பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டுக் கொண்டார், கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடிசூட்டுகிறார். கழுகுக்குச் சமானமாய் நம் வயதை திரும்ப வால வயதைப் போலாக்குகிறார் (சங் 103:1-5) அதனால் நாம் எப்பொழுதும் தேவனுக்கு ஸ்தோதத்திரம் செலுத்த வேண்டும் என்று கூறுகிறார்.

தேவன் துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிறவர் (சங் 22:3) துதிப்பதின் மூலம் நாம் தேவனை மகிமைப்படுத்துகிறோம் (சங் 50:23). கர்த்தரைத் துதித்து அவருடைய நாமத்தைப் பிரஸ்தாபமாக்குங்கள் (1நாளா 16:8) கர்த்தர் பெரியவரும் மிகவும் துதிக்கப்படத்தக்கவருமாயிருக்கிறார் (1நாளா 16:28) கர்த்தரைத் துதியுங்கள் அவர் நல்லவர் (1நாளா 16:34) உம்மைத் துதிக்கிறதினால் மேன்மை பாராட்டுகிறோம் (1நாளா 16:35) துதி செய்வது செம்மையானவர்களுக்குத் தகும் (சங் 33:1) கர்த்தரைத் துதிப்பதும் உன்னதமானவரே உமது நாமத்தைக் கீர்த்தனம் பண்ணுவதும் ... நலமாயிருக்கும் (சங் 92:1). துதித்தலுடனே அவர் சந்நிதிக்கும் முன்பாக வந்து அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம் (சங் 95:2). துதித்தலே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது (சங் 147:1).

மேற்கண்ட வசனங்களை நாம் தியானிக்கும் போது நம் தேவன் துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுகிறவர் என்றும், நாம் துதிப்பதின் மூலம் தேவனை மகிமைப்படுத்துகிறோம் என்றும், தேவன் மிகவும் பெரியவர், துதிக்கப்படத்தக்கவர் நல்லவர், துதிக்கிறதினால் தேவனை மகிமைப்படுத்துகிறோம் என்றும் துதிப்பது செம்மையானவர்களுக்குத் தகும் என்றும் துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன் வர வேண்டும், தேவனை துதிப்பதே நமக்கு ஏற்றதும், இன்பமுமுமாயிருக்கிறது என்றும் நாம் காண்கிறோம். ஆகையால் நாம் எப்போதும் துதிக்க வேண்டும். அது தேவனுக்குப் பிரியம் என்றும் பார்க்கிறோம். ஆகையால் நாம் எப்போதும் தேவனை துதித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

எப்போது தேவனைத் துதிக்க வேண்டும்?

1. நாள்தோறும் காலையிலும், மாலையிலும் கர்த்தரைப் போற்றித் துதித்து (1நாளா 23:30).
2. புளிப்பில்லாத அப்பப் பண்டிகையை ஏழுநாளளவும் மகா ஆனந்தத்தோடே ஆசரித்தார்கள். லேவியரும் ஆசாரியரும் தினந்தினம் கர்த்தருக்கென்று பேரோசையாய்த் தொனிக்கும் கீதவாக்கியங்களால் கர்த்தரைத் துதித்துக் கொண்டிருந்தார்கள் (2நாளா 30:21)
3. கர்த்தரைத் துதிக்கையில் ஜனங்கள் எல்லாரும் கர்த்தருடைய ஆலயத்தின் அஸ்திபாரம் போடப்படுகிறதினிமித்தம் மகா கெம்பீரமாய் ஆரவாரித்தார்கள். (எஸ்றா 3:12,13).
4. நடு ராத்திரியிலே பவுலும் சீலாவும் ஜெபம் பண்ணி தேவனைத் துதித்துப் பாடினார்கள் (அப் 16:25).

5. மாதப் பிறப்பிலும், நியமித்த காலத்திலும் தேவனைத் துதியுங்கள் (சங் 81:3).

6. கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன். அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும். (சங் 34:1).

மேற்கண்ட வசனங்களை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது நாம் தேவனை நாள்தோறும் துதிக்க வேண்டும். காலையிலும் மாலையிலும் துதிக்க வேண்டும். பண்டிகை நேரங்களில் துதிக்கப்பட வேண்டும். நடு ராத்திரியிலும் பாடித் துதிக்க வேண்டும். எக்காலத்திலும் தேவனை துதிக்க வேண்டும். எப்போதும் தேவனைத் துதிக்கும் துதி நம் வாயில் இருக்க வேண்டுமென்றும் பார்க்கிறோம். நாம் இவ்வாறு தேவனைத் துதிக்கிறோமா?

யார் யார் தேவனைத் துதிக்க வேண்டும்?

1. சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக (சங் 150:6)
2. அவருடைய தூதர்களே நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் அவருடைய சேனைகளே, நீங்கள் யாவரும் அவரைத் துதியுங்கள் (சங் 148:2).
3. பூமியின் ராஜாக்களே, சகல ஜனங்களே, பிரபுக்களே, முதிர்வயதுள்ளவர்களே, பிள்ளைகளே கர்த்தரைத் துதியுங்கள் (சங் 148:11,12).
4. பரிசுத்தவான்களின் சபையிலே அவருடைய துதி விளங்குவதாக. (சங் 149:16).

மேற்கூறிய வசனங்களை வாசிக்கும்போது சுவாசமுள்ள யாவும், தூதர்கள், பரலோகசேனை, பூமியிலுள்ள ராஜாக்கள், பரிசுத்தவான்கள், எருசலேம், சீயோனிலுள்ள யாவரும் தேவனைத் துதிக்க வேண்டும் என்று பார்க்கிறோம்.

எப்படி துதிக்க வேண்டும்?

1. தம்புரோடும், நடனத்தோடும் அவரைத் துதியுங்கள், யாழோடும், தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள். ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள் (சங் 150:4,5).
2. பூமியின் குடிகளே, நீங்கள் எல்லோரும் தேவனுக்கு முன்பாகக் கெம்பீரமாய்ப் பாடுங்கள். (சங் 66:1).
3. நான் பாடும் போது என் உதடுகளும், நீர் மீட்டுக் கொண்ட என் ஆத்துமாவும் கெம்பீரித்து மகிழும். (சங் 71:23).

4. உம்முடைய பிரமாணங்களை நீர் எனக்குப் போதிக்கும் போது என் உதடுகள் உமது துதியைப் பிரஸ்தாபப்படுத்தும். (சங் 119:71).

5. தாவீது சணல் நூல் ஏபோத்தைத் தரித்துக் கொண்டு தன் முழு பலத்தோடும் நடமாடினான் (2சாமு 6:14). நாம் தேவனை தம்புரோடும், யாழோடும், தீங்குழலோடும், ஓசையுள்ள கைத்தாளங்களோடும், பத்து நரம்பு வீணையோடும், நடனத்தோடும், கெம்பீரமாய்ப் பாடித்துதிக்க வேண்டும். தேவன் அதை விரும்புகிறார். தேவன் அதை விரும்புகிறார். நாம் அப்படி இசைக்கருவிகளோடு தேவனைப் பாடி ஆடி, துதித்து மகிமைப் படுத்துகிறோமா?

நாம் எதற்கெல்லாம் துதிக்க வேண்டும்?

உன்னதங்களில் **ஆவிக்குரிய சகல ஆசீர்வாதத்தினாலும்** நம்மை **ஆசீர்வதித்திருக்கிற** நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். (எபே 1:3,4).

தேவன் **அருளின சொல்லிமுடியாத ஈவுக்காக** அவருக்கு ஸ்தோத்திரம் (2கொரி 9:15).

கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் **வெற்றி சிறக்கப்பண்ணி** அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம் (2கொரி 2:14-16).

இரக்கங்களின் பிதாவும் **சகலவிதமான ஆறுதலின்** தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். (2கொரி 1:3).

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு **ஜெயம்** கொடுக்கிற **தேவனுக்கு ஸ்தோத்திரம்** (1கொரி 15:57).

என் **ஜெபத்தைத் தள்ளாமலும்,** தமது **கிருபையை என்னை** விட்டு **விலக்காமலும்** இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரம் (சங் 66:20)

நம்மை நமது **விரோதிகளின் பற்களுக்கு இரையாக ஒப்புக்** கொடா**திருக்கிற** கர்த்தருக்கு ஸ்தோத்திரம் (சங் 124:6) என் ஜெபத்தை தள்ளாமலும், தமது கிருபையை என்னை விட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திர முண்டாவதாக (சங் 66:20).

என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்தரி, என் முழு உள்ளமே அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்தரி, அவர் செய்த **சகல உபகாரங்களையும்** மறவாதே. அவர் உன் **அக்கிரமங்களையெல்லாம்** மன்**னித்து, உன் நோய்களை எல்லாம் குணமாக்கி, உன்** பிராணனை **அழிவுக்கு விலக்கி மீட்டு,** உன்னைக் கிருபையினாலும், இரக்கங்களினாலும் முடி சூட்டி, **நன்மையினால் உன் வாயைத்**

திருப்தியாக்குகிறார், கழுகுக்குச் சமானமாய் உன் வயது திரும்ப வாலவயது போலாகிறது. (சங் 103:1-5).

கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார் என் இருதயம் அவரை நம்பியிருக்கிறது. நான் சகாயம் பெற்றேன். ஆகையால் என் இருதயம் களிகூருகிறது. என் பாட்டினால் அவரைத் துதிப்பேன். (சங் 28:7)

என்னை நேர்வழியாய் நடத்திவந்த ஆபிரகாமின் தேவனாயிருக்கிற கர்த்தருக்கு ஸ்தோத்திரம். (ஆதி 24:48).

சுதந்திரவாளி அற்றுப் போகாதபடிக்கு இன்று உனக்குத் தயைசெய்த கர்த்தருக்கு ஸ்தோத்திரம் (ரூத் 4:14).

துதித்தலின் பலன்கள்

எரிகோ

யோசுவா எரிகோவுடன் யுத்தம் செய்வதற்கு வீரர்களை அழைத்துச் சென்றான். எரிகோவின் மதிலை ஆறு நாட்கள் ஒவ்வொருமுறை சுற்றிவரச் சொன்னார். ஏழாம் நாள் ஏழுமுறை சுற்றிவந்து ஆசாரியர்கள் எக்காளங்கள் ஊதி மன ஆரவாரத்தோடே கர்த்தரை ஆர்ப்பரித்தபோது அலங்கம் இடிந்து விழுந்தது. இஸ்ரவேலருக்கு வெற்றி கிடைத்தது. (யோசு 6:1-20)

கிதியோன்

கிதியோன் 300 பேரை அழைத்துக் கொண்டு மீதியானியருடன் யுத்தத்திற்குச் சென்றான். ஒவ்வொருவர் கையிலும் ஒரு எக்காளத்தையும் பானையையும் அதற்குள் வைக்கும் தீவட்டியையும் கொடுத்து நான்

செய்வதைப் பார்த்து அப்படியே நீங்களும் செய்ய வேண்டும் என்றான். அவர்களை மூன்று பிரிவாகப் பிரித்து மீதியானவர் பாளையத்தை சூழ்ந்து நிற்கும் படியும் சொன்னான். அவர்களும் அப்படியே சுற்றி நின்றார்கள். முன்னூறு பேரும் எக்காளங்களை ஊதி, பானைகளை உடைத்துத் தீவட்டிகளைத் தங்கள் இடதுகைகளிலும் ஊதும் எக்காளங்களைத் தங்கள் வலது கைகளிலும் பிடித்துக் கொண்டு கர்த்தருடைய பட்டயம், கிதியோனுடைய பட்டயம் என்று சத்தமிட்டுப் பாளையத்தைச் சுற்றிலும் அவரவர் தங்கள் நிலையிலே நின்ற போது, பாளையத்திலிருந்

தவர்கள் எல்லோரும் சிதறி கூக்குரலிட்டு ஓடிப்போனார்கள். மீதியானியர்கள் ஒருவருக்கொருவர் வெட்டி மடிந்து போனார்கள். இஸ்ரவேலருக்கு வெற்றிக் கிடைத்தது. (நியா 7:1-22).

யோசபாத்

யோசபாத்திற்கு விரோதமாக மோவாப்புத்திரரும், அம்மோன் புத்திரரும் யுத்தம் பண்ண வந்தபோது யோசபாத் பயந்து கர்த்தரைத் தேடுகிறதற்கு ஒரு முகப்பட்டு யூதாவெங்கும் உபவாசத்தைக் கூறுவித்தான். எல்லோரும் கூடிவந்தார்கள். யோசபாத் தேவனை நோக்கி விண்ணப்பம் செய்து எங்களுக்கு யுத்தம் பண்ண பெலனில்லை. எங்கள் கண்கள் உம்மையே நோக்கிக் கொண்டிருக்கிறது என்றான். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைத் துதியுங்கள். அவர் கிருபை என்றுமுள்ளது என்றுப் பாடித்துதி செய்யத் தொடங்கினதும் யூதாவுக்கு விரோதமாக வந்த மக்கள் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் எழும்பி வெட்டிக்கொண்டார்கள். யூதா ஜனத்திற்கு வெற்றி கிடைத்தது (2நாளா 20:1-22).

பவுலும் *சீலாவும்*

பவுலையும் *சீலாவும்* பிடித்து, அடித்து அவர்கள் கால்களை தொழுமரத்தில் மாட்டி உட்காவலிலே அடைத்து வைத்தார்கள். நடுராத்திரியிலே பவுலும் *சீலாவும்* ஜெபம் பண்ணி தேவனைத்துதித்துப் பாடினார்கள். காவலில் வைக்கப்பட்டவர்கள் அதைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். சடுதியிலே *சிறைச்சாலையின்* அஸ்திபாரங்கள் அசையும் படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது. எல்லாருடைய கட்டுகளும் கழன்று போயிற்று. அதன்பின் *சிறைச்சாலை* அதிகாரிகள் பவுல் பிரசங்கத்தைக் கேட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். (அப் 16:22-33).

மேற்கூறிய சம்பவங்களைப் பார்க்கும்போது இஸ்ரவேலர் எரிகோவோடு யுத்தத்திற்குப் போகும் போதும், கிதியோன் மீதியானருடன் யுத்தத்திற்குச் செல்லும்போதும், யோசபாத் அம்மோன் புத்திரருடன் யுத்தம் செய்தபோதும், தேவனைத் துதித்து ஆர்ப்பரித்துப் பாடினபோது மதில்கள் இடிந்து விழுந்தது. தேவன் அவர்களுக்காக யுத்தம் பண்ணினார். வெற்றி பெற்றார்கள் என்றும், பவுலும், சீலாவும் சிறைச்சாலையில் தொழுமரத்தில் கட்டப்பட்டு மரணத்தை எதிர்நோக்கியிருந்தபோது

இரவேளையில் தேவனைப்பாடித் துதித்தபோது கை, கால்களிலுள்ள கட்டுகள் கழன்று விழுந்தன. சிறைச்சாலைக்கதவுகள் தானாக திறவுண்டன என்றும் காண்கிறோம்.

பாடித்துதித்த சில சந்தர்ப்பங்கள்

மோசேயும் இஸ்ரவேலரும் (யாத் 15:1-19), மோசே, ஆரோனின் சகோதரி மிரியாம் (யாத் 15:20,21) மோசேயும் யோசுவாவும் (உபா 32:1-44) தெபோராளும் பாராக்கும் (நியா 5:1-21) தாவீது (2சாமு 22:1-50) ஆசாரியர்கள் (எஸ்றா 3:10-13) சாலோமோன் 1இரா 4:32 உன்ன 1:2) ஜெயம் கொண்ட பரிசுத்தவான்கள் (வெளி 15).

மேற்கண்ட வசனங்களை நாம் தியானிக்கும் போது அநேக தேவ பிள்ளைகளும், ஆசாரியர்களும் ராஜாக்களும் கூட தேவன் செய்த அற்புதங்களை தங்களை வழிநடத்தி வந்த வெற்றி சிறக்கச் செய்த தேவனைப் புகழ்ந்தும் பாடுகிறதைக் காண்கிறோம்.

யோபு

வெற்றி பெற்ற சமயங்களில் சிலர் தேவனைத் துதித்துப் பாடி நன்றி செலுத்தினார்கள். ஆனால் யோபு என்ற பக்தனைப் பார்க்கும்போது அவன் எல்லாவற்றிலும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார் என்றும் பார்க்கிறோம். யோபு தன் மிருக ஜீவன்கள் அனைத்தையும் இழந்தபோதும், தானியங்களை மற்றவர்கள் கவர்ந்து சென்ற போதிலும் 10 பிள்ளைகளும் திடீர் என்று மரித்தபோதும், சரீரத்தில் கொடிய நோயால் பாதிக்கப்பட்டு சாம்பலில் உட்கார்ந்து, ஓட்டை வைத்துச்சுரண்டிய போதிலும் கூட தேவனுக்கு விரோதமாய் முறுமுறுக்காமல் கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் எடுத்தார். கர்த்தருக்கு ஸ்தோத்திரம் என்றார். துன்பத்தின் மத்தியிலும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார்.

பரிசுத்த பவுல்

பாவத்திலிருந்தும் சாபத்திலிருந்தும் விடுதலையடைந்தபடியால் தேவனுக்கு ஸ்தோத்திரம் (ரோ 7:15). சுவிசேஷத்தை அறிவிக்கும்படி தேவன் ஏற்படுத்தினபடியால் தேவனுக்கு ஸ்தோத்திரம் (1கொரி 14:18) எல்லாரிலும் அதிகமாய் அந்நிய பாஷைகளைப் பேசுவதினால் தேவனுக்கு ஸ்தோத்திரம் (1கொரி 14:18) என்று கூறுகிறார்.

எவ்வாறு துதிக்க வேண்டும்

அவர் மகத்துவத்தைக் கூறி

தேவனுடைய மகிமையை பிரஸ்தாபப்படுத்தித் துதிக்க வேண்டும். உதாரணமாகக் கூறினால் - பிதாவாகிய தேவனே உமக்கு ஸ்தோத்திரம், குமாரனாகிய தேவனே உமக்கு ஸ்தோத்திரம், திரியேக தேவனே உமக்கு ஸ்தோத்திரம், ஆதியும் அந்தமுமானவரே உமக்கு ஸ்தோத்திரம். அப்பாவும் ஒமேகாவுமானவரே உமக்கு ஸ்தோத்திரம் ஒருவராய் பெரிய அதிசயங்களைச் செய்கிறவரே உமக்கு ஸ்தோத்திரம். எண்ணிமுடியாத அதிசயங்களைச் செய்கிற தேவனே உமக்கு ஸ்தோத்திரம், நினைப்பதற்கும் வேண்டிக் கொள்வதற்கும் அதிகமாய்க் கிரியைச் செய்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். நீதியுள்ள தேவனே உமக்கு ஸ்தோத்திரம். துதிகளின் மத்தியில் வாசம் பண்ணும் தூயாதி தூயவரே உமக்கு ஸ்தோத்திரம். அப்பா பிதாவே என்று அழைக்கும் புத்திர சுவிகாரத்தின் ஆவியைத் தந்தவரே உமக்கு ஸ்தோத்திரம். சகல ஆறுதலின் தேவனே உமக்கு ஸ்தோத்திரம், சமாதானத்தின் தேவனே உமக்கு ஸ்தோத்திரம், மகிமையின் மகத்துவத்தின் தேவனே உமக்கு ஸ்தோத்திரம், ஆபிரகாமின், ஈசாக்கின், யாக்கோபின் தேவனே உமக்கு ஸ்தோத்திரம், பரலோகத்தின் தேவனே, ஞானத்திற்குக் காரணரே உமக்கு ஸ்தோத்திரம், ஐசுவரியத்தின் தேவனே, ஜெயங்கொடுக்கிற தேவனே, என்னை பிரகாசிப்பிக்கிற தேவனே, உமக்கு ஸ்தோத்திரம் கர்த்தாதி கர்த்தனே ஸ்தோத்திரம், ஆலோசனை கர்த்தரே ஸ்தோத்திரம் பரிகாரியாகிய கர்த்தாவே ஸ்தோத்திரம் உன்னதமான கர்த்தரே ஆலோசனைக் கர்த்தரே சேனைகளின் கர்த்தரே எனக்கு துணை செய்கிற கர்த்தரே ராஜாதி ராஜாவே உமக்கு ஸ்தோத்திரம், மகிமையின் மகத்துவத்தின் ராஜாவே உமக்கு ஸ்தோத்திரம். நீதியின் ராஜாவே, யூதராஜ சிங்கமே, சமாதானத்தின் ராஜாவே உமக்கு ஸ்தோத்திரம்.

பரிசுத்த ஆவியானவரே உமக்கு ஸ்தோத்திரம், கிருபையின் ஆவியே உமக்கு ஸ்தோத்திரம், உணர்வுள்ள பெலனுள்ள, உயிர்ப்பிக்கிற, ஞானத்தின் ஆவியே, புத்திர சுவிகாரத்தின் ஆவியே, விண்ணப்பத்தின் ஆவியானவரே, எனது பெலவீனங்களில் உதவி செய்கிற பரிசுத்த ஆவியானவரே, வெள்ளம் போல சத்துரு வரும்போது அவனுக்கு விரோதமாகக் கொடியேற்றும் பரிசுத்த ஆவியானவரே உமக்கு ஸ்தோத்திரம்.

உண்மையுள்ள தேவனே ஸ்தோத்திரம், ஒப்பற்ற என் தெய்வமே, குற்றமற்றவரே, என் கோட்டையே, என் அரணே, என் துருகமே,

அனுகூலமான துணையே என் ஆத்தும நேசரே, என் ஆத்தும மணவாளனே, சாரோனின் ரோஜாவே, பள்ளத்தாக்கின் லீலிபுஷ்பமே, பதினாயிரங்களில் சிறந்தவரே, உலகின் ஒளியே, எல்லோரையும் பிரகாசிக்கச் செய்கிறவரே உமக்கு ஸ்தோத்திரம் என்று ஆயிரம், ஆயிரம் வார்த்தைகளைச் சொல்லி அவரை புகழ்ந்து கொண்டே இருக்க வேண்டும்.

அவர் செய்த அதிசயங்களைச் சொல்லி

தேவன் வேதத்தில் செய்த அற்புதங்கள், அதிசயங்களைச் சொல்லி துதிக்க வேண்டும். கானாவூர் கல்யாண வீட்டில் தண்ணீரை திராட்சரசமாக மற்றிய தேவனே ஸ்தோத்திரம், பிறவிக்குருடனுக்குக் கண்பார்வை கொடுத்தவரே உமக்கு ஸ்தோத்திரம், செவிடனைக்கேட்கச் செய்தவரே, ஊமையினை பேசச் செய்தவரே, முடவர்களை, சப்பாணிகளை நடக்கச் செய்தவரே, சூம்பினகையை மறுகையைப் போல மாறச் செய்தவரே, நாறிப்போன குஷ்டரோகியின் சரீரத்தை சிறுபிள்ளையின் சரீரத்தைப் போல மாற்றினவரே, பிசாசின் வல்லமையில் பிடிப்பட்ட லேகியோன் பிடித்த மனிதனையும் 18வருஷம் பெல வீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட கூனியை விடுதலையாக்கி நிமிர்ந்து பார்க்கச் செய்தவரே. மரித்துப்போன லாசருவையும் யவீருவின் மகளையும் நாயீனூர் விதவையின் மகனையும் உயிரோடு எழும்பிய தேவனே உமக்கு ஸ்தோத்திரம். ஸ்தோத்திரம் என்று வேதத்தில் தேவன் செய்த எல்லா அற்புதமான, வல்லமையான காரியங்களைச் சொல்லி நம் தேவனைப் புகழ்ந்து துதித்துக் கொண்டே இருக்க வேண்டும்.

நம் வாழ்க்கையில் தேவன் செய்த மகத்தான காரியங்களைச் சொல்லி

என்னை பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும், நித்திய மரணத்திலிருந்தும் இரட்சித்தவரே உமக்கு நன்றி, கோடான கோடி ஸ்தோத்திரம், என்னை எத்தனையோ விபத்துக்கள், ஆபத்துகளிலிருந்து, எத்தனையோ சோதனைகளிலிருந்து, எத்தனையோ பிசாசின் தந்திரம் - போராட்டங்களிலிருந்து, எத்தனையோ, எதிரிகளிடமிருந்து, எத்தனையோ பணக் கஷ்டங்களிலிருந்து விடுவித்துத் தேவைகளை சந்தித்து, குறைவின்றி வழி நடத்தி வருவதற்காக தேவனே உமக்கு ஸ்தோத்திரம். இவைகள் தவிர தேவன் எத்தனையோ பேருக்கில்லாத எண்ணிறந்த ஆசீர்வாதங்களை தந்திருப்பதை நினைத்து ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும். எத்தனை பேருக்குப் பார்க்க கண்ணில்லை. எத்தனை பேர் கேட்க முடியாத ஊமையர்களாயிருக்கிறார்கள், எத்தனை பேர் நடக்கமுடியாத சப்பாணிகளாய், எத்தனைப்பேர் கணவர், மனைவி

இல்லாத விதவைகளாய் எத்தனைபேர் குழந்தையில்லாத பெற்றோர்களாய், எத்தனை பேர் உற்றார், உறவினர் இல்லாத அனாதைகளைப் போல் இருக்கும்போது எத்தனை பேர் படிப்பற்றவர்களாய், படித்தும் வேலை இல்லாதவர்களாய், எத்தனைபேர் திருமணமாகாமல் இருக்கும்போது, எத்தனைபேர் உணவு இருந்தும் சாப்பிட முடியாத நோயாளிகளாயிருக்கும் போது, எத்தனை கோடிமக்கள் பஞ்சத்தில் பாதிக்கப்பட்டு ஒரு நேரத்து உணவு கிடைக்காமல் தவிர்க்கும்போது எத்தனைபேர் யுத்தத்தினால், கலவரத்தினால், வறட்சியினால், வெள்ளத்தினால், புயலினால், பூகம்பம், பூமியதிர்ச்சியினால், பாதிக்கப்பட்டு நிம்மதி இழந்து ஒவ்வொரு நாளும் வாழ்ந்துக் கொண்டிருக்கும்போது, நம் தேவன் இவைகள் எல்லாவற்றிற்கும் நீங்கலாக்கி இரட்சித்து நம்மை கண்மணிப்போல பாதுகாத்து வருவதை நினைத்து ஒவ்வொன்றாகச் சொல்லிச் சொல்லி தேவனுக்கு நன்றி, ஸ்தோத்திரம் இதயத்தின் ஆழத்திலிருந்து சொல்ல வேண்டும். துதிக்க வேண்டும்.

தேவன் படைத்ததெல்லாம் மனிதனுக்காக, அந்த மனிதனைப் படைத்தது தம்மை வணங்க, ஆராதிக்க, தொழுதுகொள்ள, மகிமைப்படுத்த. ஆகையால்தான் தேவன் மோசேயைப்பார்த்து நீ பார்வோனிடத்தில் போய் எனக்கு ஆராதனை செய்ய என் ஜனங்களைப் போக விடு என்று சொல்லச் சொல்லுகிறார். இஸ்ரவேலின் தேவன் துதிகளுக்குள் வாசமாயிருக்கிறார். ஸ்தோத்திர பலியிடுகிறவன் தேவனை மகிமைப்படுத்துகிறான் என்று வேதம் கூறுகிறது.

தேவன் தந்த வாக்குத்தத்தங்களைச் சொல்லி

என் பாவங்களையும், அக்கிரமங்களையும் மீறுதல்களையும் மன்னித்தற்காக ஸ்தோத்திரம். தேவனுடைய பிள்ளை என்று அழைக்கப்படும் பாக்கியத்தைத் தந்தவரே ஸ்தோத்திரம். எங்களை ராஜரீகமான ஆசாரியர்களாய் தெரிந்து கொண்டதற்காக ஸ்தோத்திரம். நீ என் பார்வைக்கு அருமையானபடியால் கனம் பெற்றாய். நானும் உன்னை சிநேகித்தேன் என்று சொன்ன கர்த்தாவே ஸ்தோத்திரம். ஒருவன் எனக்கு ஊழியம் செய்தால், அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார் என்றவரே ஸ்தோத்திரம். கூப்பிடுகிற எளியவையும் உதவியற்ற சிறுமையானவனையும் விடுவிக்கிறேன் என்று சொன்னவரே ஸ்தோத்திரம். உண்மையுள்ள மனுஷன் பரிபூரண ஆசீர்வாதம் பெறுவான் என்றவரே. அவர் உன் அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதிப்பேன். உன் வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன் என்று சொன்ன ஸ்தோத்திரம் நீ தேவன் நான் உன்னைப் பலப்படுத்தி உனக்குச்

சகாயம் பண்ணுவேன். என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன் என்று சொன்ன தேவனே உமக்கு ஸ்தோத்திரம். என் கிருபை உனக்குப் போதும், பல வீனத்திலே என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும், நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன், நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து, இந்ததேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப் பண்ணுவேன் என்று சொன்ன தேவனே உமக்கு ஸ்தோத்திரம். உங்களுக்காக உங்கள் சத்துருக்களோடே யுத்தம் பண்ணவும், உங்களை இரட்சிக்கவும், உங்களோடே கூடப்போகிறவர் உங்கள் தேவனாகிய கர்த்தர், உன்னைக் காக்கிறவர் உறங்குகிறதுமில்லை, தூங்குகிறதுமில்லை, உனக்காக யுத்தம் பண்ணுவேன். வழக்காடுவேன், என்னை உள்ளங்கையில் வரைந்திருக்கிறேன். எனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் ஆயுதங்களை வாய்க்காதே போகச் செய்யும் தேவனே, ஒரு வழியாய் வருகிற சத்துருவை ஏழுவழியாய் ஓடச் செய்தவரே உமக்கு ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் என்று உதடுகளின் காளை, பலியாகிய ஸ்தோத்திர பலியை செலுத்த வேண்டும். அவர் கொடுத்த வாக்குத்தத்தங்களைக் கூறி, கெஞ்சி அவருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவர் பொய்யுரையாத தேவன், வாக்குமாறாதவர்.

தேவப் பிள்ளையே நாம் ஜெபத்தை துவக்குவதற்கு முன் ஒரு முறை கூட நம் இருதயத்தை ஆராய்ந்துப் பார்த்து நாம் செய்ய உலகப் பிரகாரமான, சரீரப் பிரகாரமான, ஆவிக்குரிய அனைத்துப் பாவங்களையும் உடைந்த உள்ளத்தோடு அறிக்கை செய்துவிட்டு சுத்த இருதயத்தோடு ஜெபிக்க ஆரம்பிக்க வேண்டும். சுத்த இருதயமுள்ளவர்கள் தேவனை தரிசிப்பார்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவரும் தேவனை தரிசிக்க முடியாது. ஆகையால் நம்மை பரிசுத்தம் செய்து கொள்ள வேண்டும்.

பின் தேவன் துதிகளின் மத்தியில் வாசம் பண்ணுவதால் நாம் அவரை துதிக்க ஆரம்பிக்க வேண்டும். அப்படி அவரை துதிக்கத் துதிக்க பரிசுத்ததேவன் நமக்குள் வந்து நம்மை சந்தோஷத்தினால் நிரப்புவார். அப்போது நம் இதயம் அவருடைய இதயம் ஒன்றாக இணைகிறது. அப்படி இணையும்போது நம் ஜெபம் கேட்கப்படும். அதன் பின்பு மற்ற காரியங்களுக்காக நம் தேவைகளுக்காக ஜெபிக்க வேண்டும். ஜெபத்தின் இறுதியில் தேவனே எங்கள் ஜெபத்தைக் கேட்டதற்காய், அதற்கு பதில் கொடுத்ததற்காக உமக்கு ஸ்தோத்திரம் என்று ஸ்தோத்திரம் செலுத்தி முடிக்க வேண்டும். துதிப்பதே இன்பமும் ஏற்றதுமாயிருக்கிறது. (சங் 147:1).

என் வாழ்க்கை வரலாறு 13

நான் மலேஷியாவில் கோலாம்பூர் அருகிலுள்ள தஞ்சமாலையம் என்ற ரப்பர் எஸ்டேட்டில் 1943ம் ஆண்டு நவம்பர் மாதம் 14ம் தேதி பிறந்தேன். இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஜப்பானியர்களால் என் குடும்பம் பாதிக்கப்பட்ட படியால் என் தந்தை எங்களை இந்தியாவில் கொண்டு வந்து விட்டு மீண்டும் மலேஷியா சென்று விட்டார்கள். என்னுடைய இரண்டு அண்ணனும் இரண்டு அக்காமார்களும் மலேஷியாவிலேயே தங்கிப் படித்து, வேலைக்குச் சேர்ந்து மலேஷிய பிரஜைகளாகி விட்டார்கள். நானும் எனது மூத்த சகோதரியும் மட்டும் என் அம்மாவுடன் பாளையங்கோட்டையில் தங்கி படித்து வந்தோம். என் தந்தை ஓய்வு பெற்று சில ஆண்டுகளுக்குப் பின் இந்தியா வந்து சேர்ந்தார்கள். என் தந்தை இந்தியா வந்து சேர்ந்த நேரம் நான் S.S.L.C. முடித்திருந்தேன். அவர்கள் வயது சென்றவர்களாயிருந்த படியினால் அவர்களை கவனிக்கவும் சொத்துக்களை பராமரிக்கவும் ஒரு மகனாவது கூட இருக்க வேண்டும் என்று விரும்பி என்னை படிக்க வேண்டாம் என்று வற்புறுத்தினார்கள். நான் எந்த வருஷம் படிப்பில் தோல்வியடைகிறேனா அத்துடன் என் படிப்பை நிறுத்தி விடுங்கள் என்று என் அம்மாவிடம் கெஞ்சினேன். என் அன்புத்தாய் தங்கள் நகைகளை அடகு வைத்து என்னை பாளையங்கோட்டை தூய யோவான் கல்லூரியில் P.U.C. யில் சேர்த்தார்கள். இரண்டு மாதத்தில் என் தாய் வியாதிப்படுக்கையில் விழுந்து விட்டார்கள். என் சகோதரி சென்னையில் இரண்டாம் ஆண்டு ஆசிரியர் பயிற்சி பள்ளியில் படித்துக் கொண்டிருந்த படியினாலும் என் தாயுடன் ஆஸ்பத்திரியில் யாராவது கூட இருக்க வேண்டும் என்ற காரணத்தாலும் நாலு மாதத்தில் என் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு என் அம்மாவுடன் பல மருத்துவமனைகளுக்குச் சென்றேன். இறுதியில் நாகர்கோவில் புத்தேரி மருத்துவமனையில் அமெரிக்காவைச் சேர்ந்த Dr.நோபிள் என்பவர் என் தாயை பரிசோதித்துவிட்டு அவர்களுக்குக் கர்ப்பப்பை புற்றுநோய், எங்கு கொண்டு சென்றாலும் காப்பாற்ற முடியாது என்று சொல்லி விட்டார்கள். அதன்பின் 6மாதங்கள் எங்கள் வீட்டில் வைத்து என் அம்மாவை கவனித்து வந்தோம். ஒரு குழந்தையை பாதுகாப்பது போல் பாதுகாத்து வந்தோம். ஒரு நாள் தம்பி இன்னும் கொஞ்ச நேரத்தில்

நான் மரித்து விடுவேன் என்று சொன்னார்கள். சற்று நேரத்தில் என் பக்தி நிறைந்த அன்புத்தாயின் உயிர் உடலைவிட்டுப் பிரிந்து தேவனிடத்திற்குச் சென்றது.

தாயில்லாத உலகம் எனக்கு இருண்ட உலகமாகவே தோன்றியது. என் உள்ளம் அன்புக்காக ஏங்கியது. என் தந்தையிடம் என்னை மீண்டும் படிக்க வைக்காவிட்டால் நான் எங்கேயாவது ஓடிவிடுவேன் இல்லை வல்லநாடு ஆற்றுப் பாலத்திலிருந்து விழுந்து செத்துப்போவேன் என்று அழுதேன். என் அக்காவுக்கும் திருமணமாகி விட்டது. வீட்டில் வேலைக்கு யாருமில்லை. ஆகையால் நான் அதிகாலையில் எழுந்து சமையல் செய்துவிட்டு, வயல்களைச் சுற்றிப் பார்த்து எப்படி இருக்கிறது என்று என் தந்தையிடம் சொல்லிவிட்டு அவர்கள் பஸ்சுக்கு கொடுக்கும் காசை வாங்கிக் கொண்டு தூய சவேரியார் கல்லூரியில் மீண்டும் P.U.C. சேர்ந்துப் படித்தேன். பல பிரச்சனை, கஷ்டங்களின்மித்தும் கஷ்டப்பட்டுப் படித்தபோதிலும் P.U.C ல் தோல்வியுற்றேன். மீண்டும் செப்டம்பர் மாதம் தோல்வியடைந்த பாடங்களை எழுதி பாஸ் பண்ணி மீண்டும் தூய சவேரியார் கல்லூரியிலேயே B.A. சேர்ந்து படித்தேன். இரண்டாம் ஆண்டு தேர்வில் ஆங்கிலத்தில் தோல்வியடைந்தேன்.

மனந்திரும்புதல்

மூன்றாம் ஆண்டு படிக்கும் போது செப்டம்பர் மாதம் தோல்வியுற்ற ஆங்கிலப் பாடங்களை எழுதிவிட்டு Mr.தனசீலன், Mr.சுந்தர் (Y.M.C.A. ஊழியர்கள்) வற்புறுத்துதலின் பேரில் பண்ணவிளையில் நடைபெற்ற முதல் F.M.P.B. கிதியோனியர் முகாமுக்குச் சென்றேன். கூட்ட ஆரம்பத்திலிருந்து தேவனுக்கு என்னை அர்ப்பணிக்கும்படி பரிசுத்த ஆவியானவர் போராடிக் கொண்டிருந்தார். நான் பாவத்தை விடமுடியாத காரணத்தால் மனசாட்சியை மழுக்கிக் கொண்டிருந்தேன். இரண்டாம் நாள் கூட்ட மாலை சந்தியா நேரத்தில் Bro.P.சாமுவேல் அண்ணன் அவர்கள் பேசியபோது பரிசுத்த ஆவியானவர் என் உள்ளத்தை உடைத்தார். மனம் கசந்து கதறி அழுதேன். தேவனுக்கென்றும், அவர் பணிக்கென்றும் என்னை முற்றிலுமாய் அர்ப்பணித்தேன். பரிசுத்த ஆவியானவர் என் உள்ளத்தை சொல்லி முடியாத சந்தோஷத்தினால் நிரப்பினார். பாவத்தோடு வந்த, துக்கத்தோடு வந்த நான் மனந்திரும்பியவனாக மிகுந்த சந்தோஷத்தோடு என் கல்லூரிக்கு வந்தேன். நான் ஹாக்கி நன்றாக விளையாடுவதாலும் கல்லூரி Team ல் இருந்தபடியினாலும் என் கல்லூரி முதல்வர் Father Antonysamy என்னை மிகவும் நேசிப்பார். அவர் என்னை அழைத்து நீ இரண்டாவது முறையும் ஆங்கிலத்தில் தோல்வியடைந்து விட்டாய் என்று கூறினார்.

அதைக் கேட்டதும் என் உள்ளம் சுக்குநூறாக உடைந்தது. தேவனே உம்மை ஏற்றுக் கொண்டபோதே எனக்குத் தோல்வியா, தாயுமில்லை, மற்றவர்களின் அன்புமில்லாத நான் எங்கே போவேன் என்று கதறி அழுதேன். என் அப்பாவிடம் வந்து சொன்னபோது இரண்டுமுறை எழுதி தோல்வியுற்ற நீ எங்கே பாஸ் பண்ணப்போகிறாய், போடா என்று கூறினார். அந்த வல்லநாட்டு ஆற்றுப் பாலத்திலிருந்து விழுந்து சாக வேண்டுமென்று போனபோது என் தேவன் என் உள்ளத்தில் பேசினார். "நான் உனக்காக மரித்தேன், நீ எனக்காக என்ன செய்தாய் என்று, போ மகனே நான் உன்னோடு இருக்கிறேன்" என்றார். நான் அங்கிருந்து பாளையங்கோட்டையில் நான் தங்கியிருந்த எபன் சந்தோஷராஜ் அவர்கள் வீட்டிற்கு வந்தேன். அங்கு சாராதக்கர் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியராக இருந்த செல்வி.குளோரிதாமஸ் அவர்களும், தம்பி நீ இப்போது தேவனுடைய பிள்ளை, கவலைப்படாதே, இங்கேயே தங்கி சாப்பிட்டுக் கொள் நான் உனக்கு வேண்டிய உதவியை செய்கிறேன்" என்றார்கள். உன் தாயும், உன் தகப்பனும் உன்னை கைவிட்டாலும், நான் உன்னை சேர்த்துக் கொள்ளுவேன் என்ற தேவனுடைய வார்த்தை நிறைவேறியதைக் கண்டேன்.

என்னுடைய கல்லூரி முதல்வரிடம் சென்று Father எனக்குத் தாயுமில்லை, என் தந்தையின் போதுமான அன்பும் இல்லை. இந்த இறுதியாண்டு தேர்வு எழுதும்போது தோல்வியுற்ற நான்கு ஆங்கில பாடத்தையும் சேர்த்து எழுத அனுமதி வாங்கித்தாருங்கள் என்று கேட்டேன். அவர் சொன்னார். "நீ இந்த ஆண்டு Major பாடம் Ancellory பாடம் எழுத வேண்டியது இருக்கிறது. இப்போது இந்த ஆங்கிலம் நான்கு பாடம் ஆக மொத்தம் பத்துப் பாடங்களை இரண்டு மாதத்திற்குள் படித்து எழுதுவதும் கஷ்டம், பல்கலைக்கழகமும் அனுமதி கொடுப்பது மிக கஷ்டம்" என்று கூறினார். அதற்கு நான் Father நான் இப்பொழுது இயேசுவை என் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டேன், சினிமா பார்க்கமாட்டேன், கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றமாட்டேன். கஷ்டப்பட்டுப் படிப்பேன் எனக்கு உதவி செய்யுங்கள் என்று அழுது கெஞ்சினேன். என் தேவன் அவர் கண்களில் தயவு கிடைக்கும்படிச் செய்தார். எனக்கு மட்டும் University க்கு எழுதி அனுமதி வாங்கிக் கொடுத்தார்.

"உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாக இருந்தால் யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக் 1:5) என்ற வாக்கின்படி நான் உம்மிடத்தில் ஞானத்தை விசுவாசத்தோடு கேட்கிறேன் எனக்கு ஞானத்தைத் தாரும் என்று கெஞ்சி, அழுதுக் கேட்டேன்.

என் தாய் இறந்தபின் என் பொழுதுபோக்கு *சினிமா*, *சினிமா* கொட்டகைதான் என் தாய்வீடு என்று கூறுவேன். ஒரு படத்தை 1 முதல் 15முறைப் பார்ப்பேன். சினிமா பார்ப்பதை என்னால் நிறுத்த முடியவில்லை. மறக்க முடியவில்லை. சினிமாவை நிறுத்துவதற்காக ஞாயிற்றுக்கிழமை பாளை கதீட்ரலில் காலை ஆராதனை முடிந்ததும் கதீட்ரல் மேல்நிலைப்பள்ளியில் பத்து மணி முதல் 12மணி வரை ஓய்வுநாள் பாடசாலை எடுப்பேன். மதியம் 3மணி படத்தை மறப்பதற்காக மாலை 7-8:30 வரை கதீட்ரலில் வாலிபர் குழு நடத்துவேன். மற்ற நேரங்களும் என்னுடைய படிப்பில் கவனம் செலுத்தினேன். பரீட்சை எழுதுவதற்கு முன் தேவனே இந்த B.A. மட்டும் பிச்சையாகத் தந்தால், பாஸ் பண்ணச் செய்தால் உங்கள் முழுநேர பணிக்கே வந்து விடுவேன் என்று பொருத்தனை செய்தேன். பத்து பேப்பரும் எழுதி முடித்துவிட்டு தேவனே உம்மை நோக்கிப் பார்த்தவர்கள் முகம் பிரகாசமடைந்தது. ஒருபோதும் வெட்கப்பட்டதில்லை. இந்த ஏழைக் கூப்பிட்டான் கர்த்தர் கேட்டு அவனை எல்லா இடுக்கண்களுக்கும் நீங்கலாக்கி இரட்சித்தார். தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடிருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப் பண்ணும்படி கர்த்தருடைய கண்கள் பூமி எங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. எனக்கு இரங்கும் என்று அழுதேன். பரீட்சையின் முடிவு வெளியானது. என் தேவனுடைய சுத்த கிருபையினால், தயவினால், இரக்கத்தினால் 10 பரீட்சையிலும் தேர்ச்சியடைந்தேன். என் தேவனுக்கு கண்ணீரோடு நன்றி செலுத்தினேன்.

வாலிபர் குழு

நான் பாளையங்கோட்டை கதீட்ரலில் ஒரு வாலிபக் குழு பொறுப்பெடுத்து நடத்தினேன். அதிகமான வாலிபர்கள் பங்கு பெற்றனர். அதில் முக்கியமான 12 பேர்களில் இன்று 11பேர் முழுநேர ஊழியர்களாக, இந்தியாவிலும் உலகத்தின் பல பகுதிகளிலும் பணிபுரிகின்றனர். சேலத்தில் ஓராண்டு பணிபுரியும் போதும் C.S.I ஆலயத்தில் ஒரு வாலிபர் குழு ஆரம்பித்து நடத்தினேன். அதிலும் சிலர் முழுநேர ஊழியர்களாக பணிபுரிந்து வருகின்றனர். மகாராஜநகரில் என்னுடைய வீட்டிலும் ஒரு வாலிபர் குழு நடத்தி வந்தேன். அதிலும் பலர் இன்று ஊழியர்களாகவும், பணிபுரியும் இடங்களில் தேவனுக்கு சிறந்த சாட்சிகளாகவும் திகழ்கின்றனர்.

மீண்டும் நான் St.Xavier's Teachers Training College இல் B.Ed, M.Ed, M.A. முடித்தேன். அதன் பின்பு நான்கு ஆண்டுகள் St.John' மேல்நிலைப் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றிக் கொண்டிருக்கும்போது

என்னுடைய ஊழியப்பொறுத்தனையை நிறைவேற்றும்படி உள்ளத்தில் தேவன் உணர்த்திக் கொண்டே இருந்தார். அதற்குமேல் என்னால் வேலை செய்ய முடியவில்லை. முழுநேர ஊழியத்திற்கு வரப்போகிறேன் என்றதும், Bethel, World Vision, I.E.M மற்றும் பல ஸ்தாபனங்களிலிருந்து அழைப்பு வந்து கொண்டே இருந்தது. என்னுடைய Bishop.Rt.Rev.Daniel Abraham அவர்களும் இந்திய மிஷனெரி சங்கத்தின் பொதுச் செயலாளர் Rev.E.P.Gnanasigamani அவர்களும் இந்திய மிஷனெரி சங்கத்தில் Asst.Secretary யாக சேரும்படி அழைத்தார்கள். ஜெபித்து அர்ப்பணித்து மூன்று ஆண்டுகள் leave போட்டு விட்டு I.M.S ல் Asst.Secretary யாகச் சேர்ந்தேன். இந்தியாவில் பல மாநிலங்களில் சென்று I.M.S ஊழியங்களை எடுத்துக் கூறி வந்தேன். மறு ஆண்டு என் பணி I.M.S க்கு அவசியம் தேவைப்படுகிறது என்றும், உடனே Resign பண்ணிவிட்டு I.M.S ல் சேரும்படி Executive Committee விரும்பி கேட்டுக் கொண்டது. பின்னர் தேவசித்தமாகக் கருதி, ஜெபித்து, அர்ப்பணித்து அழைப்பை ஏற்று சேர்ந்தேன்.

Australia

Bishop Rt.Rev.Daniel Abraham அவர்கள் C.S.I Synod, Scholarship வாங்கிக் கொடுத்து Australia ல் Sydney University யுடன் சேர்ந்த United Technological College ல் ஓர் ஆண்டு Missions படிக்க அனுப்பி வைத்தார்கள். Australia வில் Sydney, Brisbane, Darwin, Alicsring, Alcohol Island போன்ற இடங்களில் தங்கிப் படிக்க தேவன் கிருபை செய்தார். அதன்பின் 10 ஆண்டுகள் I.M.S ன் வளர்ச்சிக்காக பாடுபட்டேன். நானும் அப்போதைய General Secretary Rev.Jason S Dharmarj அவர்களும் வட இந்தியாவில் பல இடங்களை ஆய்வு செய்து குஜராத், மகாராஷ்டிரா, ஒரிசா, பீகார், கர்நாடகா மற்றும் சில மாநிலங்களில் புதிய பணித்தளங்களை ஆரம்பித்தோம். இன்று இப்பணித்தளங்கள் ஆத்துமாக்களால் பூத்துக் குலுங்குவதை நான் காண்கிறேன். என் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறேன். பின்பு இரண்டு ஆண்டுகள் விஷ்வ வாணியில் Bro. எமில் ஜெபசிங் அவர்களுடன் சேர்ந்து Evangelist-At-Large ஆக ரேடியோவில் செய்தி கொடுத்துக் கொண்டு இந்தியாவின் பல இடங்களுக்குச் சென்று ஊழியத்தின் மேன்மையை சொல்லி வந்தேன். அதன்பின் பலதரப்பட்ட ஊழியங்கள், வாலிபர் ஊழியம், கல்லூரி மாணவர்கள் எழுப்புதல் கூட்டங்கள், மிஷனெரி அறை கூவல் கூட்டங்கள், கிராம ஊழியம், மருத்துவமனை ஊழியம் செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு தனிப்பட்ட ஊழியத்தை நானும் என் மனைவியும் சேர்ந்து 1987ம் ஆண்டு முதல் ஆரம்பித்தோம்.

ஊழியத்தின் நோக்கம்

ஆத்தும ஆதாயம் ஒன்றுதான் மனிதர்களை பிரியப்படுத்துவதோ, முகஸ்துதி செய்வதோ அல்ல. தேவன் கொடுத்தக் கட்டளை, பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்து, சிட்சித்துப் போதிக்கிறவன் பாக்கியவான் என்பதாகும். யோவான் ஸ்நானகன் பிசாசுகளைத் துரத்தவில்லை. வியாதிகளைக் குணமாக்கவில்லை. அற்புதங்களைச் செய்யவில்லை. ஏரோதின் பாவத்தை பகிரங்கமாகக் கண்டித்தான், அதன் விளைவு அவன் தலை துண்டிக்கப்பட்டது. ஆனால் இயேசு கிறிஸ்து யோவானைக் குறித்து எரிந்து பிரகாசிக்கிற விளக்கு என்றார். வேறு யாரைக்குறித்தும் இவ்வாறு சாட்சிக் கொடுக்கவில்லை. நறுங்குண்ட, நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களின் காயங்களைக் கட்டவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையும், கட்டப்பட்டவர்களின் கட்டுகளை அவிழ்க்கவும் துயரப்பட்ட அனைவருக்கும் ஆறுதல் கூறவும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்த தைலத்தைக் கொடுக்கவும் தேவன் என்னை அனுப்பினார் என்று ஏசாயா கூறுகின்றார். இப்படிப்பட்ட ஊழியங்களைச் செய்ய, ஆசீர்வாதத்தைப் பற்றி பேசவே தேவன் பல ஊழியர்களை ஏற்படுத்தி, பயன்படுத்தி, ஆசீர்வதித்து வருகிறார். ஒரு மனிதன் வியாதியில் இருந்து சுகம் பெற்று, நீண்ட நாட்கள் வாழ்ந்து நரகத்திற்குள் பிரவேசிப்பதைப் பார்க்கிலும் அவன் வியாதியோடு கொஞ்ச காலம் வாழ்ந்தாலும் இறுதியில் பரலோகம் சேருவதுதான் பாக்கியம். இயேசு கிறிஸ்துகூட உன் பாவம் மன்னிக்கப்பட்டது, உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்றுதான் சொன்னார். பாவ மன்னிப்புக்குத்தான் முதலிடம், இரண்டாவது சுகம், மற்ற ஆசீர்வாதங்கள்.

ஒரு கிறிஸ்தவன், தேவனை, வேத வசனத்தை, கற்பனைகளை நன்கு அறிந்தவன் ஓய்வுநாள் அன்று ஆலய ஆராதனைக்கு வராமல் துணிகரமாக வியாபாரம் செய்தால் அந்த வியாபாரம் விளங்குமா? ஆலய ஆராதனைக்கு வராமல் வயலில் போய் வேலை செய்தால், அந்த விவசாயம் விளங்குமா? ஆலய ஆராதனையை புறக்கணித்து விட்டு படித்தால் அந்த படிப்பு விளங்குமா? என்று கேட்பது தவறா? விளங்காது என்று சபிக்கவில்லை, விளங்குமா என்றுதான் கேட்கிறேன். இதனால் சத்தியத்தின்படி நடக்கிற தேவ பிள்ளைகளைத் தவிர மற்றவர்கள் யாரும் என்னை நேசிப்பதில்லை. என் ஊழியத்திற்கு உதவி செய்ய முன்வருவது மில்லை. எசேக்கியா இராஜா வியாதிப்பட்ட போது யாருக்காவது கடிதம் எழுதினானா? யாருக்காவது பணம் அனுப்பி ஜெபிக்கச் சொன்னானா? யாரிடத்திற்காவது ஜெபிக்கப் போனானா? யாரையாவது கூப்பிட்டு ஜெபித்தானா? என்று கேட்டது தவறா? இதனால்

அநேகருக்கு என் மீது வருத்தம். நம் உடைந்த உள்ளத்திற்கு, நம் கண்ணீருக்கு, நம் ஜெபத்திற்கு நிகர் ஒன்றுமில்லை. அதன் பின்பு எங்கு வேண்டுமானாலும் போய் ஜெபி, யாருக்கு வேண்டுமானாலும் காணிக்கை அனுப்பு அது தவறு இல்லை என்று சொல்வதால், உலகத்தாருக்கு என்மீது வருத்தமும், கோபமும்தான். பத்தில் ஒரு பாகம் தசம பாகம் செலுத்த வேண்டும். எல்லாவற்றிலும் காணிக்கை செலுத்த வேண்டும் என்று வேதம் சொல்லுகிறது. தசம பாகத்தையும், காணிக்கைகளையும் பண்டக சாலையில் கொண்டு வந்து வையுங்கள். அப்பொழுது தேவன் வானத்தின் பலகணிகளைத் திறந்து உன்னை இடம் கொள்ளாதவரை ஆசீர்வதிப்பார். எதிலே என்னை வஞ்சித்தீர்கள். தசம பாகத்திலும், காணிக்கையிலும் தானே. வஞ்சகரின் வாய் பருக்கைக் கற்களால் நிரப்பப்படும். வஞ்சனையாய் தேடின பொருள் குறைந்து போகும். வஞ்சனை கொல்லும் என்று வேத வசனம் சொல்கிறது. நீ தேவனுக்குக் கொடுக்காமல் சேர்த்து வைத்தால் ஒரு இருதய நோய், கிட்னி பிரச்சினை உனக்கு வந்தால் சேர்த்து வைத்ததையும், உள்ளதையும் விற்றுக் கொடுத்துவிட்டு ஒன்றுமில்லாமல் போவாய். ஆகையால் தேவனை வஞ்சிக்காமல் தசம பாகம் செலுத்து என்று சொல்வத தவறா? பின் யார் தான் இந்த சத்தியத்தை ஆணித்தரமாகக் கூறி மனிதனைப் பாவத்திலிருந்து விடுவித்து தேவனிடம் நடத்துவது? ஆசீர்வாதமான வார்த்தைகளையே விரும்பும் மக்கள் என்னை நேசிப்பதில்லை, வெறுக்கிறார்கள். உதவி செய்வதில்லை. நான் அதைப்பற்றிக் கவலைப்படுவதுமில்லை. எப்படியாவது எல்லோரும் மனந்திரும்ப வேண்டும் என்பதுதான் என் ஒரே நோக்கம்.

வெளிநாட்டு ஊழியங்கள்

தேவன் வெகுவாக என் ஊழியங்களை ஆசீர்வதிக்கத் துவங்கினார். முதல் முறையாக என் உடன்பிறந்த சகோதரர் திரு. Spencer அவர்கள் மூலம் மலேஷியா சென்று பல சபைகளில் ஊழியம் செய்தேன். பின் பலமுறை சென்றேன். பினாங்கு, பட்வொர்த், ஈப்போ, கோலாம்பூர், ஜேகூர்பார், டைப்பிஸ், கிலாஸ் பூசோங். அம்பாங் மற்றும் பல இடங்களில் Rev. சைமன் சந்திரன், Rev. ஜோசுவா, Rev. காபிரியேல் ஜெகநாதன், Rev. மனாசேமேனன், Rev. மணியன் போன்ற தேவ பிள்ளைகளின் உதவி அதிகம் கிடைத்தது.

தேவனுடைய பெரிதான கிருபையால் மதுரை திரு.செல்வராஜ் அவர்கள் உதவியால் ஸ்ரீலங்கா போக தேவன் கிருபை செய்தார். அதன்பின் பலமுறை செல்ல தேவன் கிருபை செய்தார். கொழும்பு, மருதானை, எஸ்டேட்டுகள், நூரேலியா, கண்டி, கோமாரி ஹேட்டன் எஸ்டேட்டுகள், கொல்லுப்பட்டி, மருதானை, மாதம் பிட்டியா கால்பேஸ்

நீர்கொழும்பு, கண்டி மற்றும் பல இடங்களில் ஊழியம் செய்ய தேவன் கிருபை செய்தார்.

தேவ கிருபையால் சென்னையைச் சேர்ந்த Police Asst.Commissioner Mr.Selvaraj அவர்கள் மூலம் அவருடைய Brother-in-law Mr.George ஜெபராஜ் மூலம் துபாய், அபுதாபி, பிஜிரா, அஜ்மான், ராஸ்கிமா மற்றும் பல நாடுகளில் எனது வாலிப நண்பர் Pastor ஜெயச்சந்திரன் அவர்கள் மூலம் பகிரினில் ஊழியம் செய்யவும், Mr.Samuel Jeyakumar அவர்கள் மூலம் Muscat ல் ஊழியம் செய்யவும் தேவன் கிருபை செய்தார்.

என் ஆருயிர் நண்பர் Dr.வசந்தஎட்வர்டு மூலம் அந்தமான் சென்று ஒருவாரம் அவருடைய சைலோ சபைகளிலும் அம்பேக்தார் மண்டபத்தில் நடைபெற்ற எழுப்புதல் கூட்டத்திலும் ஊழியர் கூட்டங்களிலும் பேச தேவன் கிருபை செய்தார்.

Dr.ஹாலந்து தேசத்திலுள்ள Amsterdam பட்டணத்தில் நடைபெற்ற Dr. Billygraham அவர்களால் நடத்தப்பட்ட 4000 பேருக்கு மேலாக கலந்து கொண்ட ஊழியர்கள் கூட்டத்திலும், பெல்ஜியம், பிரேசில் போன்ற நாடுகளைக் காணவும் தேவன் கிருபை செய்தார்.

இந்தோனேசியாவில் மெடான் City-ல் ஒருவாரம் தங்கியருந்து Rev நத்தானியேல் மாரியப்பன் சபைகளிலும், மலைமேல் அமைந்துள்ள Lake Toba என்ற இடத்தில் நடந்த தியான முகாமிலும் பேச தேவன் கிருபை செய்தார். Bro. Samul அவர்களின் மருமகன் Mr. சுந்தர் சொப்பியா மூலம் குவைத் நாட்டில் பல சபைகளில் பேசவும் தேவன் கிருபை செய்தார்.

இந்திய தேசத்திலும் பம்பாய், டெல்லி, கல்கத்தா, பெங்களூர், ஹைதராபாத், அகமதாபாத் பட்டணங்களிலுள்ள C.S.I., C.N.I ஆலயங்களிலும் ஓரிசா, பீகார், கேரளா, கர்நாடகா, மேற்கு வங்காளம், குஜராத், ஆந்திர மாநிலங்களிலுள்ள I.M.S, F.M.P.B. பணித்தளங்ளிலும் ஊழியம் செய்ய தேவன் கிருபை செய்தார்.

சென்னையில் 7 ஆண்டுகள் தங்கி பல தேவ ஊழியர்களுடன் சேர்ந்து பேசவும், அவர்கள் கூட்டங்களில் பேசவும், சபைகளில் பேசவும் தேவன் கிருபை செய்தார். குறிப்பாக Rev.சாம்சுந்தரம், Rev.D.மோகன், Rev .பின்னிஜோசப், Rev. பிரதாப் சிங், Rev .ஓவன் ராபர்ட், Rev. டேவிட் சுந்தரமணி, Rev. தாமஸ் தேவானந்தம், Mrs. வயலட் ஆரோன், Mrs. யாகம்மாள், Rev .விக்டர் தர்மராஜ், Rev.T.D.லாசரஸ், Rev. மார்ட்டின் ராபர்ட்ஸ், Rev. பெஞ்சமின் ஞானதுரை, Rev.தேவசித்தம்,

Rev.சாம் செல்லத்துரை மற்றும் பல A.C.A.. A.O.G., மாரநாதா, பெந்தேகோஸ்தே சபைகளிலும் தேவ செய்தி கொடுக்க தேவன் கிருபை செய்தார். பெரியார் திடலின் Bro. சாம் ஜெபத்துரை, Dr. வசந்த் எட்வர்டு, Bro.எசேக்கியா பிரான்ஸிஸ் போன்றவர்கள் நடத்திய சிறப்புக் கூட்டங்களில் பேசவும், பிஷப் மாணிக்கம் ஹால், Bible Society, Hindustan Bible College, Rev. சாம் செல்வராஜ் Bible College, மந்தைவெளி Rt.Rev.Bishop ராஜ்குமார் ஆலயத்திலும் நடைபெறும் கூட்டங்களிலும் பால் கிருபாகரன், Pastor விக்டர் தர்மராஜ், சபை ஊழியங்கள். போதகர்கள் கூட்டங்களிலும் பேச தேவன் கிருபை செய்தார்.

பாடுகளின் பாதையில் ஊழியம்

என்னுடைய 15ம் வயதில் என் அன்புத்தாய், மிக பக்தி வைராக்கியமுள்ளவர்கள். கற்பப்பை புற்று நோயினால் பாதிக்கப்பட்டு மிகவும் வேதனைப்பட்டார்கள். என்னுடைய படிப்பை இடையில் நிறுத்திவிட்டு இரண்டு ஆண்டுகள் தமிழ்நாட்டில் பல மருத்துவ மனைக்குச் சென்றோம். எல்லா மருத்துவர்களாலும் கை விடப்பட்ட நிலையில் 6 மாதங்கள் வீட்டில் வைத்து கவனித்து வந்தோம். அவர்கள் பட்ட பாடுகளும், அனுபவித்த வேதனைகளும் அவர்களுடைய மரணமும் இன்றும் நினைக்கும் போதெல்லாம் என்னைக் கண் கலங்க வைக்கின்றது. ஒரு நாள் சுகவீனத்தோடு என் அப்பாவின் அருகில் படுத்திருந்தேன். காலை 4 மணிக்கு மிகுந்த குரட்டை சத்தம் கேட்டது. விளக்கைப் போட்டுப்பார்த்த போது அவர்கள் கண்கள் நிலைக்குத்தி, வாயில் நுரை தள்ளிய வண்ணம் தன் அறிவின்றி கிடந்தார்கள். உடனே பாளை TVMC மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றோம். மருத்துவர்கள் பரிசோதித்து விட்டு, மூளையில் இரத்தக்குழாய் வெடித்துவிட்டது. 24மணி நேரத்துக்குள் மரித்து விடுவார்கள் என்று கூறினார்கள். நான் மடியில் தூக்கிவைத்து ஒரு முறையாவது கண் திறந்து பாருங்கள், ஒரு வார்த்தையாவது பேசுங்கள் என்று அழுதேன், தேவனிடம் கெஞ்சினேன். ஆனால் கண் திறந்து பார்க்காமலே, ஒருவார்த்தைக் கூட பேசாமலே இந்த உலகத்தைவிட்டுக் கடந்து சென்றுவிட்டார். தேவனிடம் கெஞ்சிக்கேட்டு வாங்கி என் அன்புமகள் பத்தாம் வகுப்பு சாராள் தக்கர் மேல் நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தாள். நன்றாகப் பாடுவாள், பேசுவாள் பள்ளி கூடைப்பந்து குழுவில் ஒருத்தி. தலைவலிக்கிறது அப்பா என்று விளையாடிவிட்டு வந்து சொன்னாள். எத்தனையோ Xray's எடுத்தோம். C.T.Scan எடுத்துப் பார்த்தோம் மதுரை மருத்துவனைக்கு இரண்டு முறை திருவனந்தபுரம் சித்திரை திருநாள் மருத்துவமனை, வேலூர் CMS மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். இறுதியில் சென்னையில் Dr. ராமமூர்த்தியிடமும் கொண்டு சென்றோம்.

[illegible]

2012ம் ஆண்டு மார்ச் 25ம் தேதி என் [illegible] ஆலயத்தில் கிறிஸ்தவ ஆராதனையில் சேர்ந்து கொடுத்து அவர்களுக்கு [illegible] கொடுத்து உற்சாகப் படுத்திவிட்டு வந்தேன். மீண்டும் 2013ம் ஆண்டு புத்தாண்டு ஆராதனையிலும் சேர்ந்து கொடுத்து [illegible] கொடுத்து உற்சாகப்படுத்தி விட்டு வந்தேன். 3ம் தேதி அதிகாலை 3 மணிக்கு என் வீட்டின் இருந்த கடையை யாரோ தீக் கொளுத்தி விட்டார்கள். அதனால் கடை எரிந்து என் வீட்டின் கீழ்பகுதியும் மாடியும் எரிந்துவிட்டது. அந்த ஊருக்கு மத்தியிலுள்ள அழகிய வீடு. அந்த ஊரிலுள்ள பெரிய வீடு இதுதான். 7 இலட்சத்திற்குமேல் நஷ்டம் தாங்க முடியாத வேதனை. இத்தனைப் பாடுகளுக்கு மத்தியிலும் தேவன் எங்களைத் திடப்படுத்தி, சோர்ந்து போகாமல் உற்சாகப்படுத்தி பயன்படுத்தி வருகிறார்.

குடும்பம்

என் மனைவி செந்தூர்கனி செல்வின் அவர்கள் சாயர்புரம் அருகிலுள்ள சோலைகாரன் மடம் என்ற கிராமத்திலுள்ள ஒரு வைராக்கியம் நிறைந்த இந்துக் குடும்பத்தில் திரு. இராஜமாணிக்கம் அவர்களுக்கும் செல்லத்தாய் அம்மாளுக்கும் 6வது மகளாக பிறந்தார்கள். பெற்றோர்கள் முப்பந்தல் இசக்கி, முனிசாமி திருச்செந்தூர் முருகனை வழிபட்டு வந்ததால் செந்தூர்கனி என்று பெயர் வைக்கப்பட்டது.

இவர்கள் சாயர்புரம் St. மேரீஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் படிக்கும்போது அவர்களுடைய தலைமை ஆசிரியை மகள் கொடுத்த கிழிந்த வேதாகமத்தைப் படித்ததின் மூலமாகவும், பள்ளிக் கூடத்தில் கற்றுக் கொடுத்த வேத பாடத்தின் மூலமாகவும், இயேசுக் கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக் கொண்டு பின் மதுரை இராஜாஜி அரசு மருத்துவ மனையில் நர்சிங் கோர்ஸ் படிக்கும்போது ஞானஸ்நானம் பெற்று நர்சுகளுக்கு நடைபெற்ற ஜெபக்குழுவை பொறுப்பேற்று நடத்தியவர்கள். 1966ம் ஆண்டு படிக்கை முடித்து திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் பாளையங்கோட்டை சித்தா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் பல ஆண்டுகள் பணிபுரிந்து, தேவனுக்கு சாட்சியாக வாழ்ந்து அநேக நர்சுகளை, நோய்களிலும் பிசாசின் போராட்டங்களிலிருந்தவர்களை தேவனிடம் வழிநடத்தியும் விடுதலை பெற வழி காட்டி, ஓய்வு எடுக்கும் வயதுக்கு முன்பே வேலையை இராஜினாமா செய்து விட்டு என்னோடு சேர்ந்து ஊழியம் செய்து வருகிறார்கள். வேதத்தை கருத்தாக 68 முறைப் படித்தவர்கள். சத்தியத்தை அனுபவத்தோடு போதிக்கும் ஆற்றல் பெற்றவர்கள் பல புதிய செய்திகளை எழுதி தினத் தூது, மற்றும் பல தேவ ஊழியர்கள் நடத்தும் பத்திரிக்கைகளுக்கு எழுதி அனுப்பிக் கொண்டே இருப்பார்கள். குறிப்பாகச் சொல்லப்போனால் ஒரு சிறந்த குடும்பப் பெண், ஜெப வீரர்களை என்னுடைய மூத்த மகன் Dr. S. ஸ்டான்லி சென்னையிலுள்ள என்ஜினியரிங் கல்லூரியில் உதவிபேராசிரியராக பணியாற்றி கொண்டு வருகிறார். அவருடைய மனைவி திருமதி ஏஞ்சல் ஒரு B.Sc. B.L. பட்டதாரி, இவர்களுக்கு என்று பிரபு, ஆல்பி என்ற இரண்டு மகன்கள் உண்டு. சின்ன மகன் சார்லஸ் பின்னி M.L.M.M.A. Psychology, hotel Management முடித்துவிட்டு மகராஜநகரில் ஒரு Restaurant வைத்து நடத்திக் கொண்டிருக்கிறார். அவருடைய மனைவியும் ஒரு Physics, Post Graduate இவர்களுக்கு கேரின்ரீஸ், ஜவா என்று இரண்டு பெண் குழந்தைகள் இருக்கிறது. இருமகன்களும் சிறந்த Musicians. இரு குடும்பமும் கிறிஸ்துவுக்குள் வளர பலப்பட சாட்சியாக வாழ, தேவ ஊழியம் செய்ய ஜெபித்துக் கொள்ளுங்கள்.

ஆலயங்கள்

என் சொந்த ஊர் பக்கப்பட்டியில் எங்கள் குடும்பம் ஒன்றுதான் கிறிஸ்தவ குடும்பம். பல தேவ ஊழியர்களை அழைத்துச் சென்று ஊழியம் செய்ததின் பலனாகவும் கிராமத்துப்பிள்ளைகளை பள்ளிக்கூடங்கள் கல்லூரிகளில் சேர்ப்பதின் மூலம் நோயுற்ற மக்களை மருத்துவ மனையில் சேர்ப்பதின் மூலம் அந்த மக்களின் அன்பைப் பெற்று, அவர்களை ஆலயத்துக்கு வரவழைத்து ஞானஸ்நானம் கொடுத்து

பின் பாளையங்கோட்டை பெண்கள் ஐக்கிய சங்கத்தின் மூலம் ஒரு நிலம் வாங்கி, நானும் ஒரு இடம் வாங்கிக் கொடுத்து அதில் ஒரு ஆலயம் கட்டி ஆராதிக்க ஆரம்பித்தோம். நானும் எங்களுக்குச் சொந்தமான ஒரு தோட்டத்தை விற்று இவ்வாலயத்திற்கு ஆஸ்பெஸ்டாஸ் சீட் கூரைப் போட்டு முன்னால் ஒரு மேடையும் கட்டினேன். என்னுடைய வயலை விற்றும் என் அண்ணன் ஸ்பென்சர் அவர்களிடம் 20 ஆயிரம் ரூபாய் வாங்கியும் எங்கள் காலத்திற்குப் பின்பு ஆலயத்தைப் பராமரிக்க 60ஆயிரம் State Bank ல் போட்டு வைத்திருக்கிறேன். இப்பபொழுது 30ம் மேற்ப்பட்ட கிறிஸ்தவ குடும்பத்தினர் இருக்கின்றனர்.

பாளையங்கோட்டை மகாராஜ நகர் வீட்டு வசதி வாரிய காலனியில் நான் திருமணமாகி வசித்து வந்தபோது 1969 ம் ஆண்டு அக்காலனியில் வாழும் கிறிஸ்தவ பிள்ளைகளுக்கு அன்று பாளையங்கோட்டையில் P.A. to the collector ஆக இருந்த திரு. G.J எட்வின் B.A.B.L அவர்களும் அவர்களது, துணைவியார் திருமதி செலினா எட்வின் அவர்களும் ஓய்வு நாள் பாடசாலை நடத்தினார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து நடத்தினேன். பின் இங்குள்ள கிறிஸ்தவர்கள் ஞாயிறு ஆராதனைக்கு பல மைல் தூரம் செல்ல வேண்டிய திருப்பதால் வீட்டில் ஒரு ஜெபக் கூட்டம் ஞாயிறு மாலை தோறும் நடத்தினோம். பின் Rest House யை வாடகைக்கு எடுத்து மாலை 7 மணிக்கு ஆராதனை நடத்தினேன். சில இந்து சகோதரர்கள் பிரச்சனைக்கு வந்த படியினால் அதன் பின்புரத்திலுள்ள கேர்னல் தியாகராஜா பிள்ளை அவர்கள் வீட்டில் கூட்டம், நடத்தினோம். பின்பு அவர்கள் அதை விற்பனை செய்தபோது நாங்கள் இரவோடு இரவாக இப்போது ஆலயம் இருக்கும் இடத்தில் ஒரு சிறு கூரைவேய்ந்த ஆலயம் கட்டினோம். ஆதன் பின்பு திரு.ஜெசுதாசன், திரு. ஆல்பட், திரு. பிச்சைமணி, திரு.ஜோதிலிங்கம், திரு.ஜெயராஜ், திரு.தேவ இரக்கம், திரு.ஆன்ருஸ் ஜெயசீலன், திரு.இப்ரீம் இவர்களின் அயராத உழைப்பால் இன்றைய ஆலயம் எழும்பியுள்ளது.

என் அன்பு மகன் ஐடா மரித்தப்பின் அவள் நகைகளை விற்று தர்மப்புரியில் F.M.P.B பணித்தளத்தில் இரண்டுர் என்ற இடத்தில் ஒரு ஆலயம் கட்டி, அதில் பணிபுரியும் ஊழியருக்கு மாதம் 3000ரு கொடுத்துத் தாங்கி வருகிறோம். இந்திய மிஷனெரி சங்கத்தில் ஒரு ஆதிவாசி மாணவனை படிக்க வைக்க மாதம் ரூ.400ம் கொடுத்து வருகிறேன். எனக்குச் சொந்தமான ஒரு சிறு வீட்டை விற்று அதில் கிடைத்த பணத்தைக் கொண்டு மேற்கு வங்காளத்தில் பங்களாதேஷ் எல்கை பக்கம் I.M.S. பணித்தளத்தில் ஒரு ஆலயமும் G.E.M.S பீகாரில் ஒரு ஆலயம் கட்டவும் தென்காசி அருகில் சின்னமாடான் குடியிருப்பில் ஒரு ஆலயம் கட்டவும் பணம் கொடுத்திருக்கிறேன்.

ஒரிசாவில் ஒரு ஆலயம், ஆந்திராவில் ஒரு ஆலயமும் விஷ்வவாணி பணித்தளத்தில் ஆலயம் கட்டிக் கொடுத்துள்ளோம். இன்னும் கொஞ்சம் பணம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இவ்வாலயங்கள் கட்டி முடிக்கப்பட தயவு செய்து ஜெபித்துக் கொள்ளுங்கள். வீடு நிலங்களளை நாம் விட்டுச் சென்றால் நமக்கு பின் வரும் சந்ததியினர் விற்றுவிட்டு வேறு இடம் சென்று விடலாம், சிலவேளை அழித்தும் விடலாம். பல ஆயிரம் செலவு செய்து கல்லறை கட்டினாலும் இயேசுவின் வருகையில் கல்லரை இரண்டாக பிழந்து விடும். ஆனால் நாம் ஒரு ஆலயம் கட்டினால் ஆண்டாண்டு காலமாய் நம் தேவனை மகிமைப்படுத்திக் கொண்டு, ஆணிரமாயிரம் மக்கள் கூடி ஆராதிக்க பயனுள்ளதாக இருக்கும். எல்லா ஆலயங்களையும் என் சொந்த வீடு, நிலங்கள் விற்றுதான் கட்டியிருக்கிறேனே தவிர யாருடைய பணத்திலும் கட்டவில்லை. இன்னும் தேவன் வசதியை கொடுத்தால் தேவநாம மகிமைக்கொன்று ஆலயம் கட்டிக் கொண்டே இருப்பேன்.

எங்கள் வாஞ்சை

ஊழியத்தின் பாதையில் வீட்டிற்கு வரும் ஊழியர்களுக்கும் ஏழை மக்களுக்கும் இல்லை என்று சொல்லாது கொடுக்க வேண்டும், கொடுக்க முடியாத நிலைவந்தால் தேவனுடைய இராஜ்யம் போய் சேர வேண்டும் என்பதும் ஊழியத்தின் பாதையில் யாருடைய வீட்டிற்கு பணத்திற்காக போகவோ, ஆலயங்களில் பணத்தைப் பற்றி பேசவோ, தேவைகளைச் சந்திக்க உதவிசெய்யுங்கள் என்று கேட்கவோ, சுவிசேஷத்தை விலைபேசி விற்கவோ, பாடுகளையும் கஷ்டங்களையும் கூறி மக்களின் அனுதாபவத்தை பெறவோ மக்களின் எண்ணிக்கையை அறிந்து கூட்டங்களை ஓப்புக் கொள்வதே வாழ்க்கையின் இறுதிக் கொள்வதே வாழ்க்கையின் இறுதிவரையில் இருக்ககூடாது என்பதுதான் என் வாழ்க்கையின் குறிக்கோள்.

பணத்திற்காக என் மனம் வேதனைப்படாதபடி என்னைக் காத்துக் கொள்ளும் என்றுதான் என் தேவனிடம் கெஞ்சுவேன். பணம் சம்பாதிக்க வேண்டும். புகழ் சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குக் கொஞ்சமும் கிடையாது. எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடம் அதிகம் கேட்கப்படும் என்பது எனக்கு நன்றாகத்தெரியும் உண்மை சத்தியத்தை விரும்புகிற ஒரு சில தேவப் பிள்ளைகள் அவ்வப்போது செய்கிற உதவி தான் என் ஊழியத்தைத் தாங்குகிறது. போதிய பண உதவி இல்லாதக் காரணத்தால் எனக்கு என்று ஒரு குழு, காரியாலயம், உதவி ஊழியர் கிடையாது. பத்திரிக்கையும்

தொடர்ந்து வெளியிட வசதி இல்லை. நானும் [illegible] எல்லா வேலைகளையும் செய்கிறோம். [illegible] நானும் என் [illegible] [illegible] நானும், என் [illegible] [illegible] எண்ணிறந்த ஆத்துமாக்களோடு [illegible] வேண்டும் என்பதே. இவ்வூழியம் [illegible] தயவு செய்து இதை விடாது ஜெபித்துக் கொள்ளுங்கள்.

* * *

உங்கள் கவனத்திற்கு

இந்தப் புத்தகத்திலிருந்து வரும் வருமானம் மருத்துவமனை நோயாளிகள் மத்தியில் நடைபெறும் ஊழியத்திற்கும், மிஷனரி ஊழியத்திற்கும் பயன்படுத்தப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

S.Selwyn Siromani,

14, IIIrd Cross st, Sivanthipatti Road,
Maharajanagar,
Tirunelveli – 627 011.
Tamilnadu-South India.
Ph: 0462-2581295, Cell:9443808420

எமது இதர வெளியீடுகள்

1. வேஷம் ஒரு நாள் கலையாதோ?
2. இன்றைய உலகில் இதுவும் பாவமா?
3. கர்த்தர் வீட்டைக் கட்டாராகில் (குடும்பங்கள்)
4. விடுதலை - பாவம், சாபம், பில்லி சூனியம்
5. ஜெபம்! ஜெபம்! ஜெபம்!
6. நித்திய சமாதானம் - மாதாந்தர பத்திரிக்கை

கைப் பிரதிகள்

- உல்லாச உலகம்
- உன் வாழ்வில் அற்புதம் நடைபெற வேண்டுமா?
- வியாதியைக் கண்டு பயப்படாதே
- விடுதலை
- மது அருந்துவது தவறா?
- ஜெபம் பண்ண வேண்டிய விதமாவது?

ஒலி நாடாக்கள்

குடும்பங்கள்
புது வாழ்வு
சிநேகம் (பாடல்)
வல்லமையின் தேவன்
நான் உன்னை மறப்பதில்லை
இரண்டாம் வருகை
ஆசீர்வாதத்தின் வழிகள்
ஆராதனைப் பாடல்கள்
மிஷனெரிச்செய்தி
எனக்கு ஒத்தாசை வரும் பர்வதம்

Diocesan Offset Press, Palay.2573182